கர்த்தருக்குள் ஆனந்த மகிழ்ச்சி

சகோ. பக்த சிங்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்த்தருக்குள்
ஆனந்த மகிழ்ச்சி

சகோ. பக்தசிங்
யேகோவா ஷம்மா
19, ரிதர்டன் ரோடு,
வேப்பேரி : : சென்னை-7

The Joy of the Lord

Published by:

Bro. Bakht Singh,

"JEHOVAH - SHAMMAH"

19, Ritherdon Road, Vepery, Madras-7.

Maniam Press, Aminjikarai, Madras-29.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பெலனுள்ள மகிழ்ச்சி	... 1
2.	சுயாதீனமுள்ள மகிழ்ச்சி	... 14
3.	பெருக்கமுள்ள மகிழ்ச்சி	... 25
4.	கற்பதிலுள்ள மகிழ்ச்சி	... 37
5.	ஈவதிலுள்ள மகிழ்ச்சி	... 51
6.	ஐக்கியத்திலுள்ள மகிழ்ச்சி	... 67
7.	நிலையாயுள்ள மகிழ்ச்சி	... 78

1

பெலனுள்ள மகிழ்ச்சி

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்
(நெகேமியா: 8 : 10)

தேவன் அருளும் சந்தோஷம் அவருடைய பிள்ளைகள் யாவருக்கும் உரியது. தேவனுடைய வசனம் தினந்தோறும் தங்கள் இருதயங்களில் புகுந்து, தங்களது வாழ்க்கையில் கிரியை செய்வதற்கு யார் யார் இடமளித்து, அதிலிருந்து தேவன் ஈவாகக் கொடுப்பதையெல்லாம் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனரோ, அவர்கள் எல்லாரும் இந்தச் சந்தோஷத்தை இலவசமாய் அனுபவிக்கலாம். தங்களுடைய மீறுதல்களினாலும், அக்கிரமங்களினாலும், கலகங்களினாலும் தேவனுடை வசனத்திற்குக்கீழ்ப்படியாமற்போனதினால், எழுபது ஆண்டுகள் இஸ்ரவேலர் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்தார்கள். இந்த இஸ்ரவேல் மக்கள் ஒரே சிந்தையோடும், ஒரே மனத்தோடும், கருத்துவேற்றுமையின்றி தேவனுடைய வசனத்தை மறுபடியும் நவமான செய்தியாகக் கேட்கும்படியாகக் கூடி வந்தார்களென்று நெகேமியா 8ஆம் அதிகாரத்திலே காண்கின்றோம். கர்த்தரின் ஊழியக்காரர் தேவ வசனத்தை விளக்கித் தெளிவு படுத்தினபோது, அவர்களுடைய இருதயங்களெல்லாம் மகிழ்ச்சியால் நிரம்பின என்றும், அங்கு ''மிகுந்த சந்தோஷமுண்டாயிருந்தது'' என்றும் (8: 17இல்) பார்க்கிறோம்.

நமது முரட்டாட்டம், குருட்டுத்தனம், மதியீனம் முதலானவற்றால், நமது கடந்தகால வாழ்க்கையும் கனியற்ற

தும் வறண்டதும், தோல்விகள் நிறைந்ததாகவுமிருக்கலாம். என்ருலும் அவையெல்லாவற்றையும் கர்த்தர் மன்னித்து நம்மைத் தம்மிடமாய் மறுபடியும் சேர்த்துக்கொள்ளவும், நமக்குப் பெரிதும், புதிதுமான மகிழ்ச்சியை அளிக்கவும் ஆண்டவர் ஆர்வமுள்ளவராயிருக்கிருர். இதுவே கர்த்தருக்குள் ஆனந்த மகிழ்ச்சியாயிருப்பதாகும். நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவண்டை வந்த விநாடிமுதல் இது ஆரம்பித்து விடுகிறது! நாம் அவரோடு அடியெடுத்து அவருடன்நடக்கும் போது இந்த சந்தோஷம் இன்னும் பெருகுகிறது.

இந்த மகிழ்ச்சிக்கு ஏழு காரணங்கள் இருக்கின்றன என்பதை திருமறையிலிருந்தே நாம் பார்ப்போம். அதையடுத்து அதை அநுபவிப்பது எவ்வாறு என்றும், அது எப்படிப் பெருகி வளருகிறது என்றும், அது நாள் செல்லச்செல்ல நமக்குள்ளே மென்மேலும் ஆழமாகவும், அகலமாகவும், செழிப்பாகவும் தூய்மையுள்ளதாகவும் அதிகரிக்கிறதென்றும் காணலாம்.

''பின்பு அந்த எழுபது பேரும் சந்தோஷத்தோடே திரும்பி வந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினுலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்ருர்கள்..ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக்கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப் படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்'' (லூக்கா 10: 17, 20).

மனிதர் அற்புதங்களைக்காண ஆசிக்கின்றனர். அற்புதங்கள் மனிதரது கவனத்தை உடனடியாகக் கவர்ந்து கொள்கின்றன. அவை உள்ளக்கிளர்ச்சியை எழுப்பி விடுகின்றன, நம்மில் யார்தான் ஓர் அற்புதத்தைக்காண விரும்ப மாட்டோம்? அல்லது நாமே ஓர் அற்புதம் செய்வதை ஆசிக்க மாட்டோம்? ஆகிலும், மெய்யான சந்தோஷத்தின் ஆதாரம் அற்புதத்தைப் பார்ப்பதோ அதைச் செய்வதோ அல்ல! நம்முடைய பெயர்களைக் கர்த்தர் பரலோகத்தில் எழுதி வைத்திருக்கிருர் என்பதுவே உண்மையான சந்தோஷத்திற்கு அடித்தளமாகும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிருர்:

நித்திய ஜீவனைப்பற்றிய நிச்சயம்தான் நித்திய மகிழ்ச்சிக்கு ஆதாரம். இந்த சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தை இந்த உலகம் ஒருக்காலும் நமக்குக் கொடுக்கவும் முடியாது, அதை ஒருவரும் நம்மிலிருந்து எடுக்கவும் முடியாது. இதுதான் உண்மையான சந்தோஷத்தின் ஆரம்பம். இதனை வியாதி, தரித்திரம் அல்லது உபத்திரவம் எதுவும் எவ்வகையிலும் பாதிக்காது.

உம்முடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? கர்த்தராகிய இயேசு தம்முடைய காயப்பட்ட கரங்கொண்டு உம்முடைய பெயரையும் தம்முடைய புஸ்தகத்தில் எழுதியுள்ளாரா? உம்முடைய பாவங்களினின்றும் மனந்திரும்புவீராக. அவருடைய ரத்தத்தினால் நீர் கழுவப்பட வேண்டும். அவருடைய நீதியின் ஆடையை நீர் அணிந்து கொள்ள மாட்டீரா? அப்பொழுது மட்டுந்தான் உம்முடைய பெயர் அதில் எழுதப்படும்.

"அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசாயா 61:10); இந்த வஸ்திரங்களை நாம் உடுத்திக்கொள்ளும்போது பரிபூரண சந்தோஷமுண்டாகிறது. அவைகள் நமது ஆவிக்குரிய நிர்வாணத்தை மறைப்பதுடன், பரலோக அழகையும் நமக்குத் தந்து, பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவனின் முன்னிலையில் நம்மைத் தைரியமாக நிற்கச் செய்கின்றன. ஜீவனுள்ள தேவனை எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், நாம் அணுகுவதற்கும், அழைப்பதற்கும் நமக்குத் தைரியத்தையும், சுயாதீனத்தையும் அளிக்கின்றன. அவை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியும், ஜீவனுமேயன்றி வேறல்ல. நாம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, அவருடைய ஜீவன் நம்முடைய ஆவிகளை மூடிமறைத்து அலங்கரிக்கின்றது. உலகப்பிரகாரமான பொருட்களையும், மகிமையையும் அடைவதிலுள்ள இன்பத்தைப்பார்க்கிலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே உடுத்துவிக்கப்பட்டு, அலங்கரிக்கப்

பட்ட நிச்சயத்தையுடையவர்களாயிருக்கும்போது நாம் மிகுதியான சந்தோஷத்தைப் பெறுகிறோம். "நீங்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலாத்தியர் 3: 27).

இந்த சந்தோஷம் உங்கள் இருதயங்களில் குடிகொண்டிருக்கிறதா? அது தினந்தோறும் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்கிறதா? உங்களுடைய அயலகத்தார், இந்த சந்தோஷத்தினால் உங்கள் முகங்கள் பிரகாசிக்கிறதைப் பார்க்க முடிகிறதா! உங்கள் பெயர்கள் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் இருக்கின்றனவா என்பதைத் தாமதம் எதுவுமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

"உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமுமுண்டு" (சங்கீதம் 16 : 11).

நாம் தேவனுடைய சமூகத்தில் வாழும்போது நம்முடைய சந்தோஷம் பெருகுகிறது. அங்கு மாத்திரமே பரிபூரண சந்தோஷம் காணப்படும். அநேக விசுவாசிகள் தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதையும், தங்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதையும் சாட்சியாக அறிவிக்கக்கூடும்! ஆனாலும் அவர்கள் இடைவிடாது கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து, அவருடைய சமூகத்தில் வாழும் நிச்சயத்தை உடையவர்களாயில்லை. ஒருவேளை கர்த்தருடைய பிள்ளைகளோடு ஒருமித்து வாழவும், உழைக்கவும், ஆராதனை செய்யவும் முடியும்! அப்படியிருந்தாலும் ஆண்டவரோடு நெருங்கிய தொடர்பு இல்லாதவராக இருக்கவும் முடியும். நாம் ஒரு ஜெப ஐக்கியத்தில் பங்குகொள்கின்ற வேளையிலேயே கர்த்தருடைய சமூகத்தை உணர முடியாதவர்களாகவும், அவரோடுள்ள தொடர்பையும், ஐக்கியத்தையும் இழந்தவர்களாகவும் இருப்பது சாத்தியமாகும்.

தேவ சமூகத்தை உணராவிடில் பூரண சந்தோஷம் இருக்கமுடியாது. இதற்குப் பல காரணங்கள் இருந்தபோதி

றும், உம்முடைய தவறே முக்கியமானதாயிருக்கலாம். நீர் கர்த்தரின் பிள்ளையாயிருந்து, உம்முடைய இருதயமும், மனசாட்சியும் கர்த்தரின் பார்வையில் செம்மையாயிருந்தால், நீர் அவருடைய பிரசன்னத்தை எப்பொழுதும் அநுபவிக்கலாம். அன்பும், இரக்கமும், தயவுமுள்ள தேவனின் சமுகத்தை நீங்கள் எப்பொழுதும் உணர்ந்து அநுபவிக்க வேண்டுமென்பதே எங்களுடைய விண்ணப்பமும் வேண்டுதலுமாகும். இதுவே தேவன் தம்முடைய ஜனத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கமும், தீர்மானமுமாகும்.

“கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்” (சங்கீதம். 37 : 4).

நாம் புதிதாக அல்லது மறுபடியும் பிறந்தபோது பெற்ற மகிழ்ச்சியானது, கர்த்தருடைய சமுகத்தை உணரும்போது அதிகரித்து, நாம் கர்த்தரில் பூரித்திருக்கும்போது அந்த மகிழ்ச்சி மேலும் பெருகி வளர்ந்து உறுதிப்படுகிறது. நாம் உண்பதிலும், உடுப்பதிலும், உத்தியோக உயர்விலும், உரையாடுவதிலும் அக்கறை செலுத்தாமல், அல்லது வேதாகம அறிவில் தேர்ச்சி பெறுவதைக்கூட பெரிதென எண்ணாமல், கர்த்தரிலேயே மனமகிழ்ச்சியாயிருக்கும்போது, இந்த கர்த்தரின் மனமகிழ்ச்சி நம்மில் பெருக்கெடுத்து ஓடுகிறது. அது நம்மில் ஸ்திரப்படுகிறது. இதர காரியங்களெல்லாம் நமக்குக் கொடுக்கக்கூடிய இன்பத்தைவிட, கர்த்தரில் நாம் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது நமக்குக் கிடைக்கும் சந்தோஷம் மிகுதியாயிருக்கிறது.

மலைச்சிகரங்களின் அழகை அறிந்தவர்கள் அதைக்கண்டு ரசிப்பதற்கென அதிகப்பணமும், நேரமும் செலவழித்தும் பெருமுயற்சி எடுக்கின்றனர். எடுத்துக்காட்டாக, எவரெஸ்ட் சிகரத்தைப் பார்ப்பதற்கென உலகின் நாலுப் பகுதிகளிலிருந்தும் ரசிகர்கள் வருகின்றனர். மிகுந்த செலவு மட்டுமின்றி, எத்தகைய சிரமமும் பாராமல், ஒரு சில நிமிடங்களுக்கு வெ

ரெஸ்ட் சிகரத்தின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுகளிப்பதற்கென, ஒரு மலைமீது ஏறிநின்று நெடுநேரம் பொறுமையுடன் காத்திருக்கின்றனர். பல கஷ்டங்களையும், சந்தோஷத்துடன் சகிக்கின்றனர். பொதுவாக இந்தச் சிகரம் மேகங்களாலும், பனியாலும் மூடப்பட்டிருப்பதால், பற்பல அசௌகரியங்கள் மத்தியில் பலமணிநேரம் காத்திருந்த பிறகு காற்றடித்து அந்த மேகம் அல்லது பனிமண்டலம் சற்று நீங்கும் போது கதிரவனின் ஒளி அந்தச் சிகரத்தின் மீதுபடும் எழில் மிகுந்த காட்சியைக் காண்பர். சில நிமிடங்கள் இக்காட்சியைக் கண்டபிறகு, மறுபடியும் பனிவந்து மறைத்துக் கொள்ளும்; அத்துடன் திரும்பிவிடுவர். அவர்கள் அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ, அல்லது ஆப்பிரிக்காவிலோ உள்ள தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றபிறகு, தங்கள் நண்பர்களையெல்லாம் கூட்டிவைத்துத் தாங்கள் அரும்பாடுபட்டு தரிசித்து வந்த அரியகாட்சியை வருணித்துக் கூறுவர்.

ஒரு சில நிமிடங்கள் மட்டுமே தாங்கள் கண்ட அந்த சுந்தரக்காட்சி அவர்களுக்கு அவ்வளவு இன்பத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது! ஆனல், நம்முடைய ஆண்டவரோ முற்றிலும் அழகானவர், எல்லோரிலும் முதன்மையானவர், பதினாயிரம் பேரிலும் சிறந்தவர் அல்லவா! அவருடைய மகிமை மங்குவதில்லை. எனவே, அவரது அழகையும், மகிமையையும் தரிசிக்க நாம் மென்மேலும் ஆசிப்போமாக.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயர்ந்த ஒரு மலைமீதிருக்கும்போது, மறுரூபமானதை யோவான் தரிசித்தான் என்று மத்தேயு சுவிசேஷம் 17-ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அது மிகவும் அற்புதமான ஓர் அநுபவம். ஆனல், அதே யோவான் அப்போஸ்தலன் தன்னுடைய முதிர் வயதில் அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அவருடைய உயிர்த்தெழுதலின் மகிமையிலே தரிசிக்கும்போது, அவரை மேலும் சிறந்தவராகவும் மேன்மையும் மகிமையுமுள்ளவராக

வும் காண்கிறான் என்று வெளிப்படுத்தின விசேஷம் முதலாவது அதிகாரத்தில் பார்க்கிறோம். இதுவே நம்முடைய விருப்பமும் அவாவாகவும் இருக்க வேண்டும். அவர் கொடுக்கும் பொருள்களில் அல்ல, அவர் நிமித்தமாகவே, அவரிலேயே, நாம் மகிழ வேண்டும். அவர் நமக்குச் சரீர சுகம் கொடுப்பதிலோ, ஜெபத்திற்கு விடையளிப்பதிலோ அல்ல, நம்முடைய ஆனந்தமெல்லாம் அவரைக் காண்பதிலேயேயிருக்க வேண்டும். அவருடைய மகிமையை நாம் கண்டு, அவரது அழகிய முகத்தை நாம் தரிசிப்பதினால் நம்முடைய இருதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்ப வேண்டும்.

"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" *(சங்கீதம். 40 : 8).*

இவ்விதமாக நமது சந்தோஷம் தூய்மையாக்கப்படுகிறது. நாம் முதலாவது கர்த்தரை அறிந்தபொழுது, எவ்வாறு கர்த்தருடைய சித்தத்தையறிவது என்று தெரியவில்லை; அவரது சத்தத்தைக் கேட்பது எப்படியென்றும் புரியவில்லை; எங்கு எவ்வாறு அவர் கிரியை செய்கிறார் என்பதை அறிந்துணர்ந்துகொள்ளவும் முடியாதவர்களாயிருந்தோம்! ஆனால், அவருடன் நடக்கவும், அவருடன் அதிகமதிகமாக நெருங்கி ஜீவிக்கவும் ஆரம்பித்தவுடன், நாம் அவருடைய உடன் வேலையாட்களாயிருக்கிறோம் என்பதைக் கண்டு கொள்ளுகிறோம் *(11 கொரி. 6 : 1).* சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போதும், பரிசுத்த வேதம் போதிக்கப்படும்போதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் உயர்த்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய ஊழியம் வளர்ச்சியடைவதைக்காணும்போதும், நம்முடைய இருதயங்கள் மகிழ்ந்து களிகூருகின்றன; சந்தோஷத்தால் ஆர்ப்பரிக்கிறோம். சிறந்த வீடு, உயர்ந்த உணவு, படாடோபமான உடை நடை, நல்ல நண்பர்கள் போன்ற பற்பலவிதமான இம்மைக்குரிய நல்ல காரியங்களைவிட இதிலேயே நாம் அதிக மகிழ்ச்சி அடைகிறோம்.

கர்த்தரே நம்முடைய மனமகிழ்ச்சியாயிருக்கும்போது அவருடைய நாமம், அவருடைய நன்மை, அவருடைய நற்கீர்த்தி ஆகியவைவயே நமது பெரிதான சந்தோஷமாயிருக்கின்றன. நாம் அவருடைய சித்தத்தையறியவும், அதைநிறைவேற்றவுமே வாஞ்சிக்கிறோம். ஆனால் நாம் ஒரு நிமிஷம் காத்திருந்து ஆராய்வோமாக. நம் ஆண்டவர் கெத்செமனே தோட்டத்தில் அடைந்த கஸ்தியை நினைக்கும்போது,"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று அவரோடு சேர்ந்து நாமும் உண்மையாய்ச் சொல்லக்கூடுமா?

நாம் கர்த்தரை அறிவதற்கு முன்பு 'ஆண்டவரே என்னைச் சென்னைப் பட்டணத்திலேயே வைத்திரும்! நான் உமக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் 10 ரூ. காணிக்கை கொடுக்கிறேன்' அல்லது, 'எங்கள் தலைப்பிள்ளை புதல்வனாயிருந்தால், நான் உமக்கு வாரந்தோறும் பன்னிரண்டு ரூபாய் காணிக்கை தருகிறேன்' என்று கூறிவிட்டு, அது பெண் குழந்தையாக இருக்குமானால் ஒரு ரூபாய் மட்டுமே கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்துவிடுகிறோம். இவ்விதமாக அற்பமான விண்ணப்பங்களை ஏறெடுக்கும் நிலைமையில் காணப்பட்டோம். நம்முடைய வேண்டுதலுக்கு ஆண்டவர் செவிகொடுத்து நாம் விரும்பினதைச் செய்வதினால் அவருக்கு அதிகமான காணிக்கையும், இல்லாவிடில், குறைவானதையும் கொடுத்தோம். அல்லது நாம் இவ்விதமாகவும் ஆண்டவரோடு தர்க்கித்துக் கொண்டிருக்கலாம்: 'கர்த்தாவே, நான் என் வேலையினின்று ஓய்வு பெறும் காலத்தில் உமக்கு ஊழியஞ் செய்கிறேன்! ஆனால், அதற்கு முன்பு நான் ஒன்றையும் தியாகஞ்செய்ய முடியாது. என் பிள்ளைகளுக்கு முதலாவது திருமணமாகட்டும்! பிற்பாடு ஊழியத்திற்கு வருகிறேன்.'

ஆம், நம்முடைய பற்கள் விழுந்து, முடி நரைத்து, கூன் விழுந்து, பெலன் ஒடுங்கிப்போகும்போது, ஆண்டவருக்குத்தொண்டு செய்ய நாம் ஆயத்தமாயிருக்கிறோம். நாம் கர்த்தருடைய சித்தப்படி செய்ய வேண்டுமென்று பேசிக்

கொள்கிறோம்; ஆனால் அவருக்குக் கீழ்ப்படிவதினால், அதிகச் சிரமம் செலுத்த வேண்டுமென்று அறிந்தவுடன், நாம் சாக்குப்போக்குச் சொல்லி தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறோம். இது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பது அல்ல. "கர்த்தாவே, என்னை இங்கு வைத்திருக்கச் சித்தமானால் வைத்திரும்! அல்லது வேறெங்காவது அனுப்புவீர் என்றாலும் நான் மறுப்புத் தெரிவிக்கவில்லை," என்று நாம் மகிழ்ச்சியுடன் சொல்லக்கூடுமென்றால், அல்லது "உமது சித்தத்தின்படி ஆகக்கடவது", என்ற சிந்தையுடனிருப்போமென்றால், அப்பொழுது அந்த மகிழ்ச்சியே அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்முடைய பெலனாயிருக்கிறது. வெளியரங்கமாக நமக்குச் சிறிது வருத்தமும், வேதனையும் அல்லது கெத்செமனேயின் பாடும் இருக்கக்கூடுமென்றாலும், தேவனுடைய சித்தத்தைச் செய்வதினால் உண்டாகும் பெலத்தினால் நம்முடைய இருதயங்கள் பெலனடையும்.

கர்த்தருடைய மகிழ்ச்சி உங்களுடைய பெலனாயிருக்க நீங்கள் விரும்புகின்றீர்களா? அப்படியானால் கர்த்தரின் சித்தத்தைச் செய்வதில ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனுமிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அவருடைய சித்தத்தைக் கண்டுபிடிப்பதற்குப் போதுமான அவகாசம் கொடுங்கள், அல்லது அதற்கான நேரத்தையெடுங்கள். அதற்குப் பிறகு அதை நிறைவேற்றுவதில் மனமகிழ்ச்சியுடனிருங்கள். இதனால் நீங்கள் பற்பலவிதமான கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்க வேண்டியதிருக்கும்! அது கல்வாரிப் பாதையானாலும் நீங்கள் செய்வது கர்த்தரின் சித்தமானதால் அது பரிபூரண சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும் என்பது திண்ணம்.

"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா 16 : 24).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிப்பது என்றால் என்னவென்று கற்றுக்கொள்ளுங்கள். இதற்கு

முன்பு ஆண்டவரிடம் அவருடைய சீஷர்கள் பல காரியங்களை யும் கேட்டார்கள். ஆனல், அவருடைய நாமத்தின் அதிகா ரத்தையும், வல்லமையையும் புரிந்துகொள்ளாமலிருந்தனர். ஆனல், அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உன்னதங் களில் உயர்த்தப்பட்டு, அவருடைய பரிசுத்த ஆவியானவர் அவர்களின்மீது இறங்கினபின் அவருடைய அதிகாரமென்ன வென்பதை அறிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். ''வானத் திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது'' (மத்தேயு. 28 : 18), என்பதன் பொருளை விளங்கிக்கொண்டனர். இதில்தான் தெய்வீக இரகசியம் அடங்கியுள்ளது. அதே வல்லமையும், அதிகாரமும் இப் பொழுது நமது மூலமாய் உலகத்தில் உபயோகிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. நம்முடைய பெலன், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் ஒன்றேயாகும்.

நம்முடைய பெலன் கட்டிடங்களிலோ, ஐசுவரியத் திலோ, ஆஸ்தியிலோ, பட்டம் படிப்பிலோ அல்லது பெரிய எண்ணிக்கையிலோ இல்லை. நம்முடைய சொத்து இரண்டு ரூபாயானலும் சரி, பத்து ரூபாயானலும் சரி, பத்து லட்சம் ரூபாயானலும் சரி, அது ஒரு பொருட்டல்ல. நாம் அதிகம் படித்தவர்களோ, அல்லது கல்வியின் வாசனையே இல்லாத வர்களோ, குடிசையில் குடியிருப்பவர்களோ, அல்லது கொட்டாரத்தில் வாழ்பவர்களோ, நாம் யாராயிருந்தாலும், எங்கு வாழ்ந்தாலும் அவையெல்லாம் நமக்குப் பெலனுகாது. நம்முடைய பெலன் அவருடைய நாமத்திலேயே யுள்ளது.

நம்மில் அநேகருடைய ஜெபங்கள் அர்த்தமற்ற, வல்ல மையில்லாத வெறும் வார்த்தைகளாகவே யிருக்கின்றன. அழகான நீண்ட ஜெபங்களை அடிக்கடி நாம் ஏறெடுக்கிறோம். அவற்றில் சொல் நயமும், அலங்காரமும் இருக்கின்றன! ஆனலும் வீண் வார்த்தைகள்தான். ஏனென்றல், துன்பமும், சத்துருவும் வருவதைக் கண்டு நாம் பயந்து, நடுங்கி, ஒளிக் கின்றோம்; அல்லது கண்ணீர் வடிக்கின்றோம். அதற்கு

மாருக நாம் செய்யவேண்டியது யாது? அது வீணன வார்த்தைகளை அலட்டுவதில் இல்லை! ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும், அதின் அதிகாரத்தையும் பிரயோகிப்பதில் நம்முடைய பெலன் இருக்கிறது. சத்துரு வெள்ளம்போல் வரட்டுமே! (ஏசாயா. 59: 19) அல்லது அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக வெளிப்படட்டுமே! (1 பேதுரு 5 : 8) நாம் அவனைக் கர்த்தருடைய நாமத்தில் கட்டிப்போடுவோம். அதுதான் நம்முடைய மகிழ்ச்சியும், பெலனுமாயிருக்கிறது. இந்த உலகத்தின் காரியங்களில், அதாவது கல்வியிலும், ஞானத்திலும், செல்வத்திலும், செல்வாக்கிலும், நாம் தரித்திரராயிருக்கலாம். ஆனால், கிறிஸ்துவில் நாம் முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்களாயிருக்கிறோம்.

நீங்கள் ஜெபிக்கும்போது அந்த அதிகாரமும், வல்லமையும் உங்களுக்கு இருக்கிறதென்று உண்மையோடும், உறுதியோடும் நீங்கள் கூறமுடியுமா? நீங்கள் ஜெபிக்கின்ற தன்மையைப் பார்த்தால் ஒரு குருவியுங்கூட ஓடாதே! அப்படியானல் ஒரு சிங்கத்தை எவ்வாறு விரட்டியடிக்கும்படி எதிர்பார்க்கின்றீர்கள்? திருவசனத்தின்படி எல்லா நாமங்களுக்கும் மேலான இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும்பொழுது சத்துரு நடுங்குவானே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலுள்ள அதிகாரத்தையும், வல்லமையையும் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்வோமாக. அப்பொழுது கிடைக்கும் வெற்றியின் மகிழ்ச்சியினுல் நம்முடைய ஜீவியங்கள் பெலனுள்ளவைகளாயிருக்கும்.

''உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்'' (1 யோவான். 1 ; 4).

பரிசுத்த வேதாகமத்திலுள்ள மறைபொருள்களெல்லாம் நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கப்படும்போது, நம்முடைய உள்ளங்கள் சந்தோஷத்தால் பொங்குகின்றன! அது நம்மைப் பெலப்படுத்துகின்றது. வெறும் வேதாகம அறிவில்

நம்முடைய பெலனில்லை. அல்லது அழகான பிரசங்கங்களைக் கேட்பதிலும் அது இல்லை! ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுதாமே, தம்முடைய ஆவியினால் வேதத்திலுள்ள மறை பொருள்களை வெளிப்படுத்தும்போது நாம் பெல னுள்ளவர்களாகிறோம்.

''இவைகளை... பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்'' (மத்தேயு 11 ; 25). "நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரேமியா 33 : 3). நம் அன்புள்ள இரட்சகர் நமது கண்களைத் தம் ஜீவனுள்ள வசனத்திற்கு நேராகத் திருப்புவதே நம்முடைய பெலன். நாம் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கும்போது அநுதினமும் கர்த்தர் தம்மைத்தாமே அதிகமான அளவில் நமக்கு வெளிப்படுத்தும்போது, நம்முடைய சந்தோஷமும், அதின் விளைவாகிய கர்த்தரின் பெலனும் நமக்குள் அதிகரிக்கிறதை நாம் காண்கின்றோம். இவ்விதமாகக் கர்த்தருடைய வசனம் நமக்கு மெய்யானதாகி, நாம் அவருடைய பாதத்தில் காத்திருக்கும்பொழுது நாள்தோறும் நமக்கு ஏதாவது புதிதாகத் தருவார்! இதுவே நமது மகிழ்ச்சியும், பெலனுமாயிருக்கும்.

''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள்'' (அப்போஸ்தலர் 5 : 41).

நாம் கர்த்தருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராய் எண்ணப்படும்பொழுது சோர்ந்து, தளர்ந்து, மனமடிவாகிப் போகாமல் அதற்குப் பதிலாக மகிழ்ச்சியடைய வேண்டும்! அப்பொழுதுதான் நாம் அவருடைய மகிமையைப் புதியவிதமாக அறிந்து கொள்கிறோம். மேலும் அந்த சந்தோஷத்தினால் நாம் புதிதும், ஆச்சரியமுமான பெலத்தைப் பெற்றுக்கொள்

கிறோம். அவருடைய நாமத்தின் நிமித்தம் நிந்தையையும், அவமானத்தையும் சகிக்கும்போது, நாம் முன்பைவிட அவருக்கு அதிகமாகத் தொண்டு செய்து அவரைக் கனப் படுத்தும் மேலான கடமையையும், பொறுப்பையும் பெறுகிறோம். "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்" (1 பேதுரு 4 : 14).

ஓர் அலுவலகத்தில் நீர் ஓர் எழுத்தாளராகப் பணியாற்றி வரும்பொழுது, திடீரென்று நீர் அங்கு மேற்பார்வையாள ராக உயர்த்தப்பட்டால் அதற்காக நீர் வருந்துவீரா? அல்லது வீட்டிற்குச் சென்று, உமது மனைவியினிடம் அழுது புகார் செய்வீரா? இல்லை, உமக்குக் கிடைத்த உத்தியோக உயர்வின் நிமித்தம் உம்முடையவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சிகொள்வீரல்லவா? அவ்விதமே அவருடைய நாமத் திற்காக அவமானமடையத் தகுதியுள்ளவராக எண்ணப் படும் மேலான தெய்வீகப் பொறுப்பின் நிமித்தம் சந்தோ ஷப்பட்டு மகிழுங்கள். அது உண்மையான ஆவிக்குரிய உத்தியோக உயர்வாகும். நீர் உம்முடைய சிலாக்கியங்களை அறிந்து கொள்ளும்போது அதிகப் பெலன் பெறுவீர்.

நாம் ஒவ்வொருவரும், நம்முடைய பெலனாகயிருக்கும் கர்த்தரின் மகிழ்ச்சியில் நுழைவது எப்படியென்று கற்றுக் கொள்வோமாக.

2

சுயாதீனமுள்ள மகிழ்ச்சி

'தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14 : 17)

இம்மைக்குரிய உலக சந்தோஷம் நாம் விரும்பும் பொருளையோ, பதவியையோ பெற்றிருப்பதால் உண்டாகிறது. தாங்கள் ஆசிப்பதையெல்லாம் அடைந்துவிட்டால், சந்தோஷமாயிருக்கலாம் என்று மக்கள் எண்ணிக் கொள்கின்றனர். எனவே, தாங்கள் விரும்புவதைப் பெற கருமமே கண்ணாயிருக்கின்றனர்; அதையடைய அரும்பாடு படுகின்றனர்; தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கவும் ஆயத்தப்படுகின்றனர். எனினும் இறுதியில் பெரும் ஏமாற்றமேயடைகின்றனர். ஏனென்றால் இவ்வுலக ஆஸ்தியை எல்லாம் நீர் கைப்பற்றிக் கொண்டாலும்கூட, நீர் சந்தோஷமற்றவராக, வேதனையுற்றவராக இருக்கலாம். அல்லது நீர் சிறிதுகாலம் இன்பமனுபவிப்பதுபோலத் தோன்றினும், அது தற்காலிகமானதே; அது நிலையானதன்று. உம்முடைய பொருள்கள் உம்முடைய கையை விட்டு மெல்ல நழுவி விடுகின்றன. வாழ்க்கையில் வெறுமையும், ஏமாற்றமும் தலைகாட்டுகின்றன. நம்பிக்கைகள் வீணாகின்றன; கனவு நனவாகக் காணோம். எண்ணியவை எண்ணியவாறு நடக்கவில்லை. உடல்நலம் குன்றுகிறது; முதுமை வளருகின்றது. உமக்கு இன்பம் தருமென நைப்பாசையுடன் நீர் தேடின உலகப் பொருளனைத்தும் முடிவில் உமக்கு ஏமாற்றத்தையே தருகின்றது.

இன்றைய இனிப்பு நாளைய கசப்பாக மாறிவிடலாம்; இப்பொழுது நண்பர்களாக இருக்கிறவர்கள், பிறகு எதிரிகளாகிவிடலாம்; இன்றைய ஞானம் நாளைக்குப் பயித்தியமாகத்

தெரியலாம். உமக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று நீர் எதிர் பார்ப்பவை எல்லாம் முடிவில் ஒன்றுமில்லாமல் போய்விடலாம். அன்பும், பரிவும், ஜீவனுமுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து—பாவிகளுக்காக மரித்துயிர்த்த ஒரே இரட்சகர் எம் பெருமான் கிறிஸ்து இயேசு மாத்திரமே உமக்கு மெய்ச்சமாதானம், சந்தோஷத்தைத் தரமுடியும். ஆனால் அவர் அளிப்பது இந்த பூமிக்குரிய இன்பமல்ல; அது அவருக்கே சொந்தமான பரலோக சந்தோஷமாகும்.

''தேவனுடைய ராஜ்யம்... நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.'' நமக்குள்ளே வாசஞ்செய்யும்படியாக வந்திருக்கும் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே அபரிமிதமான நீதியை தேவ ஈவாகவே நடப்பிக்கிறார். அந்த நீதியே நமது சந்தோஷமும், சமாதானத்தின் உற்பத்தி ஸ்தானமுமாகிறது. ஆனால் மனுஷீக நீதி இவ்வித சமாதானம் சந்தோஷத்தைத் தருவதில்லை; ஏனென்றால், அது மனித முயற்சியின் விளைவுதான். தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நீதிமான்களாகக் காணப்படும்படியாகச் சிலர் எவ்வளவு பிரயாசப் படுகிறார்களோ, அவ்வளவுக்கதிகமாய் தேவனுடைய பார்வையில் தீட்டுள்ளவர்களாகின்றனர். நீதி என்றும், புண்ணியம் என்றும் மனிதர்கள் அழைப்பதை தேவன் அழுக்கான கந்தைகளுக்கு ஒப்பிடுகின்றார். (ஏசாயா 64:6). ''அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்'' (ரோமர் 10:3). அதுதான் காரணம். அது யூதநீதியோ, இந்து தர்மமோ, அல்லது புத்த புண்ணியமோ, அல்லது ''பேர்க்கிறிஸ்தவ'' நீதியோ, எதுவானாலும், அதை தேவன் அழுக்கான கந்தை என்றே அழைக்கிறார்.

இவை தவிர, உங்களது வாழ்க்கையிலுள்ள இதர மாய்மாலங்களைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன? உதாரணமாக, உங்களைப்பற்றி பல நற்சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டி

ருக்கலாம். உங்கள் தலைமை ஆசிரியரோ, முதல்வரோ உம்மைப்பற்றிச் சிறந்தவரென்றும்: திறமைசாலியென்றும், அறிவாளியென்றும், ஒழுக்கத்திற்கு முன்மாதிரியென்றும், குணக்குன்று எனவும் பற்பல அடைமொழிகளால் உம்மை வர்ணித்திருக்கலாம். இதெல்லாம் உண்மைக்குப் புறம்பான கூற்று என நீர் நன்றாக அறிந்திருக்கிறீர். இவை வெறும் பொய் சாட்சிப் பத்திரங்கள் என்பதை உம்முடன் பணியாற்றுபவர்களும், உமது மாணவர்களுமே நன்கு அறிந்திருக்கின்றனர் என்பதை நீரும் அறிவீர், அல்லது ஒருவேளை நல்லவர்போல நடிக்க நீர் அறிந்திருக்கலாம். எல்லோருடைய கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு, எல்லாருமே ஏகமனதாக நீர் நல்லவர் எனத் தீர்ப்பளித்திருக்கலாம். உமது உற்றார், உறவினர், நண்பர், நெருங்கினவர் அனைவருமே உம்மைப்பற்றி நற்சாட்சி பகரலாம். உமது மேலதிகாரியிடமிருந்தோ, சபையைக் கண்காணிப்பவரிடமிருந்தோ, அல்லது அயல்நாட்டு மிஷனரியிடமிருந்தோ சிறந்த நற்சான்றிதழ் பெறும் இரகசியத்தை நீர் அறிந்திருக்கலாம். ஆனாலும், தேவன் உம்மைப்பற்றி என்ன நினைக்கின்றார்? பரிசுத்தமும், நீதியுமுள்ள தேவன், பட்சிக்கிற அக்கினியாயிருக்கிற தேவன் உம்மை எவ்வாறு மதிப்பிடுகிறார்? உம்முடைய நற்சான்றிதழ்கள் அவரிடம் செல்லுமா? அவற்றை அவர் ஆமோதிப்பாரா? நீர் குற்றவாளி, பொய்யர், மாய்மாலக்காரர் என்பதை உம்முடைய மனசாட்சியே அடிக்கடி கூறுவதில்லையா? மற்றவர்கள் உம்மைப்பற்றிக்கூறும் புகழுரைகளுக்கு நீர் செவி சாய்க்க வேண்டாம். உம்முடைய மனசாட்சி சொல்வதையே நீர் கவனித்துக் கேளும். நீர் அநேக ஆண்டுகளுக்கு முன்பு செய்த காரியங்கள் ஒருவேளை அந்தரங்கத்தில், இருட்டறையில் அல்லது, மரத்தின் மறைவில் பிறர் அறியாது செய்த பாவம் யாவும் உம்முடைய ஞாபகத்திற்கு வரும். நீர் குற்றவாளி என்பதை உம்முடைய மனசாட்சியே கூறும். நீர் அங்குமிங்கும் போகும்போது அல்லது உம்முடைய படுக்கையில், உம்முடைய மனத்தில் உண்டாகும் கற்பனைகளும், எண்ணங்களும் எவ்வாறிருக்கின்றன? நீர் எப்படிப்பட்டவர் என்பதை மற்றவர்கள் உமக்குச்

சொல்லவேண்டிய தேவையில்லை. ஆதலால் உம்முடைய சுயநீதியை நிலைநிறுத்துவதற்கு நீர் எந்த முயற்சியும் செய்து உமது காலத்தையும், பெலத்தையும் இனிமேலும் வீணுக்காமல் உம்முடைய மனசாட்சி பகரும் மெல்லிய குரலைக்கேட்கக் கற்றுக்கொள்ளும்.

தேவன் தம்முடைய மிகுந்த அன்பினிமித்தமே இலவசமான ஈவாகத் தம்முடைய சொந்த நீதியை உமக்குக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். இவ்வுலகில் வேறுயாராகிலும் உமக்கு அவ்விதம் கொடுக்க முடியுமா? உம்முடைய தாயோ, தந்தையோ, சகோதரனோ, சகோதரியோ அல்லது மனைவியோ, கணவனோ இவ்வித அன்பு செலுத்த முடியுமா? அவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் இவ்விதமாக அன்பு பாராட்ட முடியாது! ஏனென்றால் அதற்குரிய திராணி அவர்களிடமில்லை. அவர்கள் விருப்பங்கொள்ளலாம், ஆனால் விருப்பத்தை நிறைவேற்றும் சக்தி அவர்களிடம் இல்லை. ஆனால் நித்திய தேவன் உமக்கு இவ்விதமான அன்பைத் தருகிறார். தம்முடைய அன்போடு, சமாதானத்தையும் அவர் கூட்டிக் கொடுக்கிறார்! அதை நித்திய காலமாகப் பெருக்குகிறார். அதுதான் அவருடைய கிருபை!

தேவன் தம்முடைய அன்பு, சமாதானத்தோடு பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷத்தையும் கூட்டிக் கொடுக்கிறார். எந்த மனிதனும் அந்த சந்தோஷத்தை உமக்குத் தர முடியாது. அல்லது எந்த மனுஷீக இமாலயப் பிரயத்தனமும், அதை உமக்குச் சம்பாதித்துத் தராது. ஆனால் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் உம்மில் பிரவேசித்து உமக்குள் செயல்பட நீர் அனுமதிப்பீரானால் தேவனுடைய நீதியினாலேயே நீதிமானாக்கப்பட்டவராய், அதன் பலனாகிய ஆனந்த மகிழ்ச்சியை கர்த்தருக்குள் பெற்று அநுபவிப்பீர்; தேவ மகிழ்ச்சியினால் நீர் துள்ளிக் குதிப்பீர். ஏனென்றால், நீர் தேவனுடைய பார்வையில் நீதிமான், குற்றமற்றவர் என்றநிச்சயத்தைப் பரிசுத்த ஆவியானவர் உமக்குக் கொடுப்பதே இதற்குக் காரணம்.

மேலும் நாளுக்கு நாள் நீர் ஆவிக்குரிய வளர்ச்சியையும், செழிப்பையும் பெறுகிறீர்! அவருடனுள்ள பரிசுத்த ஐக்கியத் தில் ஸ்திரப்படுகிறீர்.

இதைச் சற்று விளக்கமாகப் பரிசீலனை செய்வோம்:— ஒவ் வொருவரும் இந்த மகிழ்ச்சியைப்பெற்று ஆனந்திக்கவேண்டு மென்று தேவன் எதிர்பார்க்கிறார் என்ற உண்மையை திரு வசனத்திலிருந்தே நாம் பார்ப்போம்!

"வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையை யும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்" (ஏசாயா 35:1-2).

ஆண்டவர் தம்முடைய சந்தோஷத்தை எவ்வளவு சுருக் கமாகவும், சுலபமாகவும், அழகாகவும் வெளிப்படுத்திக் காண் பிக்கின்றார். ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே பாவமும், சாபமும் இவ்வுலகில் வந்தன! அதன் விளைவாக பூமியானது முள்ளையும், குருக்கையும் பிறப்பிக்கிறது. பாலை யும் காஞ்சொறியும் காணப்படுகின்றன; ஏக்கமும், ஏமாற்ற மும் எங்கும் காணப்படுகின்றன. மனிதன் தன்னுடைய அறி வாலும், முன்னேற்றத்தாலும், கலாச்சாரத்தினாலும் உலகைச் சீர்திருத்த முயற்சிக்கும் பொழுதெல்லாம் அவை விரையமா வதுடன் நிலையும் உண்டாகிறது. பாலை மணலே அதன் பங்காகிறது.

இவ்வுலகில் அநேக பெரிய அரசர்களும், சாம்ராஜ்யங் களும் தோன்றினதுண்டு! ஆனால் அவையெல்லாம் தோல்வி யிலும், அவமானத்திலும் முடிந்துவிட்டன. தங்கள் செல் வத்தையும், ஞானத்தையும்பற்றிக் கர்வங்கொண்டிருந்த பிரபலத் தலைவர்களும், தத்துவ சாஸ்திரிகளும் இப்போது

எங்கே? மனிதனுடைய ஒவ்வொரு செய்கையும் வெறுமை யாக்கப்பட வேண்டும். யாவரும் பார்த்துப் பிரமிக்கத்தக்க விதமாய், அதிசயமாய், அதிக உறுதியாகக் கட்டப்பட்ட கட்டிடங்களும், ஒருநாளில் அழிந்து மண்மேடாகிவிடும். மிகச் சிறப்பான நவீன இயந்திரங்களும், சாதனங்களும்கூட ஒரு நாளில் ஒன்றுமில்லாமற்போகும். மனிதருடைய உறவுகளும் ஐக்கியங்களும், மனத்தாங்கல்களும்; மனக்கசப்பிலும், சண்டையிலும் முடிகின்றன. பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப் படியாத காலமாயிருக்கிறது. செய்நன்றி மறக்கும் சுயவர் கூட்டம் வளருகின்றது. அதிக உதவிபெற்ற உற்றார், உறவினரும் உதாசீனஞ் செய்துவிடுவர். ஒவ்வொரு வீட்டிலுமே முள்ளும், குருக்கும் முளைத்தெழும்புகின்றன. எந்த வீட்டிலாவது சண்டை சச்சரவு இல்லாமல் இல்லை; போட்டி பொறாமைஇல்லாமலில்லை; எல்லாரும்ஏகமனதாக ஒத்துவாழ்கின்றார்கள் எனக் கூறமுடியுமா? பெரிய பதவிகள் வகிப்பவர்களும்கூட லஞ்சம் கொடுப்பதும், வாங்குவதும் சகஜமாயிருக்கிறது. பாவத்தினால் உண்டான சாபத்தின் அறிகுறிகள் ஒவ்வொருநாட்டிலும், ஒவ்வொருஜாதி ஜனத்தினிடமும் காணப் படுகின்றன.

தேவன் மனிதனைத் தம்முடைய சாயலாகவே சிருஷ்டித் தார். முதலாவது, மனிதனுக்குப் பூரணமும், அழகும் ஒருங்கே அமைந்த அற்புதமான சரீரத்தைக் கொடுத்தார். ஆனால், பின்பு பாவம் உலகத்தில் பிரவேசித்ததுமுதல் ஒவ்வொரு முகத்திலும் பாவத்தின் அச்சடையாளங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. சிலமுகங்கள் சிறிதுநேரத்திற்கு அழகும் இனிமையுமுள்ளதாகக் காணப்படலாம்! ஆனால் அவர்களது அந்தரங்க வாழ்க்கையைச் சற்று கவனித்துப் பாருங்கள் அங்கு, பெருமை, பேராசை, மாய்மாலம், இச்சைகள் யாவும் காணப்படுகின்றன. இவ்விதமாக, தேவனுடைய பார்வையில் மனிதனுடைய ஜீவியம் மணல் நிறைந்த பாலைவனமாகவும், முள்ளையும், குருக்கையும் பிறப்பிக்கும் வறண்ட பூமியாயுமிருக்கிறது.

ஓ மனிதனே! நீர் உம்மிலே அல்லது உமது சாதனையிலே பெருமைப்படுவதற்கு முன்பாக தேவன் உம்முடைய வாழ்க்கையை எவ்வாறு காண்கின்றாரோ, அவ்வாறே நீரும் கண்டு கொள்ள முயற்சிக்க வேண்டும். மனித முயற்சியினால் சிறிதேனும் மாற்றவோ,சீர்திருத்தவோ முடியாத பாழான பாலைவனம் அது என்பதை நீர் கற்றுக்கொள்ளவேண்டும். இதைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறதென்று கவனிப்போம். "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளிகளித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும், இது மிகுதியாய் செழித்துப்பூரித்து ஆனந்தக் களிப்புடன் பாடும்." இதுவே தேவ கிருபையின் அற்புத செயலாகும். நம்முடைய ஜீவியத்தில் கனியற்றதும், வறண்டதுமான நிலைமைக்குக் காரணமாயுள்ள எல்லாப் பாவத்தையும் மன்னித்துப் போடுவதற்கு தேவன் விருப்பமும், சித்தமும், சக்தியுமுள்ளவராயிருக்கிறார், அவர் தம்முடைய அன்பினாலும், கிருபையினாலும் இந்தப் பாழான நிலத்தை வளங்கொழிக்கும் பூந்தோட்டமாக மறுரூபப்படுத்த விரும்புகிறார்.

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப் போம்" (ஏசாயா 35:10).

இவ்விதமாக மறுபிறப்பின் புதிய அநுபவத்திற்குள் நீர் வந்தபிறகு, நீர் நிச்சயமாகவே: "ஐயோ! நான் அனேக (5, 10,20) வருடங்களுக்கு முன்பே ஏன் கர்த்தருக்குள் வரவில்லை! வந்திருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும்!" என்று நினைக்கவில்லையா? நானும் கிறிஸ்தவனாக எனது புதிய வாழ்க்கையைத் தொடங்கினபோது இவ்வாறே கூறினேன். "நான் பத்து ஆண்டுகளுக்கு முன்பே இரட்சிக்கப்பட்டிருந்தால் நான் என் ஜீவியத்தை இவ்வளவு தூரம் கெடுத்து வீணாக்கியிருக்க மாட்டேனே" என்று எண்ணியதுண்டு. நான் இருளி

லும், வெட்கத்திலும், துக்கத்திலும் செலவழித்த அந்த ஆண்டு களைக் குறித்து எத்தனை முறையோ ஏங்கி வருந்தியதுண்டு. நீர் எப்பொழுதாவது அவ்விதம் யோசித்ததுண்டா? நீர் வாலி பரோ, வயோதிபரோ— இவ்விதமான எண்ணம் வந்திருக்கக் கூடும்; அப்படியானால் உமக்கு ஒரு நற்செய்தி உண்டு. தேவ னுடைய கிருபையை, அதனுடைய பரிபூரணத்தில் நாம் பெறும்போது, நமது கடந்தகால நட்டமெல்லாம் திருப்பித் தரப்படும், அதற்கு இரட்டிப்பான ஈடும் கொடுக்கப்படும். "நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனைகளாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப்பூச்சி களும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்" (யோவேல் 2:25) நீர் ஒரு விவசாயி என்றால் பயிர்களின் எதிரிகள் எவ்வாறு பயிரை நாசப்படுத்தக்கூடுமென்பதை நன்கு அறிந்திருப்பீர். இன் றைக்குக் கண்களுக்குக் குளிர்ச்சியாக, அறுவடைக்கு ஏற்ற விளைச்சலாக இருக்கும் வயலில் வெட்டுக்கிளிகள் இறங்கு மானால் ஒன்றும் விட்டுவைக்காதென்பது நன்கு தெரியும். அந்த வெட்டுக் கிளிகளைத் தொடர்ந்து பச்சைக் கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் படையெடுக் குமானால் அந்த வயலைப்பற்றி என்ன நம்பிக்கை உண்டு?

இது உம்முடைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காட்சி யாயுள்ளதா? உம்முடைய குருட்டாட்டத்திலும், மதி யீனத்திலும், உம்முடைய வாலிபத்தின் பத்து ஆண்டுகளை வெட்டுக் கிளிகள் தின்றுவிட்டன. உம்முடைய பெருமையி னாலும், அகந்தையினாலும், சுயசித்தத்தினாலும் பயனுள்ள பருவத்தில் பத்து ஆண்டுகளைப் பச்சைக்கிளிகள் நாசப்படுத்தி விட்டன. உம்முடைய முன்கோபத்தினாலும், சிடுசிடுப்பி னாலும் ஒழுங்கீனமான சுபாவத்தினாலும் உமது வாழ்க்கை யின் நடுப்பிராயத்தில் பத்து ஆண்டுகளை முசுக்கட்டைப் பூச்சிகள் கெடுத்துவிட்டன. உம்முடைய பிடிவாதம், முரட் டாட்டம் இருதயக் கடினத்தினால் உம்முடைய பிந்தினவாழ்க் கையின் பத்து ஆண்டுகளைப் பச்சைப்புழுக்கள் பட்சித்து

விட்டன. காலம் செல்லச்செல்ல உமது இருதயம் கடினப்பட்டு, உம்முடைய மரணப் படுக்கையில், சுற்றம் சூழ யாவரும் உம்மை வந்து பார்க்கையில், மிகுந்த மனவேதனையுடன்: ''என் வாழ்க்கையெல்லாம் பாழாகிவிட்டதே!'' என்று பரிதாபத்துடன் அங்கலாய்ப்பீர். உம்முடைய கண்மூடித்தனம், மதியீனம், அகந்தை, கர்வம், கோபம், பொறுமையின்மை, கட்டுப்பாடற்ற தன்மை, பிடிவாதம், இருதயக்கடினம் போன்ற பல சத்துருக்கள் உம்முடைய வாழ்க்கையையெல்லாம் பாழாக்கிவிட்டன என்று பதைபதைப்பீர். இப்பொழுது நீர் பெருமைப்படும் குணங்களை முற்றிலும் வெறுப்பீர். சத்தியம் உமக்குச் சமீபமாய் வந்த காலத்தில் பிடிவாதமாக எதிர்த்து நின்றதை நினைத்து மனஸ்தாபப்படுவீர். அப்பொழுது உண்மையையெல்லாம் நீர் ஒப்புக்கொண்டாலும், காலம் கடந்துவிட்டமையால் அது மிகவும் பிந்திவிட்டது.

இப்பொழுது தேவனுடைய கிருபை நடப்பிக்கும் அற்புதத்தைப் பாரீர். உம்முடைய வாழ்க்கை எல்லாம் வனாந்தரமாகி நாசமடைந்துவிட்டாலும், நமது ஆண்டவர், ''நான் திரும்ப அளிப்பேன், நான் திரும்பத் தருவேன், நான் திரும்பக்கொடுப்பேன்! நஷ்டமாய்ப்போன எல்லாவற்றையும் திரும்ப அளிப்பேன்'' என்று கூறுகிறார். அவரே திரும்பத் தருகிறார் என்பது எவ்வளவு ஆச்சரியமான சந்தோஷம்! நாசமடைந்ததும், நஷ்டப்பட்டதும், தொலைந்துபோனதும், இழந்ததும் எல்லாம் திரும்பக் கிடைக்கும். யூத ஜாதி ஒரு வனாந்தரமாக மாறிவிட்டது. தங்களது பாவத்தாலும், குருட்டாட்டத்தினாலும் அவர்கள் ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டார்கள். ஆனாலும், அவர்களையெல்லாம் திரும்பக் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்கு இப்பூலோக ராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பேன் என்று வாக்குரைத்திருக்கிறார். அப்படியானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நமக்கு எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறார்! அதுவே நம்முடைய மகிழ்ச்சியாயிருக்கிறது. நாம் இழந்

தவற்றை எல்லாம் தேவ கிருபையால் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால் நாம் மென்மேலும் மகிழ்ச்சி யடைகிறோம். நாம் ஒரு சிறிய பொருளைத் தொலைத்து விட்டு, அதை மறுபடியும் கண்டுபிடிக்கும்போது அதிக மகிழ்ச்சியடைகிறோமென்றால், நாம் வீணாக்கிப்போட்ட வருஷங்களின் பலனைத் தேவன் நமக்குத் திரும்பத் தரும் போது அது எவ்வளவு பேரானந்தமாயிருக்கும்!

நாம் எல்லாரும் எவ்வளவு காலத்தை வீணாக்கினோ மென்று சற்று சீர் தூக்கிப் பார்ப்போமாக. சான்றாக ஒரு பரிசுத்த சபை கூடுதலை உற்று நோக்குவோமாக. சுமார் 2,000 பேர்கள் வந்திருக்கும்போது, ஒவ்வொருவரும் 25 ஆண்டுகளைத் தங்களது வாழ்க்கையிலே விரையமாக்கி விட்டனர் என்றால், மொத்தத்தில் அது 50,000 மிகச்சிறந்த கிடைப்பதற்கரிய, விரையமான வருடங்களாக இருக்கு மல்லவா!

மற்றொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். உங்கள் காலமெல்லாம் நீங்கள் இழந்த பொருள்களை எண்ணிப் பாருங்கள். அவை சிறியவையென்றாலும், பெரியவை யென்றாலும் வீட்டிலோ, வெளியிலோ, அலுவலகத்திலோ எங்குக் காணாமல் போயிருந்தாலும்அவையெல்லாவற்றையும் கூட்டிப்பாருங்கள். எவ்வளவு பணம், துணி, கடிகாரங்கள், கண்ணாடி, பேனா, பென்சில், பேப்பர், சாவி, செருப்பு என எல்லாவற்றையும் தொகையிட்டுப் பாருங்கள். பிறகு ஒரு நாள் மாலை வீடு திரும்பும்போது தொலைந்துபோன அனைத் தும் உங்கள் மேஜைமீது வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அப்பொருள்களைத் தாங்கள் அநுபவித்துக் கொள்ளுங்கள் என்றும் உங்களுக்குக் கூறினால் எவ்வளவு மகிழ்ச்சியடைவீர் கள். அதே சமயத்தில் நீங்கள் பள்ளியிலோ, கல்லூரியிலோ தேர்வுகளில் தோல்வியுற்ற சந்தர்ப்பங்களை நினைத்துப்பாருங் கள். அத்தோல்விகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டு, எல் லாத் தேர்வுகளிலும் நீங்கள் வெற்றிபெற்றுவிட்டதாகவும், நீங்கள் பெறவேண்டிய பட்டங்களுக்கு நீங்கள் தகுதிதான்

என்றும் கூறினல் அது உங்களுக்கு எவ்வளவு மிகுதியான மகிழ்ச்சியைத் தரும்.

ஆயினும், இப்பொழுதோ இவையெல்லாவற்றிலும் மிகச் சிறப்பானதும், அதிசயமானதும், மகிமையானதுமான வெற்றி கிட்டுகிறது. தேவனுடைய கிருபையினலே உங்கள் வாழ்க்கையில் நேர்ந்த தோல்விகள், நஷ்டங்கள், வெட்கம், துக்கம் இவையாவும் மாற்றப்பட்டு நீங்கள் விரும்புகிறதற்கும், வேண்டிக்கொள்கிறதற்கும் அதிகமான இழப்பீடு உங்களுக்கு அளிக்கப்படுகிறது. நீங்கள் இழந்ததைக் காட்டிலும் மிகுதியாகவே பெற்றுக்கொள்வீர்கள். ஆதலால் உங்களது கடந்தகாலத் தோல்விகளைப்பற்றியோ வெட்கக்கேடான செயல்களைப்பற்றியோ ஏங்கவும், துயரப்படவும் வேண்டாம்.

''எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்.'' நாம் எல்லாரும் பாலைவனமாகவும் முள்ளும், குருக்கும் உண்டாகும் காஞ்சொறிக்காடாகவுமிருந்தோம். ஆனாலும் நாம் விசுவாசித்திருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினல் நம்முடைய பாவங்கள், பெலவீனங்கள், மட்டுப்பாடுகள் ஆகியவற்றுல் இழந்தவையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, அவரை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளுங்கள். அன்புள்ள நம் ஆண்டவர் நிறைவாகவும், இலவசமாகவும் தருகிற அன்பளிப்பாகிய கர்த்தரின் ஆனந்த மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளத் தடை என்ன? நீங்கள் அரைகுறையாகப் பெறவேண்டாம். அவர் தம்மிடமுள்ள எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கிறுர்! பிறகு, நம்மிடமுள்ள எல்லாவற்றையும் கேட்கிறுர். உமது ஆண்டவர் உம்முடைய அன்பையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் — எல்லாவற்றையும் — பெற்றுக்கொள்ளப் பாத்திரர். ஆதலால் உங்களை முற்றிலுமாய் அர்ப்பணியுங்கள். அப்பொழுதுதான் உங்கள் இருதயங்களில் ஆனந்த மகிழ்ச்சியினல் கர்த்தரைப் பாடிக்கொண்டாடுவீர்கள். அந்த ஆனந்த சந்தோஷம் உங்கள் பெலனுக இருக்கும். அதைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு ஒத்தாசை புரிவாராக!

3

பெருக்கமுள்ள மகிழ்ச்சி

''உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் உண்டு.''
(சங் 16:11)

நாம் மறுபடியும் பிறக்கும்போது பெறும் மகிழ்ச்சியானது உலகத்திலிருந்து உண்டான சந்தோஷமாயிராமல், தேவன் தாமே தந்தருளும் மகிழ்ச்சியாயிருப்பதால் அது நித்திய காலமாக வளர்ந்து பெருகி செழிப்புற்று ஓங்கவேண்டும். மேலும் அது சுயநலமுள்ள சந்தோஷமல்ல. இந்த மகிழ்ச்சியை இவ்வுலகிலிருக்கும் சிலரும் மகிமைக்குள், பிரவேசித்து உன்னதங்களில் வீற்றிருக்கும் பலரும்-சுருங்கச்சொன்னால் மறுபிறப்பின் அநுபவம் பெற்ற அனைவரும் தங்களுக்குள் பொதுவாகப் பெற்று மகிழும் பேரானந்தமாகும். இவ்வுலக இன்பங்களை இவ்விதமாகப் பகிர்ந்துகொள்ள இயலாது. ஆனால் இதுவோ பரலோக சந்தோஷம்; இதை நாம்பெற்று அனுபவிப்பதுடன் இதை மற்றவர்களும் பெற்றுக் கொள்ளும்படி அறிமுகம் செய்து வைக்கும் சிலாக்கியமும் நமக்குண்டு. ' யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் முதுமொழி விசுவாசிகளின் அநுபவத்தில் எத்துணை உண்மையானது!

இதற்கு சாட்சியாகப் பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக் கொள்வோம். தாவீதின் வாழ்க்கையில் இருந்து ஆறு சிறுபடிகளாக நாம்ஆராய்ந்தறியலாம். தாவீது பேரானந்தத்தால் பெருமிதம் கொள்வதற்குக் காரணமாயிருந்தது எது? அதைத்தனக்குள் அடக்கிக்கொள்ளாது, மற்றவர்களும் தன்னுடன் சந்தோஷப்படுவதற்குத் தாவீது தூண்டப்பட்டதுஎவ்வாறு? வேதாகமத்தில் பதிவாகியிருக்கும்

தாவீதின் வாழ்க்கை வரலாற்றை நாம் தொடர்ந்து படிக்கும் போது, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே தன்னுடைய பெலனுயிருக்கிறது என்ற அறிவில் அவன் வளர்ந்து தேறுவதற்கு அநுகூலமாகவே பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன என்று பார்க்கிறோம். அவ்விதமாகவே நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் அநுபவிக்கலாம் என்பதைக்காண்பிக்க முற்படுகிறோம்.

"அப்பொழுது சாமுவேல்: தைலக் கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்" (சாமுவேல் 16:13).

இந்த அதிகாரத்தில் எவ்வாறு தாவீது ராஜாவாகத் தெரிந்து கொள்ளப்பட்டான் என்று வாசிக்கிறோம். தானும் ஒரு காலத்தில் ராஜாவாகக் கூடுமென்ற எண்ணமே அப்பொழுது தாவீதுக்குத் தோன்றவில்லை. தன் தகப்பன் மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கும் ஆட்டு இடையனுக மாத்திரம் இருந்தான். தாவீதுக்கோ, அவனது பெற்றோருக்கோ உற்ருருக்கோ, அல்லது சாமுவேல் தீர்க்கதரிசிக்கோகூட—சுருங்கச் சொன்னுல் ஒருவருக்குமே — இஸ்ரவேலை ஆளும் ராஜாவாக தாவீது ஒருநாள் சிங்காசனத்தில் வீற்றிருப்பான் என்ற எண்ணமே உதயமாகவில்லை. தேவன் சாமுவேலை ஈசாயின் வீட்டிற்கு அனுப்பினபோது, முதற் பிறந்தவனுகிய எலியாப் என்பவன்தான் நிச்சயமாகவே தேவனுல் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்று சாமுவேல் யூகித்துக்கொண்டான். இறுதியில் தேவனுடைய ஆணையின்படியே, முழுக்குடும்பத்திற்கும் முன்பாக தாவீதை அபிஷேகம் பண்ணினுன்.

தாவீதைப்போன்றே நாம் ஒவ்வொருவரும் பூலோக குடும்பம் ஒன்றில் பிறந்திருக்கிறோம். ஆனுலும் நீர் ஓர் பரலோக ராஜாவாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிருர் என்பது உமக்குத்தெரியுமா? தேவனுடைய அளவற்ற

இரக்கத்தை நீர் விசுவாசிப்பதினால் உமது பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று சந்தேகமின்றி நீர் நம்புகிறீர். ஆனால் உம்மைப்பற்றி உமது சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் இவ்வளவுமேலான நோக்கமும், குறிக்கோளும் கொண்டிருக்கிறார் என்பதை நீர் ஒருவேளை கனவிலும் நினைத்திருக்க மாட்டீர். 1பேதுரு 2:9; வெளிப்படுத்தல் 1:6; 5:10; போன்ற வாக்கியங்களிலிருந்து இதுவே தேவனுடைய எண்ணமாயிருக்கிறது என்று நாம் காண்கிறோம். தேவன் உம்மில் இவ்வளவாக அன்புகூர்ந்து, உமக்காக எவ்வளவு மேலான திட்டம் வைத்திருக்கிறார். நீர் அப்படி உணரும்நாள், நிச்சயமாகவே அது ஒரு இன்ப நாளாகும். தேவனுடைய கரம் உம்மேல் இருப்பதையும், உமது கடந்தகால, பாவம் நிறைந்த வாழ்க்கையையும் பொருட்படுத்தாது, தேவன் உம்மை ராஜாவாக்க விரும்புகிறார்.

ஆனாலும் என்றென்றைக்கும், சதாகாலமும் நீர் தேவனுக்குச் சொந்தம் என்பதற்கு அடையாளமாக தேவ ஆவியானவர் உம்மீது ஊற்றப்பட்டிருப்பதை நீர் உணர்ந்து கொள்வது ஓர் ஆரம்பநிலைதான் என்று நீர் அறிந்து கொள்ள வேண்டும். மறுபிறப்பின் சந்தோஷம், மிகுந்த ஆச்சரியமும், அற்புதமுமாக இருந்தாலும் அதுஒரு தொடக்க நிலையேதான். இரட்சிப்பாகிய ஈவையும், வாக்குத் தத்தத்தின் முத்திரையாகப்பெற்ற பரிசுத்த ஆவியையும் மறுபிறப்படையும்போது நீர் பெற்றுக் கொள்வதினால், என்ன நோக்கத்திற்காக ஆண்டவர் உம்மில் அன்பு கூர்ந்து, உம்மைத் தெரிந்து கொண்டு அழைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள ஆரம்பிக்கிறீர். தேவன் உம்மைப் பெயர் சொல்லி அழைத்து, உம்மைத் தெரிந்துகொண்டார் என்பதுவே உமது மகிழ்ச்சியின் ஆரம்பமாகும்.

"தாவீது பெலிஸ்தனைக்கொன்று திரும்பி வந்த பின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல் பாடலுடன் புறப்பட்டு

மேளங்களோடும், கீத வாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறை முறையாகப் பாடினார்கள்'' (1சாமுவேல் 18:6-7).

தாவீது கோலியாத் என்னும் பெரிஸ்தனுடன்எதிர்த்துப் போராடி அவனை மேற்கொண்டான். அந்த நாள் மற்றொரு சந்தோஷகரமான நாள். இஸ்ரவேலரை எல்லாம் நடுங்கச்செய்து, நிந்தித்து, தூஷித்து அநேகரை பயமுறுத்தி வந்த அந்த இராட்சச வீரனைத் தாவீது சுலபமாகக்கொன்று போட்டான். அந்த நாளில் அவனுக்கு எவ்வளவு பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாயிருக்கக் கூடும்!

நம்மில் அநேகரும் வாழ்க்கையில் பல கோலியாத்துக்களைச் சந்திக்க வேண்டியதிருக்கிறது, சாத்தான் பற்பல ரூபங்களில் வருவான். உங்கள் வாழ்க்கையிலும் சத்துரு இராட்சதனைப் போன்ற வடிவெடுத்துப் பன்முறை வரவில்லையா? அவனது உபாயதந்திரங்களில் நீர் தோற்கடிக்கப்பட்ட நாட்களும், நேரங்களும் உம் நினைவிற்கு வருகிறதல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே சோதிக்கும்படி பிசாசு வந்தான் என்றால் (மத். 4) அவன் எந்த விசுவாசியையும் விட்டு வைக்கப்போவதில்லை! ஆனால், அதேசமயத்தில் நமது ஆண்டவர் பிரயோகித்த தேவவசனமாகிய பட்டயத்தைக் கொண்டே நாமும் கோலியாத் போன்று எதிரிட்டு வந்தவனைத்தோற்கடித்து, வெட்கத்திற்குள்ளாக்கவில்லையா? நம்மில் வாழும் மகா வல்லமையுள்ள கர்த்தராகிய இயேசு, ஒருவனையல்ல, பல கோலியாத்துக்களை வென்று, விரட்டியடித்த பல சந்தர்ப்பங்களை நிச்சயமாகவே நாம் நினைவுகூருவோம், இவ்விதமாக நாம் வெற்றியடைந்த வேளைகளிலெல்லாம் நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கு தக்கசான்று உண்டு என்றபோதிலும் அதுஇனி வரக்காத்திருக்கும் சந்தோஷத்தோடு ஒப்பிடத்தக்கதல்ல. தீமையின்மேல் நாம் அடைந்த ஜெயம் நமக்கு சந்

தோஷத்தைக் கொடுப்பதைக் காட்டிலும், அதைவிட மேலான மகிழ்ச்சியை நமது தேவன் நமக்கென்று தமது ஆதினத்தில் வைத்திருக்கிறார்.

''அமலேக்கியர் பிடித்துக் கொண்டுபோன எல்லாவற்றையும், தன் இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக் கொண்டுபோன எல்லாவற்றிலும்; சிறியதிலும், பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும் ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்'' (I சாமுவேல் 30:18-19).

அமலேக்கியர் சிக்லாகுவை சுட்டெரித்து, தாவீதின் மனைவிகளையும், அவனோடிருந்தவர்களின் மனைவி மக்களையும், பண்டம் பாடிகளையும், சொத்துசுகங்களையும், கொள்ளையடித்துச் சென்றதுடன் அவ்வூரையே தரை மட்டமாக்கிச், சுட்டெரித்துச் சென்று விட்டனர். போர்முனையிலிருந்தும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்த தாவீதும், அவன் வீரர்களும் இந்த அலங்கோலக் காட்சியைக் கண்டு வேதனையுற்றவர்களாய் அழுது புலம்பினர். இதற்கெல்லாம் தாவீதுதான் பொறுப்பாளி எனக் குற்றஞ்சாட்டி, அவனைக் கல்லெறிய வேண்டுமென்று தாவீதுடனிருந்த எல்லாரும் ஏகமனதாய்த் தீர்மானித்தார்கள் என்று பார்க்கிறோம். இதற்கெல்லாம் மூல காரணம் தாவீது செய்த ஒரு சிறு தவறுதான் என 1 சாமுவேல் 29ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். தனது பழைய விரோதியாகிய சவுலைக் கொன்று அகற்றி விடுவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணி, கர்த்தரிடம் விசாரிக்காமலே, தாவீது பெலிஸ்தரோடு கூட்டுச்சேர்ந்து போர்க்களம் சென்றதுதான் அந்தத்தவறு. அவன் திரும்பி வருவதற்குள்ளாக இவ்வளவு பெரிய நஷ்டம் நேர்ந்துவிட்டது!

நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவரைத் துக்கப்படுத்தி, அவரது சித்தத்திற்கு விரோதமாகசெயல்படும்போதெல்லாம் நாம் கட்டாயம் கஷ்ட நஷ்டம் அடையத்தான்

செய்வோம். ஆனால் 30ஆம் அதிகாரத்திற்கு நாம் வரும்போது, தாவீதுக்கு புத்தி தெளிந்தது என்றும், அவன் சுயஉணர்வடைந்தவனாய், தனது பிழைக்காக மனம் வருந்தி தேவனிடமாகத் திரும்பினான் என்றும் வாசிக்கிறோம். பிறகு தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். அதன் பலனாக "தாவீது எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டான்" என்று 19ஆம் வசனத்தில் காண்கிறோம். தாம் இழந்ததைத் திரும்பப் பெறுவோம் என்பதற்கான எவ்வித நம்பிக்கையும், அறிகுறியும் இல்லாதிருந்தும், அவர்கள் எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அதற்கும் அதிகமாகவே சம்பாதித்தார்கள் என்றும் பார்க்கிறோம். "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று சொல்லக்கூடிய முறையில் தாவீது தன் நண்பர்களுக்கும் பல அன்பளிப்புகளை அனுப்பி வைத்தான். அந்த நாள் தாவீதின் வாழ்க்கையில் ஓர் இன்ப நாள்! ஏனென்றால், அன்புள்ள தேவன் அவன் பாவத்தை மன்னித்தார். அடுத்ததாக அவன் தன் சத்துருவை மேற்கொண்டு, தனக்குரிய எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டான், அதற்கு மிகுதியாகவும் திருப்பிக்கொண்டான்.

தாவீதைப்போல நாமும் பல தவறுகள் இழைக்கின்றோம். நாம் மறுபடியும் பிறந்திருந்த போதிலும், தேவனுடைய பிள்ளைகளாகி அவரது அன்பை ருசித்திருந்த போதிலும், கர்த்தரின் சித்தத்தைக் கண்டுபிடிக்கக் கற்றிருந்த போதிலும், சில வேளைகளில் அவரது நோக்கத்தையும், சித்தத்தையும் அறிவதற்குப் பதிலாக நம் சுய ஞானத்தின்படியும், சுய விருப்பத்தின்படியும் செயல்படுகிறோம். இவ்வாறு தாவீதைப்போல உங்களது தவறு அல்லது மதியீனத்திற்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றீர்களா? அவரது சித்தத்தை அறிந்திருந்தும் நீர் வழி தவறிச் சென்றுவிட்டதால், உமது சார்பாக உமது நண்பர்களும் இல்லை.

"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமான திஞல், அவனைக் கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்; தாவீது தன் தேவனுகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்" *(1 சாமுவேல் 30:6)*:

இப்பொழுது தாவீதின் நண்பர்களே அவனைக் கல்லெறிந்துகொல்ல முடிவு கட்டினர். நீர் தவறு செய்யும்போது இதே பிரகாரம் உம்மைப் பரிவுடன் விசாரிக்கவேண்டிய உமது நண்பர்களே உமக்குச் சத்துருக்களாக மாறிவிடலாம். ஆனுல் உமது ஆண்டவரண்டை நீர் திரும்பி, அவரது சித்தத்தை நிறைவேற்ற முயற்சிக்கும்போது, நீர் கழுவி சுத்திகரிக்கப்படுகிறீர்; உம்முடைய பாவங்கள் மூடப்பட்டு மன்னிக்கப்படுகின்றன. இவ்வாறு தேவன் உமது மதியீனத்தை மன்னித்தாரென்ற மகிழ்ச்சி கொள்வதுடன், மறுபடியும் தேவன் உம்மை உபயோகிப்பார் என்ற நிச்சயத்தையும் பெறுவீர்; அறுந்துபோன உறவு மீண்டும் ஏற்பட்டதென்றும், உம்முடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது என்றும் உம்முடைய இருதயம் ஆனந்த மகிழ்ச்சியிஞல் நிரப்பப்படும்.

"ஆனுலும் தாவீது சீயோன் கோட்டையைப்பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று. எவன் சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரையும் தாவீதின் ஆத்துமா பகைக்கிற சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிருனே, அவன் தலைவனுயிருப்பான் என்று தாவீது அன்றையதினம் சொல்லியிருந்தான்: அதஞல் குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது என்று சொல்லுகிறதுண்டு. அந்தக் கோட்டையிலே தாவீது வாசம் பண்ணினுன்" *(2சாமுவேல் 5:7-9)*.

தாவீது சீயோனை ஜெயித்துப்பிடித்தநாளானது மற்ஞெரு மகிழ்ச்சிக்குரிய நாளாக அமைந்தது. சீயோனிலிருந்து எபூசியர் அனைவரையும் துரத்தி விடுவதற்கு யோசுவா தவறிவிட்டான். இந்த எபூசியர் விருத்தியடைந்து தாவீதையே பரி

காசம் பண்ணினார்கள். ஆனால் கர்த்தருடைய கிருபையினா லும், பெலத்தினாலும் தாவீது அவர்களை முறியடித்து விரட் டினான். ஆம்; அந்த நாள் தாவீதின் வாழ்க்கையில் ஓர் இன் பமான நாளாகும்! ஏனென்றால் தேவன் தன்னைத் தெரிந்து கொண்ட நோக்கத்தைப்பற்றி அவன் மேலும் அறிந்து கொள்ள ஆரம்பித்தான். தம்முடைய ஜனத்தைப்பற்றி தேவன் கொண்டிருந்த மேலான பரலோகத்திட்டத்தை அவன் அதிகமாய் அறிந்து கொள்வதற்கும், எபூசியர் எரு சலேமிலிருக்கும் வரைக்கும் அத்திட்டம் நிறைவேற்றப்பட முடியாதென்பதையும் தாவீது அறிந்துகொண்டான்.

எகிப்தின்மீது பத்து வாதைகளை அனுப்பிய தேவன், செங்கடலை இரண்டாகப் பிளந்த தேவன், தம் மக்களுக்காகப் போராடி எரிகோவின் மதில்களைத் தரைமட்டமாக்கிய தேவன், இப்பொழுது கானான் நாட்டில் வாழ்ந்த ஏழு ஜாதி களையும் விரட்டியடிப்பதற்காகத் தம் ஜனமாகிய இஸ்ர வேலைச் சார்ந்திருந்தார்! அவர்களே அதைச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்த்திருந்தார். எகிப்திலிருந்து விடுதலைபெற்று வெளியேறின தேவ ஜனமே இப்பெரும் பணியை நிறைவேற்ற வேண்டுமென்பது பரலோக திட்டத் தின் ஒரு பகுதியாகும். தேவன் நினைத்திருந்தால், இந்த ஏழு ஜாதிகளையும் நியாயந்தீர்த்து, வானத்திலிருந்து அக்கினி யனுப்பி அவர்களை அழித்துப்போட்டிருக்கலாம். அவர் எகிப் தில் நடப்பித்ததையும், எரிகோவுக்குச்செய்ததையுமே எபூசிய அரணுக்கும் செய்ய முடியாதா? ஆனால், தேவன் அவ்வித முறைகளைக் கையாளுவதற்குக் கருதவில்லை. அதற்குப் பதி லாக, தம்முடைய மக்களையே நியாயந்தீர்ப்பதற்கென தம்மு டைய உடன் ஊழியர்களாகவும், பங்காளிகளாகவும் இருக் கும்படி தெரிந்து கொண்டார்.

இக்காலத்திலும் தம்முடைய பரலோகதிட்டத்தைநிறை வேற்றுவதற்கு ,தேவன் தம்முடைய ஜனத்தையே சார்ந்திருக் கிறாரென்பதை நீர் முழுவதும் கிரகித்துக் கொண்டீரா? நாம்

அநேகமாக தேவனை மோசம் போக்குகிறோமல்லவா? எபூசிய ரோடுள்ள நமது தொடர்பை அறுத்துவிட்டு, தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும், நாம் அவர்களோடு ஐக்கியப் பட்டு, சம்பந்தங்களும் வைத்துக்கொண்டு அவர்களை நமது நடுவிலே வாழவிடுகின்றோம். ஆகையால்தான் இரட்சிக்கப் படாத அநேகர் பாதிரிமார்களாகவும், மூப்பர்களாகவும், கண்காணிகளாகவும் பதவி ஏற்கின்றனர். எத்தனையோ விசு வாசிகள் பணத்திற்காகவும், படிப்பிற்காகவும், நிறம், பதவி, குலம் கோத்திரமெனவும் பார்த்து அவிசுவாசிகளாகிய 'எபூ சியர்களை' மணந்து கொள்ளவில்லையா? இது ஆண்களிலும், பெண்களிலும் சகஜமாகக் காணப்படுகிறது. எனவேதான், தேவனுடைய ஜனத்தினிடம் வறட்சியும், கனியின்மையும் பரவலாகக் காணப்படுகின்றன. இஸ்ரவேலின் சரித்திரத்தி லும் எபூசியர் நிமித்தமாகவே தேவதீர்மானம் உடனடியாகச் செயல்படாமல் நானூறு ஆண்டுகள் சுணக்கம் ஏற்பட்டது. அவர்கள் முற்றிலுமாக வெளியேற்றப்பட வேண்டியதாயிருந் தது. இச்சந்தர்ப்பத்தில் தேவன் தாவீதுக்குத் தந்தருளின ஞானத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

சீயோனை முழுவதுமாகச் சுதந்தரித்துக் கொண்டதுடன், அதற்கு தாவீதின் நகரமென்று பெயர் சூட்டினான். "தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்" (2 சாமு 5:10). இருந் தாலும் அவனுடைய சந்தோஷம் பூரணப்படவில்லை.

ஆவிக்குரியவர்கள் அவிசுவாசிகளுடன் நட்புக்கொண்டு பல காரியங்களிலும் இணங்கிப்போகவோ அல்லது கூட்டுறவு கொள்ளவோ மறுக்கும்போது, அவர்கள் அவ்வித ஐக்கியத்தி னால் ஏற்படும் தீயவிளைவுகளை அறிந்து கொண்டனரென்று அர்த்தமாகும். எபூசியர் இருப்பதினால் தேவதீர்மானம் தடைப்படுகிறதென்பதைக் கண்டுகொள்ளத் துவங்கி விட்ட னர். தேவன் தம்முடைய பரலோக திட்டத்தை நிறைவேற் றுவதற்குத் தங்களையே சார்ந்திருப்பதைப் புரிந்து கொண்ட

வுடன், ஆவிக்குரியவர்கள் தங்களது பழைய வாழ்க்கையினின்றும், இவ்வுலகத்தாரிடமிருந்தும் பிரித்தெடுக்கப்பட வேண்டுமென்பதை விளங்கிக்கொள்ளும் நாள் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய நாளாகும். இந்த திவ்ய வெளிப்பாடும்கூட தொடக்க நிலைதான் என்பதை நாம் உணர வேண்டும்.

"தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான். அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான்; அப்பொழுது கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்; இஸ்ரவேலின் மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது'' (2 சாமுவேல் 24 : 24, 25).

தாவீதின் வரலாற்றில் மற்றும் ஒரு மகிழ்ச்சிகரமான நாள், தேவன் தாவீதை எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கும் களத்திற்குக் கொண்டு வந்த நாளாகும். தேவஜனமாகிய இஸ்ரவேலரைத் தொகையிடத் துணிந்த பாவத்தின் நிமித்தம் தேவனால் வாதை அனுப்பப்பட்டது. தாவீது வெற்றி பெற்ற ஒவ்வொரு யுத்தமும், தன் பெலத்தினாலும், தனது படையின் பராக்கிரமத்தினாலும் அல்ல என்றறிவான். தேவன் தாமே அவர்களுக்காக யுத்தம் செய்து அற்புதங்களைக் காண்பித்தார் என்பதைத் தாவீது நன்கறிந்திருந்தும் மக்களைக் கணக்கெடுக்கத் தப்பெண்ணம் கொண்டான். ஆதலால் தேவன் தாவீதைத் தண்டிக்க வேண்டியதாயிற்று! அவனும் எபூசியனாகிய அர்வனாவின் களத்தண்டையில் வந்து மனந்திரும்பினான்.

அது கொடிய பாவம் என்றாலும், தேவன் அவனை மன்னித்து விட்டதால் அந்தநாள் தாவீதின் வாழ்க்கையில் மற்றுமொரு மனோகரமான நாள். உமது குருட்டாட்டத்தினால், நீர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் செய்த பெரும் பாவத்தைத் தேவன் உமக்கு மன்னிக்கும்போது, அது உமது ஜீவியத்தில் ஓர் இன்பமான நாள் அல்லவா?

ஆ! நமது தேவன் எவ்வளவு கிருபையும், இரக்கமுமுள்ளவராயிருக்கிறார்! அவரது உருக்கமான இரக்கங்கள் எத்தனை பெரியதும் மிகுதியுமாயிருக்கின்றது! ஏனெனில் நம்முடைய பாவங்கள் எவ்வளவாயிருந்தபோதிலும், ''அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலுமிருக்கிறார்.'' நம்மை முழுவதுமாக மன்னித்துச் சேர்த்துக்கொள்கிறார்.

தாவீதுக்கு அந்தத் துக்க நாளை இன்ப நாளாகக் கொண்டாட மாற்றின அதே தேவன் நமக்கும் அதைப்போன்ற சந்தோஷமான நாட்களைத் தருகின்றார். தாவீதைத் தண்டித்த அதே இடம் தேவனுடைய ஆலயம் அமையும் புண்ணிய ஸ்தலமாயிற்று (2 நாளாகமம் 3 : 1). அந்நாள் முதல் தாவீதின் மெய்யான பூரண மகிழ்ச்சி துவங்கிற்று. இதற்கு முன் மகிழ்ச்சிக்குரிய நாட்கள் அநேகம் உண்டாயிருப்பினும், அவையெல்லாம் பலிபீடத்தின் அருகில், தேவாலயம் கட்டப்பட வேண்டிய ஸ்தானத்தில் அவன் பெற்ற மகிழ்ச்சிக்கு ஈடு இணையாகாது.

''இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொன்னான். தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு மண்டபமும், அதின் அறைகளும், அதின் பொக்கிஷசாலைகளும், அதின் மேல்வீடுகளும், அதின் உள்ளறைகளும், கிருபாசன ஸ்தானமும் இருக்க வேண்டிய மாதிரியையும், இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான்'' (1நாளாகமம். 28 : 10,11,19.).

இப்பொழுது தேவன் தமது ஆலயத்திற்கான மாதிரியையும், திட்டத்தையும் தாவீதினிடம் கொடுத்ததுடன், அவன்

குமாரனுகிய சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடிப்பான் என்ற உறுதியையும் அவனுக்குக் கொடுக்க முடிந்தது. இப்பொழுது தாவீது அடைந்த மகிழ்ச்சியானது முற்றிலும் வேறுபட்டதாயிருந்தது; இது தேவனுடைய வீட்டைக் கட்டுவதற்கான பரலோக மாதிரியை வெளிப்பாடாகப் பெற்றுக் கொண்டதினுல் கிடைத்த சந்தோஷம். அதனுல், ''ராஜாவும் ஜனமனைத்தும் சந்தோஷப்பட்டு களிகூர்ந்தார்கள்.'' மூந்தின அனுபவங்களின் வழியாகத் தாவீது சென்றிருக்காவிடில், இப்பொழுது தாவீது இந்த ஆனந்தத்தைப் பரிபூரணமாய் அனுபவித்திருக்க முடியாது. அவனது வாழ்க்கையில் குறுக்கிட்ட ஒவ்வொரு கட்டமும் இன்றியமையாததுதான். நீங்களும் இவ்விதமான சந்தோஷத்தின் இறுதி அனுபவத்திற்குள் வரவேண்டுமென்பதே எங்கள் ஆவலாயிருக்கிறது.

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன் என்றுலும், பரலோகமாதிரியின் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதனுல் உண்டாகும் சந்தோஷமும், அத்திட்டத்தில் நாமும் பங்கு கொள்ளுமாறு தேவன் நம்மைத் தெரிந்து கொண்டுள்ளார் என்ற அறிவும், நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெற்ற பரலோக சந்தோஷத்திற்கும் மேலானதாக இருக்கிறது. இந்த சந்தோஷத்தில் நீர் இப்பொழுதும் இனி வரும் காலங்களிலும், தேவன் தமது ஜனத்தைப்பற்றி கொண்டிருக்கும் நோக்கத்தையும், தீர்மானத்தையும் அறிந்து கொள்ளும் நிலையில் வருகிறீர். ஆதலால் சந்தோஷத்தின் மேல் சந்தோஷம் அடையவும், மகிழ்ச்சியின் மேல் மகிழ்ச்சி பெறவும், இறுதியாக நமது பெலனுகிய கர்த்தரின் பரிபூரண ஆனந்த மகிழ்ச்சிக்குள் நாம் வந்தடைய வேண்டுமென்றும் ஜெபிப்போமாக.

4

கற்பதிலுள்ள மகிழ்ச்சி

''தேவனுடைய வழி உத்தமமானது.''
(சங்கீதம் 18:30).

இந்த உலகக் காரியங்களில் சிறப்புத்தேர்ச்சிபெறுவதற்கு உலக ஞானம் தேவையாயிருப்பதுபோல, ஆவிக்குரிய காரியங்களை அறிந்துணர்ந்து கொள்வதற்கு ஆவிக்குரிய ஞானம் தேவைப்படுகிறது. கர்த்தருடைய காரியங்களெல்லாம் குறைவற்றதும், செம்மையும், உத்தமமும், ஒழுங்கானவையுமாயிருக்கின்றன. ''அவருடைய வழி உத்தமமானது.'' தேவன் செய்வதெல்லாம்ஒழுங்குள்ளதும், பரிபூரணமுள்ளதும், நிறைவுள்ளதும், பரிசுத்தமுமாக இருக்கின்றன! இவ்விதமாகவே நம் ஒவ்வொருவரையும், 18ஆம் சங்கீதம் 32ஆம் வாக்கியத்தில் தேவன் வாக்களித்திருக்கிறபடி தம்முடைய உத்தமமான, பூரண வழிக்குக் கொண்டு வருவதற்காக வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார் "என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே.'' எப்படி அவருடைய தெய்வீக விதிகள் அல்லது நியமங்கள் நம்முடைய சந்தோஷத்தை முற்றிலும் நிறைவுள்ளதாக்குகின்றன என்பதைப் பார்ப்போம்:

தேவன் ஒவ்வொரு காரியத்தின் முடிவையும் அதன் ஆரம்பத்திலிருந்தே பார்க்கிறார். இப்போது என்ன கிரியை நடப்பித்துக் கொண்டிருந்தாலும், காரியத்தின் கடைத்தொகுதியையே கர்த்தருடைய கண்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றன. ''அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்.'' என்று ஏசாயா 46:10 இல்-

கர்த்தர் உரைக்கிறதுபோல, ஒவ்வொரு காரியத்திலும் அவர் ஆதிமோடந்தமாய் அக்கரையுள்ளவராயிருக்கிறார். இது நம்மால் புரிந்து கொள்ள முடியாத புதிராயிருக்கின்றது. அற்ப மனிதர்களாகிய நமது திராணிக்கு மிஞ்சின தெய்வீகச் செயலாக இருக்கின்றது. ஆனால் நாம் பொறுமையாகக் காத்திருப்போமென்றால் தேவன்தாமே நமக்குப் போதிப்பார். கர்த்தரால் இவ்விதம் போதிக்கப்படுவது நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. தாவீதின் வாழ்க்கையிலிருந்தே மேலும் பல சான்றுகளுடன் இவ்வுண்மையைத் திருஷ்டாந்தப் படுத்த இந்த அத்தியாயத்தில் முயற்சிப்போம். தேவன் தன்னைத் தெரிந்து கொண்ட உயர்ந்த நோக்கம் பலகாலமாக தாவீதுக்குத் தெரியாதிருந்தும், தாவீதை அழைத்த நாள் முதல் தேவன் அவனைக்குறித்துப் பெரிய நோக்கங்கள் வைத்திருந்தார். நாமும் மனந்திரும்பி கர்த்தரண்டை முதலாவது வரும்போது நம்மை இரட்சிப்பதனால் நம்மைக்குறித்து தேவன் எத்தனை பெரிய காரியங்களை நிர்ணயம் பண்ணியிருக்கிறார் என்று நமக்குத் தெரிவதில்லை. அவ்வேளையில் நமது பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்ற கவலை மட்டுந்தான் நமக்கிருந்தது. அவரால் கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, நீதிமானாக்கப்படவேண்டுமே என்ற கரிசனை மட்டுந்தான் நம்மிடமிருந்தது. அதையடுத்து தேவன் நமக்குக் கற்பித்து, தமது வழியை உணர்த்தும்போது நாம் அதை உதறித்தள்ளுகின்றோம், அல்லது எதிர்த்துத் தர்க்கிக்கின்றோம். ஆனால், பலவகையான உபத்திரவங்கள், நெருக்கடிகளின் மூலமாகத் தேவன் தமது தீர்மானத்தைப் படிப்படியாகவும், தெளிவாகவும் நமக்கு வெளிப்படுத்துகிறார் என்பதைத் தேவனுடைய வார்த்தை நமக்குப் போதிக்கின்றது. மறுபிறப்பின் அனுபவத்திற்குப் பிறகு வாழ்க்கையில் நேரிடும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஓர் ஆழமான, ஆவிக்குரிய, நித்திய பரலோகப்பொருளை வெளிப்படுத்துகின்றது. தேவன் தம்முடைய ஆலோசனையின்படியும், சித்தத்தின்படியும், திட்டத்தின்படியும் தம்முடைய சொந்த வழியிலேயே நம்மை நடத்துகின்றாரென்றும்

நாம் காண்கிறோம். நாம் இயல்பாகத் திறமைமிக்கவர்களாகவே இருந்தாலும், தேவனுடையமனத்தை நாம் அறிந்து கொள்வதற்குப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதன் தேவையைக் கற்றுக்கொள்வோம்.

ஆரம்பமுதலே தாவீது மிகுந்த ஞானமுள்ளவனாயிருந்தான். அவன் "காரியசமர்த்தன், சௌந்தரியமுள்ளவன்" என்று வருணிக்கப்படுகின்றான். இது அவனது வாலிபப் பருவத்தில் அவனுக்குக் கிடைத்த நற்சான்று. அக்காலத்திலேயே மறைவான இடங்களில் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது தேவன் அவனை ஆயத்தஞ்செய்ய ஆரம்பித்துவிட்டார். ஆகிலும், அவன் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்குப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. இப்படி தாவீது ஞானியும், புத்திசாலியும், அழகுள்ளவனும், பராக்கிரமனும், தளகர்த்தனும், பலரும் பார்த்துப் பொறாமைப்படக்கூடிய பல பண்புகளும், தகுதிகளும் பெற்றவனாயிருந்தாலும், நாட்டிலேயே சிறந்தவன் என்று பெயர் பெற்றிருந்தாலும், தேவன் ஏன் அவனில் அன்புகூர்ந்து அவனை மாத்திரம் தெரிந்துகொண்டார் என்ற இரகசியத்தைக் கர்த்தர் அவனுக்குக் காட்டப் பல ஆண்டுகள் ஆயின.

இதேபோன்றுதான் கர்த்தராகிய இயேசு நம் ஒவ்வொருவரோடும் செயலாற்றுகிறார். அவருடைய எல்லையில்லா அன்பினிமித்தமே அவர் இவ்விதம் நம்முடன் உறவு கொள்கின்றார். நீர் யாராயிருப்பினும் சரி, உமது கடந்தகால வாழ்வு எவ்வளவு பாவம் நிறைந்ததாய், உம் வழிகள் எவ்வளவு வேதனையும், வெட்கக்கேடானதாய் இருந்தாலும் சரி, தேவன் உம்மைக் கழுவி, சுத்திகரித்து, புதுப்பிக்க ஆவலுள்ளவராயிருக்கிறார். ஒரு வேளை நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாகவும், ஊழியக்காரர்களாகவும் இருந்தும்கூட உம்மிடம் அன்பும், பட்சமும், பரிவும் காண்பிக்கத் தவறியிருந்தாலும் எங்களுடைய தவறுகளும், குறைவுகளும் உமதுபால் தேவன்

கொண்டுள்ள அன்பை மாற்றாது: ஓ பாவியே! தேவனுடைய வசனத்திலும், வல்லமையின் ஆதாரத்திலும் தேவன் உம்மை அநாதி சிநேகத்தால் சிநேகிக்கிறார் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். நீர் வெகுகாலமாக அவரை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, துக்கப் படுத்திக்கொண்டே இருந்தாலும், அவருடைய மகிழ்ச்சியையே உமக்கு அருள ஆசிக்கும் அவருடைய அன்பு உமக்கு மாறாததாயிருக்கிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்" (செப்பனியா 3 : 17). மனிதர்கள் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம்; பொறுமையும் கொண்டிருக்கலாம். ஆனால், தேவன் சந்தோஷமாய்க் காணப்படுவதை எப்பொழுதாவது பார்த்திருக்கின்றீர்களா? பற்பலவகையான மனுஷீக மகிழ்ச்சிகளை நன்கு அறிவீர்கள். ஆனால், நம்முடைய சிருஷ்டிகர்த்தாவாகிய தேவன் சந்தோஷப்படும்போது அவரது தோற்றம் எப்படியிருக்கும் என்று நம்மில் எவருமே கற்பனை செய்ய முடியாது. ஆகிலும், தேவன் சந்தோஷமாய் மகிழ்கிறார் என்பது செப்பனியா 3 : 17இன்படி மெய்தான்.

மனிதர் பாடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் தூதர் பாடுவதைக் கேட்கும் சிலாக்கியம் நமக்கு ஏற்படுகிறதென்று அநுமானித்துக் கொள்வோம். அப்பரலோக கீதம் இவ்வுலகில் பாடப்படும் எந்தச் சிறப்பான கீதத்தையும்விட அதிக இனிமையாகவும், அழகாகவும் இருக்கும். ஆனால், ஆண்டவரே பாடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அது எவ்வாறிருக்கும்! நீங்கள் பாடுவது உங்களுக்கே தெரியும். பிறர் பாடக் கேட்டிருக்கிறீர்கள்! தூதர் பாடுவதை கற்பனை செய்து கொள்ளலாம்; ஆனால் உம்முடைய ஜீவனுள்ள

அன்புள்ள, ஆத்தும நேசர் உம்மைக்குறித்துச் சந்தோஷ மகிழ்ச்சியால் பாடுவதைக் கேட்பது கிடைத்தற்கரிய பெருமை அன்றோ!

இதுவே தேவன் நமக்கருளும் வாக்குத்தத்தமாயிருக் கின்றது. அவர் உம்மில் அன்புகூர்ந்து, உம்மை இரட்சித்து, தமதன்பை உமது இருதயத்தில் ஊற்றி உம்மைக்குறித்து ஆனந்தத்தால் பாடி மகிழ ஆரம்பிப்பார். தான் பெற்றெ டுத்த சிசுவை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு தாயை கவனித் துப் பாருங்கள். தான் பெற்றெடுத்த குழந்தையின்பால் அவளுக்கிருக்கும் சொல்லொண்ணு அன்பினுல் அதை இறுகக் கட்டித் தழுவி அதனை முத்தமிடுகின்ருள்! அதன் காலையும் தன் வாயினுள் கொண்டு செல்ல அருவருக்க மாட்டாள்! அவள் செய்வதென்னவென்று அவளைக் கேட்டுப்பாருங்கள். தன் அன்பையெல்லாம் அக்குழந்தையினிடம் ஊற்றி விடுவ தாக அவள் கூறுவாள். அவள் முகம் பொலிவுடன் சோபிக் கின்றது. சந்தோஷத்தால் அவள் பெருமிதம் கொள்கின் ருள்! அவள் தன் அன்புப் பெருக்கால் பாடும்போது அவள் கீதம் என்ன அருமையாயிருக்கின்றது. நாம் மறுபடியும் பிறந்து அவருடைய அன்பை ஏற்றுக்கொள்ளும்போது தேவ னும் நம்மைக்குறித்து இவ்விதமாகவே பாடி மகிழ்வார். அப்பொழுது அது தூதரின் கீதத்தொனியைவிட நேர்த்தி யான கீதமாக இருக்குமென்பதில் சந்தேகம் ஏதுமில்லை, நமதாண்டவர் தமது அன்பை மென்மேலும் நம்மேல் ஊற்றி விடும் மகிழ்ச்சியும் அதுபோலவே இருக்கின்றது. தெய்வீக பெலத்தால் நம்மை இடைக்கட்டி நிரப்பும் கர்த்தரின் ஆனந்த மகிழ்ச்சியும் அவ்விதமாகவே இருக்கின்றது.

இவ்வித அளவற்ற அன்பை நாம் பெற்றுக்கொள்ளத் தக்கதான நிலையையும் பலத்தையும் அடையவேண்டும்,என்று தேவனுடைய வசனத்திலிருந்து நாம் காண்கிருேம். தேவ னுடைய அன்பினுக்கு உயரம், ஆழம், நீளம், அகலம் என நான்கு மிகப்பெரும் பரிமாணங்கள் உண்டு; அதுவே தெய்

வீக அன்பு. ஆனால், மனித இனத்தின் அன்புக்கு ஒரே ஒரு பரிமாணம்தான் உண்டு, அது ஒருவேளை 10, 30, அல்லது அதிகமாக 50 ஆண்டுகள் வரை நிலைத்திருக்கக் கூடும். இன்று தொடங்கி, நாளை அவ்வன்பு மறைந்துவிடக் கூடியது. ஆனால், தேவனுடைய அன்பிற்கோ வரையறையே இல்லை. அது நித்திய நித்திய காலமாய் நிலைத்திருக்கக்கூடியதாகும்; மனிதன் செல்லக்கூடியதான எவ்வளவு அதலபாதாளமானாலும், அந்த உன்னத அன்பும் அவனைத் தொடர்ந்து செல்லக் கூடியது. உனது பாவங்கள் அந்தகாரமான நரகத்தின் ஆழத்திற்கு உன்னை இழுத்துச் செல்லும்; உன் பாவக் கிரியைகள் உன்னை அழிவின் குழிக்குக் கொண்டு செல்லக் கூடும்; உன்னுடைய இச்சைகள் அழுக்கும், இருளும் நிறைந்த அந்தகாரமான இடத்துக்கு உன்னைக் கொண்டு செல்லும். அங்கே, அந்தக் கெட்ட குமாரனைப் போல, உன்னுடைய உணவும் பன்றிகளின் உணவைப் போன்றதாய் இருக்கும். என்றாலும், தேவனுடைய அன்பானது, உன்னை அந்த உளையான சேற்றிலிருந்தும் தூக்கி எடுத்து, நிலையான உன்னதத்திற்கு உயர்த்தக்கூடியது.

'என் மகனே, நீ பிரயோஜனப்படமாட்டாய்' என்று உன் தந்தை ஒருவேளை கூறலாம்; உன் தாய் மனம் ஒடிந்து, 'உன்னைப் பற்றிய என் நம்பிக்கைகள் அனைத்தும் சிதறி விட்டனவே' என்று கூறலாம்; உன் சகோதரர்களும், சகோதரிகளும்கூட உன் பாவ வாழ்க்கை காரணமாக உன்னைத் தமக்குச் சொந்தம் பாராட்ட வெட்கப்படலாம். 'இந்த மனிதன் இரட்சிக்கப்படத்தக்கதான நம்பிக்கை அறவே அற்றுப் போயிற்று' என்று போதகர்களும்கூட கூறலாம். என்றாலும், உன் கர்த்தர் உன்னைக் கைவிடுவதில்லை; இன்னும் உன்னைப்பற்றிய நம்பிக்கை அவருக்கு உண்டு.

நீ எவ்வளவாய் பாவத்தின் படுகுழியில் அமிழ்ந்திட்டாலும், எவ்வளவு துன்மார்க்கமான காரியங்களில் வீழ்ந்துவிட்டாலும், கடந்தகாலங்களில் நீ எவ்வளவாய் முரட்டாட்

டமுள்ளவனுய் விளங்கியிருந்தாலும், தேவ அன்பு உன்னை மீட்டுக்கொள்ள வல்லதாய் இருக்கிறது. ''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால அவர்களை முற்று முடிய இரட்சிக்கவல்லவராயும் இருக்கிருர்'' (எபிரெயர் 7 : 25).

ஓர் இரகசியம் உண்டு:

உன்னுடைய கடந்த கால வாழ்க்கை அவமானகரமான அல்லது வெட்ககரமானதாய் இருந்தாலும் நீ தேவனுடைய உடன் ஊழியக்காரனுகலாம் என்பதே அந்த இரகசியமாகும். இதுதான் தேவ அன்பின் ஆச்சரியகரமான செயல். இந்த அன்பின் அளவு அதிகமாக இருப்பதன் காரணமாக, அதன் கருத்தை முழுவதுமாக நீ அறிந்து கொள்ளப் பல காலம் காத்திருக்க வேண்டியதாய் இருக்கும். உனது மட்டுப்பாடுகளை யெல்லாம் அவர் அறிவார்; எனினும், உன்னை அவர் நேசிக்கிருர். அவர் சித்தப்படி, நீ இருக்கவேண்டிய நிலைக்கு உன்னை நடத்த வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். ஆனுல், நீ, உன்னை அவர் அழைத்த அவருடைய ஊழியத்திற்காகவும், அந்த ஊழியத்திற்கு அவர் உன்னைப் பயிற்றுவிக்கத் தக்கதாகவும், தேவன் உன்னை ஆயத்தப் படுத்தும்படி உன்னை அவருக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும்.

''எபூசியனுகிய ஓர்னுனின் களத்திலே கர்த்தர் தனக்கு உத்தரவு அருளினதைத் தாவீது அக்காலத்திலே கண்டு அங்கேதானே பலியிட்டான்... அப்பொழுது தாவீது: தேவனுகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே என்றுன்'' (I நாளா. 21: 28; 22:1).

தேவன் தாவீதை முதன்முதலாகத் தெரிந்து கொண்ட போது, அந்த முழுக் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருந்தது என்பதற்குச் சந்தேகமே இல்லை. சாமுவேலின் அறிக்கையைக் கேட்ட அவனுடைய தந்தை, தாய், சகோதரர்கள்

அனைவருமே மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். எனினும் அவர்கள் இந்த உலகத்துக்கடுத்த ராஜரீகத்திற்கு மிஞ்சி எதையும் எண்ணிப் பார்த்திருக்க முடியாது. தாவீதின் உயரிய பதவியின் காரணமாகத் தங்களுக்குக் கிடைக்கப்போகும் அனுகூலங்களையும், ஆதாயங்களையும் பற்றியே அவர்கள் எண்ணிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், தேவன் தாவீதை அழைத்த அழைப்பானது, சாதாரணமான இந்த உலகத்தின் அரச பதவியை மட்டும் அளிக்கும் நோக்கம் கொண்டதல்ல; அதற்கும் மேலான, பெரிதான இராஜ்யத்தை அவர் அவனுக்கென்று ஏற்படுத்தியிருந்தார்.

இந்த ஆனந்த மகிழ்ச்சியின் வளர்ச்சியை தாவீதின் வாழ்க்கையில் நாம் கிரமம் கிரமமாகப் பார்த்தோம். எது தேவனுக்கும், தாவீதுக்கும் அவ்வளவு பெரிதான திருப்தியை அளித்தது என்பதையும், அதனால் தேவனுடைய ஆலயத்தைப் பற்றிய ஒழுங்கை அவர் அவனுக்கு எவ்விதத்தில் வெளிப்படுத்தினார் என்றும் நாம் பார்த்தோம். அடுத்தபடியாக நாம் இப்பொழுது அதற்கு நேராக நடக்கும்படி அவர் அளித்த அந்தப் பயிற்சியைப்பற்றி நன்கு உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தேவன் அவனுக்குத் தம்முடைய தீர்மானத்தை வெளிப்படுத்துமுன், நாம் பார்த்தவண்ணம், அவர் அவனைத் துயரத்தின் பாதை வழியாக, எபூசியனான ஒர்னானின் களத்திற்கு நடத்த வேண்டியதாய் இருந்தது. அதற்குப்பின்பு, அவன் அவருக்குச் சமாதான பலிகளைச் செலுத்திய அந்த பலிபீடம் அமைந்திருந்த அதே களத்தையே, கர்த்தர் தம் ஆலயத்தைக் கட்டுவதற்காகத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதைத் தாவீது உணர்ந்தான். கர்த்தர் ஆரம்பத்திலேயே அந்த இடத்தில் தமக்கு வீட்டைக் கட்டும்படி அவனுக்கு உத்தரவிட்டிருக்கலாம்; ஆனால், தாவீது அந்த விதமான உத்தரவை அல்லது கட்டளையை அப்போது ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவில்லை. தேவன் தமது இருதயத்தின் தீர்மானங்

களையும் திட்டங்களையும், நாம் உண்மையாகவே அதற்கேற்ற ஒழுங்கும் ஆயத்தமும் உள்ளவர்களாக இருக்கும்போது மட்டுமே நம்மிடம் அளிக்கிறார்.

கர்த்தர் அந்தச் சிறு மனையைத் தம் ஆலயத்திற்கென்று ஆசிக்கிறார் என்பதை தாவீது உணர்ந்தவுடனே, அதன் உரிமையாளனுக்கு ஒரு கிரயத்தைக் கொடுக்க அவன் முன் வந்தான். அப்பொழுது எபூசியனான ஓர்னான் தாவீதினிடம், "நீர் என் இராஜா, இதனைக் கிரயமின்றி நீர் எடுத்துக் கொள்ளலாம்," என்று பதிலளித்தான். ஆனால் தாவீதோ, "எனக்கு இலவசமாய்க் கிடைத்ததை நான் கர்த்தருக்கென்று எடுத்துக் கொள்வேனா!" என்றான். தாவீது இக்காலக் கிறிஸ்தவனாக இருந்திருப்பானேயாகில், "இனமாகவா? நான் இதோ, இப்பொழுதே இந்த இனம் நிலத்தை நிச்சயமாகப் பெற்றுக் கொள்கிறேனே!" என்றுதான் கூறியிருப்பான். ஆனால், உனக்கு இனமாகவும், இலவசமாகவும் கிடைத்த எதையும் கர்த்தர் ஏற்றுக் கொள்வாரோ?— ஏற்கார்!!

அந்தக் களத்திற்காக தாவீது ஏற்கனவே கொடுத்த கிரயத்தை நாம் நினைவு கூருவோமாக. கோதுமை மணிகளைப் பதரிலிருந்து பிரித்தெடுக்கிற ஓர் இடமாகும் களம் என்பது. அவனுடைய ஜீவியத்தின் ஆரம்பத்தில் தாவீது எவ்வளவு சிறந்த அறிவாளி என்று எல்லோரும் கூறினார்கள்; ஆனால், அவனுடைய வாழ்க்கையின் அத்தியாயங்களைப் பார்க்கும்போது, அவன் மூளையில் பதரும் இருந்தது என்பதைக் காணலாம். அவன் தன்னை நிறைந்த ஞானி என்று எண்ணியிருந்தான்! ஆனால், தேவன் அவனுடைய தோல்விகளின் மூலம் அவனை நோக்கி, "இதோ பார், உன் பதரான ஞானத்தை!" என்று அவனுக்குக் கூறி உணர்த்தினார். இவ்விதமான 'பலவிதமான களங்களின்' மூலமாகவே, தாவீதின் ஞானம் பதரான காரியங்களுக்கு விலக்கப்பட்டது. அவன் ஓர் அரசனாக இருந்தபோதிலும், தேவனால் அவன் பலமுறை

கடிந்து கொள்ளப்பட்டவனாக இருந்தான்; அதுமட்டுமல்ல, தன் மீட்புக்கென்று அவன் ஒரு பெரிய கிரயமும் கொடுக்க வேண்டியவனாக இருந்தான்.

நாம் தேவனுடைய ஊழியக்காரராவதற்காக ஒருபெரும் கிரயம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் நம்முடைய பதரான காரியங்களிலிருந்து விலகியிருக்க— விடுபட— ஆயத்தமுள்ளவர்களாகிட வேண்டும். அதிலும் முதலாவதாக நாம் நம்முடைய மூளையில்— சிந்தனையில்— படிந்திருக்கும் பதரான யோசனைகளிலிருந்து விடுபடவேண்டும்! அந்தப் பதர் என்பதுதான் என்ன? நம்முடைய சொந்த பலத்தின் மூலம் பெற்ற சுயஞானம், அல்லது சுய அறிவின் திறனே தேவனுடைய பார்வையில் பதராக இருக்கிறது! ஏசாயா 40:6இல் 'மாம்சமெல்லாம் புல்லைப்போல்... இருக்கிறது' என்று பார்க்கிறோம், ரோமர் 7:18இல் 'என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை' என்று பவுல் கூறுகிறான். பவுல் தன் மனமாற்றத்திற்குப் பின்னரே இதனைக் கூறினான் என்பதைக் கவனித்துப் பாருங்கள். எனினும் பற்பல தடவைகளில் நாம் நம்முடைய பதரான பல காரியங்களிலிருந்தும் விடுபட மறுக்கிறோம். யோவான் 12:24இல், கர்த்தர் தாமே, ''கோதுமையானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்'' என்று கூறியிருக்கிறார். அவரே கோதுமையின் மணி— அவரே நமது மெய்யான ஞானம். நம்முடைய அனுபவங்கள் அனைத்தும் அந்தப் பரிபூரண ஞானத்தை நாம் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்வதற்காகவே நமக்கு அளிக்கப்பட்டுள்ளன, அல்லது அமைந்துள்ளன.

''அப்படியே இஸ்ரவேலனைத்தும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கெம்பீரத்தோடும், எக்காளங்கள் பூரிகைகள் கைத்தாளங்களின் தொனியோடும், தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற சத்தத்தோடும்

கொண்டுவந்தார்கள்... அவர்கள் தேவனுடைய பெட்டியை உள்ளே கொண்டு வந்தபோது, தாவீது அதற்குப் போட்ட கூடாரத்தின் நடுவே அவர்கள் அதை வைத்துத் தேவனுடைய சன்னதியில் சர்வாங்க தகனபலிகளையும் செலுத்தினார்கள்'' (1 நாளா. 15 : 28; 16 : 1).

தாவீது அந்த நிலத்தை விலைக்கு வாங்கினவுடனே, கர்த்தருடைய பெட்டியை அங்கே கொண்டு வர அவன் மிகவும் வாஞ்சித்தான். ஆகவே, அதன்மூலம் அவன் மீண்டும் ஒருமுறை அவருடைய சித்தத்தை அறியத் தவறி விட்டான். I நாளாகமம் 13 : 1 இல், தாவீது எவ்விதமாய் ஆயிரம்பேருக்குத் தலைவரோடும், நூறுபேருக்குத் தலைவரோடும், சகல அதிகாரிகளோடும் ஆலோசனை பண்ணினான் என்பதை வாசிக்கிறோம். அவன் கர்த்தருடைய பெட்டியை அதன் இடத்தில் கொண்டுவந்து சேர்க்க விரும்பினான்; ஆனால் உலகப் பிரகாரமான திட்டத்துடன் அதை அவன் செய்ய விரும்பினான் — உலகப்பிரகாரமானவிதத்திலும், உலகப்பிரகாரமான நிலையிலும் அதைச் செய்திட அவன் எண்ணினான்.

எண்ணாகம புத்தகத்தில் கர்த்தருடைய பெட்டி எவ்விதமாய் உன்னத மாதிரியில் — பரமதிட்டத்தின்படி — ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்பதைக் கர்த்தர் தெளிவாக்கியிருக்கிறார். ஆயினும், இங்கே நாம், பரம ஒழுங்கையும் திட்டங்களையும் அறியாதவனை ஒரு 'ஞானமுள்ள பெரிய ராஜா', தன் சொந்த அறிவை, அதனை முடிப்பதற்கென்று பயன்படுத்தினதையும் காண்கிறோம். மறுபடியும் ஒருமுறை அவனுடைய திட்டங்கள் சீர்குலைந்தன. தெய்வீக ஒழுங்கை மாற்றியமைப்பதற்கு எந்த மனிதனுக்கும் அதிகாரம் இல்லை—அவன் பிரசங்கியாகவோ, பாதிரியாகவோ, இந்தியனாகவோ, ஐரோப்பியனாகவோ, ஏழையாகவோ, சீமானாகவோ இருப்பினும் இருக்கட்டும். இதற்காக நாம் கர்த்தருக்கு நன்றி கூறுவோமாக.

தேவன் தாவீதை, அவன் தன் சுய உணர்வு அடையும்படி செய்து I நாளாகமம் 15ஆம் அதிகாரத்தின்படி, அவன் கர்த்தருடைய பெட்டியை, எபூசியனிடம் வாங்கின அதே இடத்துக்குச் சுமந்து செல்லும்படி லேவியரைக் கட்டளையிட்டார். அந்தநாள் தாவீதுக்கு எவ்வளவு ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த நாளாயிருந்தது!

மிகுந்த சந்தோஷமும் மகிழ்ச்சியும் பொங்கினவர்களாக அவர்கள் கர்த்தருடைய பெட்டியை—பல ஆண்டுகளாக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்ததான அப்பெட்டியை—அங்கே கொண்டுவந்து சேர்த்தார்கள். ''தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி, நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு சுரமண்டலம் கைத்தாள முதலிய கீத வாத்தியங்கள் முழங்க, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்த வேண்டும் என்று சொன்னான்'' *(1 நாளா. 15 : 16)*. அது ஒரு மாபெரும் மகிழ்ச்சிகரமான நேரமாயிருந்தது — அந்த ஆனந்த மிக்க நாளிலே, பாடகர்கள் தம் இருதயத்தின் ஆழத்திலிருந்து மகிழ்ந்து பாடவும், தாவீதுதானே அந்த ஆர்ப்பரிப்பான விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ளவும்தக்கதான நாளாயிருந்தது. *(வசனம் 27/28)*.

கர்த்தர் தாவீதைத் தம் பெட்டியை அதற்குரிய சரியான இடத்தில் கொண்டுவந்து அவன் நிலை நிறுத்தும் ஆனந்தத்தைப் பெற அனுமதிக்குமுன், தாவீது இவ்விதமான இரண்டு பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவனானான். முதலாவதாக: கர்த்தருடைய அனந்த ஞானத்தைப் பெறுவதற்காக அவன் தன் அறிவைப் பொல்லாத பதருக்கும், வெறுமையான வைக்கோல்களுக்கும் விலக்கி விடுவிக்கத்தக்க பாடத்தைப் படிக்க வேண்டியவனாயிருந்தான். இரண்டாவதாக தேவனுடைய வீட்டைப்பற்றிய பரம ஒழுங்கு வெகு கண்டிப்பாகவும், முற்றுமாகவும் பின்பற்றப்பட வேண்டும் அல்லது பராமரிக்கப்பட வேண்டும் என்பதை அவன் கற்றுக்கொள்ள

வேண்டியவனுயிருந்தான். இந்தப் பாடங்களை நாம் கற்றுக் கொள்ளவும், தேவனுடைய சபையைப்பற்றியதும் ஊழியத்தைப்பற்றியதுமான தேவ சித்தத்தை நாம் புரிந்துகொள்வதற்கும் நமக்குப் பல ஆண்டுகள் ஆனாலும் ஆகலாம். ஆனால், தேவனுடைய பெட்டி உரிய காலத்தில் அதன் இடத்தில் வரும்போது, அதைப் பார்க்கிற நாம் அப் பெரிதான ஆனந்தத்தால் நிரப்பப்படுவோம்.

கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவைப்பற்றின நிழலாட்டங்களில் ஒன்றே, தேவனுடைய இப்பெட்டி. உன்னுடைய இருதயத்திலும், உன்னுடைய இல்லத்திலும், உன் சபை ஒழுங்கிலும்கூட அவருக்குரிய இடம் திட்டமாகக் கொடுக்கப்படவேண்டும். இப்படி அது அமைந்திருந்தால், மிகுந்த சந்தோஷம் நிலவும். ஓர்னானிடத்தில் வாங்கிய அந்தக் குறிப்பிட்ட இடத்திலே தேவனுடைய பெட்டி வந்து தங்கியபோது, தாவீது அடைந்த பெரும் மகிழ்ச்சிக்கு ஈடாக, அவன் போரிட்டு வெற்றி பெற்ற பல போர்க்கள வெற்றிக் களிப்பும் இருந்ததில்லை என்பது உண்மை; இந்தச் சந்தோஷத்திற்கு ஈடாக அவை இருந்ததே இல்லை. சபை கூடும் இடங்களில் அவர் கர்த்தராகவும், குடும்பங்களில் அவர் தலைவராகவும், விசுவாசிகளின் இருதயத்தில் அவர் இராஜாதிராஜனுகவும் அரியாசனமிட்டு வீற்றிருப்பதைப் பார்க்கும் போது, அதுவே நமக்கு மகிழ்ச்சியும் பெலனுமாய் இருக்கிறது.

'கிறிஸ்துவே இந்த இல்லத்தின் தலைவர்' என்ற இந்த வசனம் பல இல்லங்களில் காணப்படுகிறது. ஆனால், அடுத்தடுத்துச் சில தினங்கள்—இரண்டு மூன்று நாட்களாக அந்த வீடுகளில் தங்கியிருந்தால், அவ்வீடுகளின் உண்மையான 'தலை'யாரென்பதை நீங்கள் காணலாம்! பலசாலி போன்று காணப்படுகிற கணவனே தன் மனைவியின் முன் நடுங்கத் தக்கதாக, மனைவியே அதற்குத் 'தலை'யா யிருப்பதைக் காணலாம். தனக்குத் தோன்றிய விதத்தில் அவள் அவனுடைய எண்ணத்தைக் கோபத்தின்மூலமோ, கண்ணீரின்

மூலமோ மாற்றிவிடக் கூடியவளாய் இருக்கிறுள்! ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தரே உண்மையான தலைவராய் இருக்கிற அந்த இல்லங்களுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக! மூன்று முக்கியமான காரியங்களை எப்பொழுதும் நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவையாவன: முதலாவதாக, கர்த்தராகிய இயேசுவே உன் சொந்தத் தலைவராக இருப்பாராக. இரண்டாவதாக, அவரே உன் குடும்பத் தலைவராக இருக்க வேண்டும். மூன்றாவதாக, நீ சார்ந்திருக்கிற சபைக்கு அவர் தலைவராக இருப்பாராக. இது உண்மையாயிருக்கும்பட்சத்தில் தேவனுடைய பெட்டியை அதற்குரிய தாபரமான இடத்தில் நீ கொண்டு வந்து நிறுத்துகிறவனுவாய்.

இது நம்முடைய மகிழ்ச்சியாயிருந்தாலும், அதுவும் ஆரம்பமே! தாவீதைப்பற்றி கர்த்தரின் மகிழ்ச்சி பெரிதானதாக இருந்தது. 1 நாளாகமம் 15ஆம் அதிகாரத்திலே, இந்த ஆனந்தம் அளவற்றதாய்க் காணப்படுகிறது. அங்கே, பாடல்களுக்கும், ஆர்ப்பரிப்புக்கும், ஆட்டங்களுக்கும் குறைவே இல்லை; அவ்வளவு அதிகமாய் இருந்தது. எனினும், தாவீதைப்பற்றிய தேவனுடைய தீர்மானம் அதைவிட மிகவும் அதிகமானதாகவே இருந்தது.

மெய்யாகவே, கர்த்தரின் மகிழ்ச்சியே உன் பெலனுயிருக்கிறது என்று நீ கூற முடியுமா? அதிகம் அதிகமாக தேவனுடைய இருதயத்தில் நீ முற்றிலும் இடம் பெற்று அவரை மகிழ்வடையச் செய்கிறவனுக நீ இருப்பதால், உன் சந்தோஷம் பெருகுகிறதா? அவருடைய நாமத்திற்குள்ளாக உங்களுக்கு இந்த அளப்பரிய மகிழ்ச்சியை நாங்கள் அளிக்கிறோம்.

5

ஈவதிலுள்ள மகிழ்ச்சி

"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" *(சங்கீதம் 40:8)*.

உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது உடல் வலிமையாகும். அதுபோன்றே ஆவிக்குரிய வளர்ச்சியின் இரகசியமும் எல்லாச் சூழ்நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும், அநுபவங்களிலும், கடமைகளிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதினுலுண்டாகும் மெய்யான பெலன்தான் என்பதை நாமறியவேண்டும்.

எடுத்துக் காட்டாக, புதிதாகப்பிறந்த குழந்தை ஒன்றை கவனிப்போம். அக்குழந்தை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வருகிறது. நாளுக்கு நாள் அந்தக் குழந்தையினுடைய உறுப்புக்கள் வளர்ந்து பலமும் அடைகின்றன.

அவ்வாறு வளர்ந்து வரினும் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அது குழவியாகவே இருக்கிறது. பின்னர் குழந்தைப் பருவத்தின் இரண்டாவது நிலையை அடைகின்றது. சிறுவன் என்று எல்லோராலும் அழைக்கப்படுகிருன். ஓடியாடித் திரியவும், பேசவும் கற்றுக் கொள்கிருன். பள்ளி செல்லும் மாணவனுகப் பற்பல காரியங்களையும் கற்க ஆரம்பிக்கின்ருன். பல்கலைக் கழகம்வரை சென்று பட்டங்கள் பல பெற்ற காளைப் பருவத்தினன் ஆகின்ருன். இந்தப் பருவத்தில் அவன் தன்னுடைய அநுபவ அறிவினுலும், கல்வியறிவினுலும் இல்லற வாழ்விலோ, தொழில் துறையிலோ, அரசிய

விலோ கடமையுணர்ச்சியோடு மிகவும் அதிகமாகப் பொறுப் பேற்றுக் கொள்ளும் திறனைப் பெறுகிறான்.

நம் ஆவிக்குரிய வாழ்க்கையையும் இவ்விதமாகச் சில பருவங்களாகப் பிரிக்கலாம். நாம் நம்முடைய பாவங்களி லின்றும் மனந்திருப்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய சொந்த மீட்பராக விசுவாசிக்கும்போது நாமும் பரிசுத்த ஆவியினாலே பிறந்த ஆவிக்குரிய குழந்தையாகவே இருக்கின்றோம். நாம் எப்போதும் சிசுக்களாகவே இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. ஆனால், அந்தோ! பரிதாபம்! அனேகர் குழந்தைகளாகவே பல ஆண்டுகளாக வளர்ச்சி ஏதுமின்றி இருந்துவிடக்கூடும். நெடுநாட்களாகப் பாலுண்ணும் குழந்தையைப்போலவே ஆவியில் வளர்ச்சி யடையாமல் இருந்து விடுகின்றனர். இது மிகவும் இரங்கத் தக்கது. அவர்களுடைய வாழ்க்கையில் அஸ்திபாரம் திடமாக இல்லாமலிருந்து, துவக்கமும் சீராக இல்லாமற் போகவே ஆவிக்குரிய வளர்ச்சியின்றிக் குன்றிப் போயிருக் கின்றார்கள். ஆனால், தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் நிறைவான வளர்ச்சிக்கும் பொறுப்புக்கும் வந்து சேரவேண்டும் என்றே ஆசைப்படுகின்றார்.

நீர் நாள்தோறும் வளர்ச்சிபெற வேண்டுமென்பதும், துரிதமாகவே ஒரு பருவத்திலிருந்து அடுத்த பருவத்தை அடைய வேண்டுமென்பதும் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. கர்த்தருடைய வேதத்தை வாசித்து அதில் தியானமாயிருக்கும்போது, அவரை அறிகிற அறிவில் வளரு வதுடன், அவருடைய சமூகத்திலேயே இருக்க வேண்டுமென் கிற தீராப்பசி உமக்கு உண்டாகிறது. எவ்வாறு ஒரு சிறு குழந்தை தன் பெற்றோருடைய அரவணைப்பிலேயே இருக்க விரும்புகிறதோ, அதுபோலவே கர்த்தருடைய பிள்ளையாகிய நீரும் தேவனுடைய சமூகத்திலேயே இருக்க விரும்புவீர். கர்த்தருடன் அதிக நேரத்தைச் செலவிடுவதின் மூலமாகவே, பரிசுத்தரின் அறிவில் நீர் வளர்ச்சி பெறுவீர்.

நாம் கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கத் தொடங்கும்போது, அவருக்குப் பிரியமானவைதைச் செய்வதில் விருப்பம் கொள்ளத் தொடங்குகின்றோம். ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்'' (சங்கீதம் 40 ; 8). நாம் ஆவிக்குரிய வளர்ச்சியும் முன்னேற்றமும் அடையும் போது மட்டும்தான் கர்த்தருக்குப் பிரியமானதும், சித்தமானதும் என்ன என்று கண்டறியவும்; அதைச் செய்ய விருப்பமும், வாஞ்சையும் உண்டாகின்றன. சிற்சில வேளைகளில் தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு அநேக மாதங்களோ அல்லது வருஷங்களோ நாம் கர்த்தருடைய பாதத்தில் காத்திருக்கும்போது மிக அருமையான பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம்; பரிசுத்த வேதாகமத்திலுள்ள மறை பொருட்களையும், புதை பொருட்களையும் புரிந்து கொள்கிறோம்; அவருடைய நாமத்தின் பேரிலுள்ள அதிகாரத்தைப் பிரயோகிப்பது எவ்வாறு என்றும் கற்றுக்கொள்கிறோம். இவ்வாறான ஜீவியத்திலிருந்து ஆண்டவருக்காக உபத்திரவமும், அவமானமும் அனுபவிப்பதற்கும் தயங்க மாட்டோம். இவ்வகையான அனுபவங்களின் வாயிலாக நாம் எல்லாவற்றையும் கடந்து சென்று நிறைவான வளர்ச்சியை அல்லது ஆவிக்குரிய பூரண மனுஷத்தன்மையை அடைகிறோம். அப்படியானால் தேவன் நமக்கென்று வைத்திருக்கும், அல்லது நம்மோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் ஆவிக்குரிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகி விடுகிறோம். எவ்வாறு நமக்குக் குடும்ப அல்லது தேசியக் கடமைகளும் உத்தரவாதங்களும் இருக்கின்றனவோ, அவ்வாறே நாம் இம்மையிலும், மறுமையிலும் — அதாவது பரலோகத்திலும்— நமக்கு தேவன் வைத்திருக்கும் ஆவிக்குரிய பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

தேவன் தாவீதை மிகப்பெரிய நோக்கம் ஒன்றிற்காகத் தெரிந்து கொண்டார் என்பதை முன்பே பார்த்தோம். தாவீதின் வாழ்க்கை வரலாற்றை நாம் தியானித்த வேளை

யிலே, எவ்வாறு தாவீது பல கட்டங்களின் மூலயாக முன்னேற்றம் அடைந்து, மனமகிழ்ச்சியாய்க் கர்த்தருக்குள் இருப்பதைத் தனது புயபலமாக்கிக் கொண்டான் என்று அறிந்துகொண்டோம். இந்த எல்லா அனுபவங்களின் மூலமாக அவன் தேவனைப் பற்றிய அறிவில் வளர்ந்து கொண்டே யிருந்தான். தேவன் தாவீதுக்கு முழுச் சுயாதீனத்தையும், பொறுப்புக்களையும், உத்திரவாதத்தையும் கொடுப்பதற்கு முன்பாக, அவன் அந்தக் கடின பாதையின் பல கட்டங்களையும் தாண்டிச் செல்ல வேண்டியதா யிருந்தது.

அவற்றை மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொள்வோமாக: எவ்வாறு தேவன் தாவீதை, அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போதே மறைவான இடங்களில் வைத்து அவனைப் பக்குவப்படுத்தினர் என்று பார்க்கிறோம். அதற்குப் பிறகு தேவன் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை அனுப்பும்போது, தாவீதுதான் இஸ்ரவேலின் அடுத்த அரசன் என்ற உணர்வு பெற்றவராய் சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினர். நாமும் திட்டவட்டமாகச் சோதிக்கப்பட்டு உண்மையுள்ளவர் என்று நிரூபிக்கப் பட்டாலன்றி, தேவன் நம்மையும் தெரிந்துகொண்டு, அபிஷேகம் பண்ணி அவருடைய ஊழியத்திற்கென்று நியமிக்க முடியாது.

இதை அடுத்து, தேவனுடைய யுத்தங்களை அவருடைய நாமத்திலும், அதிகாரத்திலும் வெற்றிகரமாய் செய்து முடிக்கத் தாவீது கற்றுக்கொண்டான். அவ்விதமாகவே, ஒவ்வொரு விசுவாசியும் தேவன் அருளும் ஆவிக்குரிய ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கற்றுக்கொள்வது அவசியம் (2 கொரிந்தியர் 10 : 4).

மறுபடியும், தாவீது எப்படிப் பெலிஸ்தரோடு கூட்டுச் சேர்ந்தான் என்பதற்கும், அவ்வாறு ஐக்கியப்படுவதற்கு முன்பாகத் தன்னைக் குறித்தும், தன் ஜனத்தைக் குறித்தும் தேவன் கொண்டுள்ள தீர்மானத்தை விசாரித்து அறியாது

புறப்பட்டது அவனுடைய மதியீனம்தான் என்பதையும் நாம் தெளிவாய்க் கண்டோம். அவன், முதலாவது தேவனுடைய சித்தத்தையும் அவருடைய தீர்மானத்தையும் அறிந்துகொள்ளாமல் யுத்தத்திற்குப் போனது பெருந்தவறு. ஆனால், அடுத்த அதிகாரத்தில் அவன் எந்த ஆயுதங்களினால் தோல்வியுற்றானோ, அதே ஆயுதங்களைக்கொண்டு எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டான் என்றும் பார்க்கிறோம். அதுபோன்றே நாமும் தேவனுடைய சித்தத்தையும், அதைச் செய்வது எப்படி என்பதையும் அறிந்துகொள்ளாவிடில் நாம் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் எதிரிடையாகவுள்ள சத்துருக்களையும் தோற்கடிக்க முடியாது. நாம் ஒருவேளை தேவனுடைய யுத்தங்களில் முன்னணியில் நின்று போராடலாம்; அல்லது அவருடைய ஆவிக்குரிய ஆயுதங்களையுமே பயன்படுத்தலாம். ஆகிலும், நாம் தேவனுடைய முழு சித்தத்தையும் அறிந்துகொள்ளாவிடில், அவருடைய பூரண சித்தத்திற்குள் இராவிடில் நாமும் தோல்வியுற நேரிடும். தாவீது அந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டது போலவே நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு, எருசலேமில் குடியிருந்த எபூசியரைத் தாவீது விரட்டி அடித்து, சீயோனைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். அப்பொழுது எருசலேம் விடுதலை அடைந்தது. அதுபோன்றே நாமும் இவ்வுலகத்தில் உள்ள காரியங்களில் ஐக்கியப் படக்கூடாது; அல்லது உலகத்தாருடைய பழக்க வழக்கங்களிலோ, விக்கிரக ஆராதனையிலோ ஈடுபடக்கூடாது என்பதை அது நினைப்பூட்டுகின்றது. நாம் அனேக வெற்றிகளைப் பெற்றபோதிலும் இந்த விஷயத்தில் தேவன் நமக்குக் கொடுத்துள்ள கட்டளைகளைக் கைக்கொள்ளாமற்போனால், அதன் விளைவு ஆவிக்குரிய வளர்ச்சியைப் பாதிப்பதுடன், நம் வாழ்க்கை கண்ணீரும் கசப்பும் உள்ளதாய் இருக்குமோ என பயப்படவும் வருந்தவும் நேரிடும். நமது ஜீவியத்தில் அனேக 'எபூசியர்கள்' இருப்பதால்தான்

தேவனுடைய முழுத் தீர்மானமும் நம்மில் நிறைவேறுவ தில்லை; அல்லது, சபையில் அனேகர் நீட்டுப்பட்டவர்களாயும், தவறான வழிகளில் செல்கின்றவர்களாயும் இருப்பார்கள். எனவேதான், தேவனுடைய ஊழியம் முன்னேற்றம் அடை வதில்லை. நமது வாழ்க்கையிலுள்ள 'எபூசியர்கள்' மூல மாகத்தான் இவ்வுலகில் தேவனுடைய நோக்கங்கள் நம்மால் நிறைவேற்றப் படுத்தப்படாமல் தடை செய்யப்பட்டுள்ளன. தேவ சபையிலுள்ள ''எபூசியர்கள்'' மூலமாகத்தான் அனே கர் கறைபடுத்தப்பட்டு வழிதப்பிச் செல்கின்றனர். எனவே தான் கர்த்தருடைய வேலையும் அதிகமாக முன்னேறுவதில்லை. இந்த 'எபூசியர்கள்' அப்புறப்படுத்தப் பட்டாலன்றி மெய் யான அபிவிருத்தி காணப்படாது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருக்குரிய இராஜரீக மகிமை அளிக்கப்படாமலிருக்கும். தேவனுடைய வசனத்துக்குத் தாவீது கீழ்ப்படிந்ததன் மூலமாகத்தான் அவனுக்கு வெற்றி சாத்தியமாயிற்று; சீயோன் கோட்டையையும் கர்த்தருக் காகப் பிடித்துக் கொண்டான். தேவனுடைய உடன் ஊழி யக்காரராகிய நாமும், என்ன நேரிட்டாலும், சற்றேனும் அஞ்சாது 'எபூசியரை' விரட்டி அடிக்கவேண்டும். ஒளிக் கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?

உலகத்துக்கடுத்த ஞானத்திலிருந்தும் தாவீது விடுதலை அடைய வேண்டியதிருந்தது. அவன் எவ்வாறு உலகஞானத் தாலும், பெருமையாலும் நிறையப்பட்டவனாய்ப் போர் வீரர்களை எண்ணிக்கையிடவும், மக்கள் தொகையைக் கணக்கிட்டுத் தன் பலத்தை அறிந்து கொள்ளவும் முற்பட் டான் என்று பார்த்தோம். ஆகவே, அதற்குத் தக்க தண் டனையைத் தேவன் அளிக்க வேண்டியதாயிற்று. ஆகிலும், எபூசியனாகிய அர்வனாவின் போர் அடிக்கும் களத்திலே தாவீது மனம் திரும்பினான்; தேவனும் அவனது பாவத்தை மன்னித்தார். அவ்விதமாகவே, நாமும் உலக ஞானத்தா லும், சுய சித்தத்தாலும் ஆட்கொள்ளப் படுவோமென்றால், நாமும் தேவனால் நியாயந் தீர்க்கப்பட்டுத் தண்டனைக்கு

ஆனாவோம். ஆகிலும், நாம் நமது பாவத்தை அறிக்கை செய்து மனந்திரும்பும்போது, அங்கு மறைந்து கிடந்த தேவனுடைய அதிசயமான தீர்மானத்தைக் கண்டு கொள்ள லாம். எவ்வாறு தாவீது மனந்திரும்பினபோது, அவனு டைய பாவம் மன்னிக்கப்பட்டு, தண்டனை நிறுத்தப்பட்டு, எருசலேமில் கட்டப்படவேண்டிய தேவனுடைய ஆலயத் திற்கான இடத்தைக் கண்டுகொண்டானோ, அதேபோன்று நாமும் ஒரு மேலான நோக்கத்தைக் கண்டு கொள்ளலாகும்.

தாவீது அறிந்து உணர்ந்து கொண்ட வண்ணமாகவே, நாமும் தேவன் நிர்ணயித்திருக்கிறபடியே அவருடைய பிரமாணங்களை அறிந்து செயல்படாவிட்டால், பயங்கரமான விளைவுகள் ஏற்படும். தேவனுடைய உடன்படிக்கைப் பெட் டியை மறுபடியும் தேவனுடைய வீட்டிற்குக் கொண்டுவரத் தீர்மானித்தபோது, தாவீது தன் சொந்தத் திட்டத்தைத் தன்னுடைய வழிகளிலேயே அமுல்படுத்த ஆரம்பித்தபின், தோல்வியும் துயரமும்தான் ஏற்பட்டன. ஆனால், கர்த்த ருடைய ஒழுங்கின்படியே அப்பணியை நிறைவேற்றின போது, தேசம் முழுவதிலும் மிகுந்த மகிழ்ச்சியும், ஆரவார மும் காணப்பட்டன என்று அறிகின்றோம்.

இறுதியாக, ஆலயத்திற்கான திட்டத்தை மிக்க விவர மாகத் தேவன் தாவீதுக்கு ஒப்புவித்த நாள், அவனது வாழ்க்கையிலேயே மிக அதிசயமான நாளாகும். (I நாளா 28.19). இப்பெரிய திட்டத்தைத் தாவீதின் வாழ்க்கையின் துவக்கத்திலேயே தேவன் தெரிவித்திருக்க முடியாது. அவன் இயல்பாகவே பராக்கிரமும், ஞானமும், திறமையும், அறிவும், ஆற்றலும் பெற்றிருந்தாலும், அவனது இளமைப் பருவத்திலேயே இப்பெரிய காரியத்தின் இரகசியத்தை விளங்கிக் கொள்ள முடியாது. கோலியாத் அரக்கனைக் கொன்ற பிறகும், தாவீது ஆவிக்குரிய பிரகாரம் அதிகமாக வளர்ச்சியடையட்டும் என்று தேவன் பொறுமை யோடு காத்திருந்து, பிறகுதான் இந்த வெளிப்படுதலைத்

தந்தார். இக்காலத்தில் அனேகர் ''சபை'' அல்லது ''கிறிஸ்துவின் சரீரம்'' என்று சகஜமாகப் பேசுகின்றனர்: ஆனால், வெகு சிலரே இந்தச் சொற்களின் பொருளையும், இரகசியத்தையும் விளங்கிக்கொண்டு இருக்கின்றனர். சபையைப் பற்றிய தேவனது எண்ணத்தைப் புரிந்து கொண்டவர்கள் வெகு சொற்பமானவர்கள்தான்- பலர் ''ஆவிக்குரிய மொழியில்'' பேசிக்கொண்டாலும் அவர்களது வாழ்க்கையில் உள்ள பொறுமை, பூசல்கள், போராட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகத் தாங்கள் எதை அறிந்து உணர்ந்திருப்பதாகக் கருதுகின்றனரோ அதை இன்னும் தெளிவாக அறியவில்லை என்று புலனாகின்றது. ''உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக சபையின் ஐக்கியம் இன்னது என்று எல்லோருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்பதுதான் !சபையைக் குறித்த தேவனுடைய தீர்மானமாக இருக்கிறது (எபேசியர் 3 : 10). தேவனுடைய பரிபூரணத்துவம் சபையிலே காக்கப்பட்டு சபையின் மூலமாகவே வெளிப்பட வேண்டியதாயிருக்கிறது; எந்த ஒரு கிறிஸ்தவனும் இந்தப் பெரிய அழைப்பையும், நோக்கத்தையும் தான மட்டும் தனியாக நின்று வெளிப்படுத்தவே முடியாது.

''என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன்'' *(1 நாளாகமம் 29 : 17).*

நீங்கள் ஆவிக்குரிய பயிற்சி பெற்று, பல அனுபவங்களின் வாயிலாக ஆவிக்குரிய முதிர்ச்சியடையும்போது மட்டுந்தான் தம்முடைய வீடாகிய சபையைப்பற்றி தேவன்

கொண்டுள்ள தீர்மானங்களையெல்லாம் நீங்கள் நன்முக அறியமுடியும். தாவீது போர்கள் பல புரிந்தான். ஆனல், அந்தப் போர்களின் மூலமாகத்தான் தனக்குத் தேவையான ஆவிக்குரிய பயிற்சியையும் அவன் பெற்றுன். இந்த யுத்தங்களில் அவன் கொள்ளையாடிய பொருள்களையே தேவாலயத்தைக் கட்டுவதற்கென்றும், அலங்கரிப்பதற்கென்றும் அவன் பிரதிஷ்டை செய்தான் என்று 1 நாளாகமம் 26 : 26-27 இல் வாசிக்கிறோம். இவனுடைய பல்வேறு அனுபவங்களிலும் — அதாவது போர்களிலும்—ஆலயத்திற்கான பணிமுட்டுகளைச் சேகரித்தான். சவுலை இஸ்ரவேலுக்கு அரசனுகத் தெரிந்துகொண்டபோது எவ்விதப் பயிற்சியும், ஆயத்தமுமின்றி அவன் உடனடியாக அரசன் என்று முடிசூட்டப்பட்டான். அதன் விளைவாக அவனுக்கு மூரட்டாட்டமும், குருட்டுத்தனமும், மதிகேடும், கீழ்ப்படியாமையும் இருந்தமையால் அவன் அரசனுக இராதபடி தேவன் அவனை நிராகரித்துத் தள்ளிவிட்டார். ஆனல், தேவன் தாவீதை சிங்காசனத்தில் அமர்த்தியபோது, அவன் ஏற்கனவே, வாழ்க்கையில் பல சிக்கல்களையும், சோதனைகளையும் அனுபவித்துத் தேர்ச்சி பெற்றவனுய் இருந்தான். இஸ்ரவேலை ஆளும் திறமையும் தகுதியும் உடையவனுக்க இவை அனுகூலமாக இருந்தன. தாவீது தவறுகள் இழைத்த போதிலும், தேவன் அவனைப் புறக்கணித்துத் தள்ளாமல் அவனைக் கடிந்துகொண்டு, சிட்சித்து, பயிற்சியளித்துத் தாம் அவனைத் தெரிந்துகொண்ட உன்னத நோக்கத்திற்காகவே அவனைத் தகுதிப்படுத்தினர்.

நீர் மறுபிறப்படைந்திராவிட்டால், சவுலைப்போல, தேவ ஊழியத்தில் இறங்கவோ, அல்லது தேவனுடைய ராஜ்யத்தில் எவ்வித பங்கும் பெறவோ இயலாது. எவ்வாறு சிங்காசனத்தினின்று சவுல் முற்றிலுமாய் ஆகாதவன் என்று தள்ளப்பட்டானே, அதே கதிதான் உமக்கும் நேரிடும். ஆனல், அதற்கு மாருக, நீர் தேவனுடைய பிள்ளையாக இருந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தொடங்கினல்,

தேவன் ஒருபோதும் உம்மைக் கைவிடாமலிருப்பார். தாவீதுக்குத் தாம் வழங்கினதுபோலத் தம்முடைய முழுச் சித்தத்தையும், திட்டத்தையும் பூரணமாய் உமக்கு வெளிப்படுத்துவார். தேவாலயத்தின் அமைப்பும் பரலோகத் தோற்றத்தைப் பிரதிபலிப்பதாய் இருந்தது. ஏனென்றால், அது மனிதருடைய உபயோகத்திற்கென்றோ, அல்லது மனிதரைக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்றோ, அல்லது மனிதருடைய கட்டடக் கலைத்திறனை வெளிப்படுத்த வேண்டுமென்றோ கட்டப்படாமல், தேவனுக்கென்று பரலோக ஒழுங்கின்படியே கட்டப்பட்டது. அதன் அளவுகள் ஒவ்வொன்றும், அதில் பயன்படுத்தப்பட்ட பணிமுட்டுகள் எல்லாம், கதவுகளும் சன்னல்களும்கூட, ஏன், அதில் பயன்படுத்தப்பட்ட வண்ணங்களும்கூட, தேவனுடைய மகிமையைப் பறைசாற்றுவதாகவும், சபையில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படியிருக்கிறாரோ, அதற்கு ஒப்பனையான அடையாளமாகவும், நிழலாட்டமாகவும் இருந்தன. இது மனிதர் தங்கி வாசஞ்செய்வதற்கென்று கட்டப்பட்ட இவ்வுலகப் பிரகாரமான கட்டடமாயிராமல், அல்லது மனிதர்கள் சிறப்புக் கூட்டங்கள் நடத்திப் பொருளீட்டும் மாளிகையாக இருக்காமல், அது ஆவிக்குரிய ஆலயமாக, தேவனுடைய பிரசன்னம் தங்கியிருக்கும் உயரிய இடமாக இருந்தது. மனிதருடைய மீட்பிற்கென்று கிறிஸ்து இயேசுவில் தேவன் வைத்திருக்கும் அளவில்லா அன்பை எடுத்துக் காட்டுவதாயிருந்தது.

அநேக ஆண்டுகளின் அநுபவம், பயிற்சி, ஆகியவற்றிற்குப் பிறகு, முடிவிலே ஆவிக்குரிய பொறுப்பேற்கும் நல்ல நிலைமைக்குத் தாவீது வளர்ச்சி பெற்றுவிட்டான். இப்போது கர்த்தருடைய வீட்டைப்பற்றிய தேவ தரிசனத்தைத் தாவீது பெற்றுக் கொண்டவனாய், ''ஏன் என்னைத் தேவன் தெரிந்து கொண்டார் என்று இப்போது நான் அறிவேன்,'' என்று சொல்லக்கூடிய நிலைமையை அடைந்தான். இப்போது ஆலயத்தின் மாதிரியை மக்களுக்கு

எடுத்துரைக்கும் நிலைமையை அடைந்தான். தன் குமாரனாகிய சாலொமோனோடும், அவனுடன் பொறுப்பான பதவிகளில் இருந்தவர்களுடனும், தேவனுடைய திட்டத்தையும், தீர்மானங்களையும் அவன் பகிர்ந்துகொள்ள முடிந்தது. எனவே, தேசத்தில் உள்ள முக்கியமானவர்களை யெல்லாம்— பிரபுக்களையும், அதிகாரிகளையும், ஆசாரியரையும், லேவியரையும், ஆயிரத்துக்கு அதிபதிகளையும் — ஒருங்கே வரவழைத்து இப்பெரிதான பணியைக் குறித்து, அவர்களுக்கு விவரித்ததோடு, அவர்களும் அப் பொறுப்பில் பங்கை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தான். ''இப்போதும் உங்களில் இன்றையதினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்?'' (1 நாளாகமம் 29 : 5).

இந்த அதிகாரத்தில், ''மனப்பூர்வமானவர்கள்'' என்னும் பதத்தை நீங்கள் உற்று நோக்க வேண்டும் என்று விரும்புகிறேன். யார் யாரெல்லாம் மனப்பூர்வமாகக் கர்த்தருடைய வேலைக்கென்று உற்சாகமாகக் கொடுத்தார்களோ, அவர்களுக்குத்தான் இந்த சிலாக்கியம் அளிக்கப்பட்டது. தாவீது ஒரு ஞானமுள்ள ராஜா; பராக்கிரமசாலி என்று புகழ் பெற்றவன்; கண்ணியமுள்ள ராஜா; ஆகிலும், தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு யாரையும் வற்புறுத்தவோ, நிர்ப்பந்திக்கவோ இல்லை; தன்னுடைய பங்கையெடுத்துக் கொள்வதற்கும், கடமையை நிறைவேற்றுவதற்கும் ஆர்வங்கொண்டவர்களைத் தன் இச்சையாக முன்வரும்படி அழைத்தான்.

நாமும் தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும்போது பிரசங்கிக்கவோ, போதிக்கவோ, ஜெபிக்கவோ, அல்லது வேறு ஏதாவது கீழான ஊழியமோ செய்துகொண்டிருக்கலாம்; ஆனால், அது மனிதருடைய கட்டாயத்தினால் நிறைவேற்றப்படும் என்றால், தேவனால் அது அங்கீகரிக்கப்பட மாட்டாது; பிறருடைய வற்புறுத்தலினால் செய்யப்படும் ஊழியம் தேவ

னுக்குப் பிரியமானதல்ல. நீர் எதையாவது எப்பொழுதாவது கர்த்தருக்கென்று செய்தால் அதைப் பிறருடைய வற்புறுத்தலினுலோ, அல்லது உமக்கு உடனடியாகக் கிடைக்கும் ஆதாயத்தை எதிர்பார்த்தோ நிறைவேற்றினுல் பரலோகத்தில் உமக்குப் பலன் இருக்காது; மனப்பூர்வமான ஊழியத்தையே தேவன் விரும்புகிருர். தாவீதும் திரளான பொன்னேயும், வெள்ளியையும், வெண்கலத்தையும் சேகரித்திருந்தான். இவற்றிலெல்லாம் அவனுக்கு எவ்விதக் குறைவுமில்லே. ஆகிலும் தன்னேப்போலவே கர்த்தருக்கென்று மனப்பூர்வமாகக் கொடுப்பதற்கோ, சேவை செய்வதற்கோ விருப்பம் உள்ளவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தச் சந்தர்ப்பத்தில் இதை அறிவித்தான். ''இப்படி மனப்பூர்வமாய் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே கர்த்தருக்குக் கொடுத்தார்கள்: தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்'' (1 நாளாகமம் 29:9). எனவேதான், தாவீதின் வாழ்க்கையில் இதுவே மிக மகிழ்ச்சிக்குரிய நாள் என்பது மட்டுமல்ல, இஸ்ரவேல் மக்களின் வரலாற்றிலேயே ஒரு பொன்னுன நாளாகவும் விளங்கியது, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்ததே அவர்களுக்குப் பெலனுக இருந்தது.

தேவன், மனிதனேக் குறையற்றவனுகவே சிருஷ்டித்து, அவன் இவ்வுலகை ஆட்சி செய்யவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். ஆனுல், பாவம் உலகில் பிரவேசித்த காரணத்தால், தாவீதினுடைய ஜீவியத்தை நாம் பார்க்கும் போதும் அவன் அநேக யுத்தங்களில் ஈடுபடவும், 'கோலியாத்' என்னும் அரக்கனே நிர்மூலமாக்கவும், பெலிஸ்தரை சங்கரிக்கவும், எபூசியரை விரட்டியடிக்கவும் வேண்டியதாயிருந்தது. மேலும், இந்த யுத்தங்களில் கொள்ளேயிட்ட பொருள்களின்மூலம், தேவாலயத்தைக் கட்டுவதற்கான பணிமுட்டுக்களேச் சேகரிக்க முடிந்தது. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே நடத்தின இந்தப் பெரிதான

போராட்டத்திலே சர்வலோகத்தின் பாவத்தையும் சுமந்து தீர்த்தவராய், நமது சத்துருவாகிய சாத்தானை நிரந்தரமாக மேற்கொண்டு விட்டார். பிசாசு நித்தியத்திற்கும் தோற் கடிக்கப்பட்ட சத்துரு: அவனை வென்று பாவத்தையும், சாபத்தையும் போக்கியதோடன்றி கர்த்தருடைய ஆவிக் குரிய, புதிய வீட்டைக் கட்டுவதற்கும் தேவையான பொருட் களையெல்லாம் தம்மில் தாமே ஏற்படுத்திவிட்டார். ஆகி லும், பழைய சிருஷ்டிக்கும், புது சிருஷ்டிக்கும் ஒரு பாகுபாடு இருக்கிறது. தேவன் இவ்வுலகை உண்டாக்கினபோது, அவர் ஒரு வார்த்தை சொன்னார்; அது அப்படியே ஆயிற்று. ஆனால், இப்பொழுதும் அவர் விரும்பினால் புது சிருஷ்டியை யும் ஒரே வினாடியில் தமது வார்த்தையின் வல்லமையினாலே முழுவளர்ச்சிக்குக் கொண்டுவந்து விடலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல், வாலிபரையும், முதியோரையும், வறியவரையும், வலிமையுடையவரையும், ஆண்களையும், பெண்களையும் பற்பல வயதும் அந்தஸ்தும் உடைய எல்லா தேசத்தினரிடமும், பாஷைக்காரரிடமும் ஒரே விதமாக: "நீ உன்னையே முற்றிலுமாகத் தத்தம் செய்வாயா? உனக் குண்டான எல்லாவற்றையும் சமூலமாக என் வீட்டைக் கட்டுவதற்குச் சமர்ப்பிப்பாயா? கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவின் சபையின் வளர்ச்சிக்கென்று எல்லாவற்றையும் இருதய பூர்வமாக செலவிடுவாயா? உங்களில் யார் யாரெல் லாம் இப்பெரிய போராட்டத்திற்கென்றும் தேவ ஊழியத் திற்கென்றும் மனப்பூர்வமாகக் கொடுப்பீர்கள்? சபை என்று தவறாகச் சொல்லப்படும் உலகப்பிரகாரமான சங்கத்திற் கல்ல; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய பர லோகத்திற்குரிய சபைக்கு உன்னையே தத்தம் செய்வாயா?" என்று ஆண்டவர் நம்முடைய சம்மதத்தை விரும்பிக் கேட் கிறார்.

பின்வரும் மூன்று கருத்து வேறுபாடுள்ள காரியங்களை உங்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். தாவீது பல போர்கள் புரிந்தான். என் ஆண்டவரோ எக்காலத்திற்கும்

பலனளிக்கும் மிகப்பெரிய யுத்தம் ஒன்றே புரிந்தார். பொன்னும், வெள்ளியும், வெண்கலமும் வேறு பல உலோகங்களும் விலையுயர்ந்த கற்களும், ரத்தினங்களுமென தேவாலயத்திற்கென தாவீது ஏராளமாக சம்பாதித்தான். ஆனால், என் ஆண்டவர், தேவனுடைய ஆவிக்குரிய மாளிகையைக் கட்டுவதற்கென்று, தேவையான எல்லாவற்றையும் தமது ஜீவன் ஒன்றின் மூலமாகவே கொடுத்துவிட்டார். தேவாலயத்தைக் கட்டுவதற்குத் தாவீதுக்குப் பரலோக மாதிரி கொடுக்கப்பட்டது; ஆனால், உங்களுக்கும், எனக்கும் அவருடைய பரலோக சபைக்கான மாதிரியை அவருடைய ஜீவனுள்ள வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்திலிருந்து. பரிசுத்த ஆவியானவர் மூலமாக, வெகு நுட்பமாகவே, ஒவ்வொரு விவரத்தையும் கொடுக்கிறார்.

மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு தாவீதுக்கோ, சாலொமோனுக்கோ மேலானவராக, நமக்கு இருக்கிறார். நம்முடைய பாவங்களினின்றும் நம்மைக் கழுவுவதற்கு அவர் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தைக் கடைசித் துளிவரையும் சிந்தினார். சத்துருவை மேற்கொள்ளும் வல்லமையை நாம் பெறும்படியாக அவர் மரித்தார்; நமக்கு உதவியும் ஒத்தாசையும் செய்து நம்மை வழிநடத்துவதற்கு அவர் உயிரோடு எழுந்தவராகத் தம்முடைய பரிசுத்த ஆவியை நமக்கு அளித்திருக்கிறார்.

இப்பொழுதும் ஆண்டவர் ஆணிகளால் கடாவப்பட்டுத் தழும்புகள் உள்ள தம் கரங்களை நீட்டியவராக உங்களுக்கு முன்பாக நின்றுகொண்டு அவர் கொடுக்கும் அன்பின் அழைப்பினை தயவுசெய்து செவிமடுத்துக் கேளுங்கள்: "இப்போதும் உங்களில் இன்றைக்குக் கர்த்தருக்குத் தம் காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்?" (1 நாளாகமம் 29:5) என்று ஆண்டவர் அன்புடன் கேட்கிறார். "யார் எனக்காக முதலாவது தன் ஜீவனையும், இரண்டாவது தன் பொருளையும், அதையடுத்துத் தன்

நேரத்தையோ அல்லது இதர காரியங்களையோ இனஜனத்தாரையோ கொடுப்பார்?'' அவருக்கு ஊழியஞ் செய்தவர்கள் மிகவும் மனப்பூர்வமாகவே தொண்டாற்றினர்கள் என்று அறிகிறோம். அவர்கள் தங்களுடைய பொருள்களை மட்டுமல்லாமல், தங்களையே கொண்டு வந்தார்கள். இது தான் தாவீதை மிகவும் மகிழ்ச்சி உள்ளவனாக்கிற்று. அது போன்றே அவருடைய மகா உன்னதமான பரலோக மாளிகைக்கென்று உங்களையும், உங்கள் தாலந்துகளையும், நேரத்தையும், பலத்தையும் அவருக்கு இலவசமாகவே மனப்பூர்வமாகக் கொடுப்பீர்கள் என்றால், தாவீதுக்குண்டான மகிழ்ச்சியைவிட எவ்வளவு பெரிதான மகிழ்ச்சியை உங்கள் இரட்சகருக்கு அது அளிக்கும்!

அப்படிச் செய்வதினால் மாத்திரமே, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன் என்பதைப் பரிபூரணமாக அறிந்து கொள்வீர்கள்: இதுவே மெய்யான சந்தோஷம்: இவ்விதமாக மனப்பூர்வமாக கையளிக்கும்போது, முழு சபைக்கும் அது மெய்யான சந்தோஷத்தை யளிக்கிறது. உங்களுடைய கண்கள் எப்பொழுதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் மட்டும் இருக்க வேண்டுமென்பதை மறந்து விடாதீர்கள். உங்களுக்காக அவர் பெற்ற வெற்றியையும், அவருடைய ஜீவனையுமே இடைவிடாது நோக்கிப் பாருங்கள். அவருடைய ஜீவனுள்ள வசனமே எப்பொழுதும் உங்களை நடத்தும் வழிகாட்டியாக இருக்கட்டும்.

அவருடைய ஜீவ வசனமே உங்கள் முழுக்கவனத்தையும் கவர்ந்து கொள்ளட்டும். ''என் ஆண்டவராகிய இயேசுவே, என்னை நான் உமக்கு முற்றிலுமாக ஒப்புவிக்கிறேன் — என் கைகளும் கால்களும், என் நாவும், என் கண்களும், என் சொத்தும் சுகமும்—நானும் எனக்குண்டான எல்லாம் உமக்கே சொந்தம்; உம் சித்தம்போல் உபயோகியும்'' என்று சொல்லமாட்டீர்களா?

கர்த்தர் என்னை இரட்சித்து, தம்முடைய ஊழியத்திற்காக வெளியேறி வருமாறு மிகவும் தெளிவாகப் பேசியபின்னரும், இரண்டு முழு ஆண்டுகளாக என் ஆண்டவரை நான் துயரப்படுத்தி வந்தேன். இன்றைக்கு சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பாக—1930ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில்—கர்த்தர் என்னோடு திட்டவட்டமாகப் பேசினார். ''உன் வாழ்க்கையை எனக்கு ஒப்புவி; அப்பொழுது நீ என்னுடைய சாட்சியாயிருப்பாய்'' என்றார். ஆனால், நானோ தேவனோடு வாக்குவாதம் செய்தேன். என் பணத்தையும், நேரத்தையும் தாராளமாக மனமுவந்து அளிக்க முன்வந்தேன். ஆனால், பிரசங்கியாவதற்கு நான் சம்மதிக்கவில்லை. இப்படியாக இரண்டு ஆண்டுகளாக என் ஆண்டவரைத் துக்கப்படுத்தி, வேதனை யடையச் செய்தேன். அப்பொழு திருந்த என் இருதயக் கடினத்திற்காகவும், அவ்விரு ஆண்டு களின் நஷ்டத்திற்காகவும் நான் இப்பொழுதும் மிகவும் வருந்துகிறேன்! ஆகிலும் அதினிமித்தமாக, ஆண்டவர் என்னைக் கைவிடாததால் அவரை மிகவும் ஸ்தோத்தரிக்கிறேன். அவர் என்பால் காண்பித்த நீடிய பொறுமை, சாந்தம், இரக்க உருக்கத்திற்காக நான் எவ்வளவாய் அவரைத் துதிக்கிறேன்! இறுதியாக 1932ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 4ஆம் தேதியிலே அவருடைய ஊழியத்திற்கென முழுமையாக என்னை அவருக்கு ஒப்புக்கொடுத்தேன். எனக்கு உண்டான எல்லாவற்றையும், என்னையும் என் சேவையையும் தேவனுக்கு முழுவதுமாகத் தத்தம் செய்தேன். அந்த நாள் என்ன பேரின்பமான நாள்!

இன்றைக்கு அவர் உம்மிடம் மன்றாடிக் கேட்கின்றார். அவருக்கு மறுக்க வேண்டாம். இப்பொழுதே உம்மையும், உமது ஜீவனையும், உமக்குண்டான எல்லாவற்றையும் அவருக்குக் கையளிக்கமாட்டீரா? அப்படியானால் அவர் உம்மை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார்; நீரும் ஆசீர்வாதமாயிருப்பீர்.

6

ஐக்கியத்திலுள்ள மகிழ்ச்சி

''கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்''
(ஏசாயா 62:4).

கர்த்தருடைய மகிழ்ச்சியை நாம் பூரணமாக அநுபவிக்க வேண்டுமென்றால் சில தெய்வீக விதிகளை அல்லது சட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று வேதாகமத்தி லிருந்து பார்த்தோம். தேவன் நமக்கு எந்த ஈவையோ, அநுபவத்தையோ, ஆசீர்வாதத்தையோ அல்லது வேறு எதையும் தந்தாலோ, அதையெல்லாம் ஏதாவதொரு தெய்வீக விதியின் ஆதாரத்தில்தான் தருகிறார். பெரும் பாலும் அவை மிக எளிமையான விதிகள்தான், என்றாலும் அந்தச் சட்டங்களை அறிந்து கொள்வதற்கு நாம் முயற்சி செய்யாவிடில், அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியைப் பெற்று ஆனந்திப்பதற்குப் பல ஆண்டுகள்கூட ஆகிவிடுகின்றன. வேதாகம புருஷர்களின் வாழ்க்கையிலும்கூட இந்தக் குறைபாட்டையே காண்கின்றோம். தாவீதின் வாழ்க்கை யில் இருந்து நாம் பார்க்கிற பிரகாரமாகவே, ஒவ்வொரு கட்டத்திலும், சந்தர்ப்பத்திலும் தம்முடைய விதிகள் யாவும் நிச்சயமாகவே நிறைவேற்றப்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஏனென்றால் அவை தெய்வீகமானதும், மாற்றம் ஏதும் இல்லாததுமான நித்திய விதிகள். அவைகள் இப்பூமிக்குரியதல்ல; பரலோகத்திற்கடுத்தவைகள். நம்மு டைய சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் பல வழிகளைக் கையாண்ட போதிலும், பல ஊழியக்காரர்களை நம்மிடத்தில் அனுப்பினபோதிலும், ஒரு காரியம் நிச்சயமாய் இருக்கிறது.

நாம் யாராயிருந்தாலும், அவர் நம்மில் எந்தக் கிரியையை நடப்பித்தாலும், அவையெல்லாம், ஏதாவது தெய்விகச் சட்டத்தின் ஆதாரத்திலேயே இருக்கின்றன.

''மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாய் இருப்பதுபோல, உன்தேவன் உன்மேல் மகிழ்ச்சியாய் இருப்பார்'' (ஏசாயா 62:5).

கர்த்தருக்குள் ஆனந்த மகிழ்ச்சியாய் இருக்கும் இந்த அநுபவங்கள் நம்மை எந்த இறுதியான இலக்குக்கு வழி நடத்துகின்றன என்று தியானிப்போமாக: அவர் நம்முடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எல்லாவற்றின் ஒரே நோக்கம் என்னவென்றால் நாம் அவருடன் ஒன்றித்த ஐக்கியத்தில் பிணைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதுதான், என இந்த வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது. மீளமுடியாத, இணை பிரியா ஐக்கியத்தில் நமதாண்டவருடன் நாம் பிணைக்கப் பட்டிருப்பதே மகா உன்னதமான ஆனந்த மகிழ்ச்சி; இதற்கு நேராகவே அவர் நம்மைப் படிப்படியாக வழிநடத்திச் செல்கிறார்.

பாவமும், அக்கிரமமும் அனியாயமும் பெருகிவரும் இக் காலத்தில், வெகுசிலரே மனிதருடைய திருமண வாழ்க்கையின் ஆவிக்குரிய கருத்தை விளங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆதலால்தான் அநேக இல்லங்களில் சந்தோஷமின்மையும், சண்டையும் சச்சரவும்; துன்பமும் துயரமும் இருந்து கொண்டிருக்கின்றன, மறுபடியும் பிறந்த விசுவாசிகளின் வாழ்க்கையிலும்கூட இக்குறைவு காணப்படுகிறது. சில வீடுகளில் இந்த துர்ப்பாக்கியமான நிலைமை பகிரங்கமாய்க் காணப்படுகிறது; வேறு சில வீடுகளில் அது மறைமுகமாகவே இருக்கிறது. எப்படியும் வெகுசில தம்பதிகள் மட்டுமே திருமண வாழ்க்கையின் சந்தோஷத்தையும் பயனையும் அநுபவிக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், பெரும்பான்மையோர் இந்த இரகசியத்தை அறிந்து கொள்

ளாத காரணத்தால் அவர்கள் வாழ்க்கையில் நிம்மதி இல்லை. ஏன் தங்கள் இருவரையும் கணவனாகவும், மனைவியாகவும் தேவன் இணைத்து வைத்திருக்கிறார் என்ற நோக்கத்தை ஆரம்ப முதலே அவர்கள் அறிந்து கொள்ளாதிருக்கிறார்கள். திருமணம் என்பது ஒரு சிலருக்கு மாம்ச இச்சையை நிறைவேற்றும் சாதனமாக இருக்கின்றது; வேறு சிலர் ரொக்கமும், நகையும் பெற்றுக்கொள்ளும் மார்க்கமாகத் திருமணத்தைக் கருதுகின்றனர்; அல்லது நவீன வசதிகளுடன் கூடிய நல்ல வீடுகளையோ, ஆகாரத்தையோ, ஆடைகளையோ போன்ற கீழான நோக்கங்களை உடையவர்களாக இருக்கின்றனர். மற்றும் சிலர் தங்கள் மனைவிகளின்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ அல்லது குழந்தைகளைப் பெற்றெடுப்பதையோ குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். இவ்விதமாக உலகப் பிரகாரமான கண்ணோட்டத்தோடே செயல்படும்போது,அது மகிழ்ச்சி நிறைந்த மங்கல மணவாழ்வாக இருப்பதில்லை. எனவேதான், மறுபிறப்படைந்த பலரும்கூட தங்கள் மணவாழ்வின் மகிழ்ச்சியை இழந்தவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். அந்த மகிழ்ச்சியை அவர்கள் இழந்ததற்குக் காரணம், அந்த வாழ்க்கையின் நியதியை அவர்கள் அறிந்து கொள்ளாததே ஆகும். அவர்கள் வாழ்க்கையின் இலட்சியத்தைத் தவற விட்டுவிட்டதால், அல்லது தெய்வீக விதிகளைக் கைக்கொள்ள மறந்து விட்டதால், ''மணவாளன், மணவாட்டி'' என்று வரும் வேதாகமச் சொற்களுக்கு வேறு அர்த்தம் கூறிவிட நிர்பந்திக்கப்படுகின்றனர்.

ஆனால், வேதாகமம் கூறுவதென்ன? ''மணவாளன் மணவாட்டியின்மீது மகிழ்ச்சி கொள்வதுபோல'' என்று உரைக்கின்றது. தேவனுடைய ஈவாகக் கிடைக்கும் ஜீவனுள்ள நித்திய வாழ்விலின்று எழும்பும் தூய்மையான சந்தோஷத்தையே அது குறிப்பிடுகின்றது. மண வாழ்க்கையைப்பற்றி, தேவன் என்ன நிர்ணயம் பண்ணியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்கு வேதாகமத்திலிருந்து

ஓரிரு சான்றுகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் இது நமக்கு விளங்கும்.

''மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்,'' என்று தேவனாகிய கர்த்தர் ஆதியாகமம் 2 : 18இல் கூறுகின்றார்.

முதலாவதாக, ஆதாம் ஏவாளைப் பார்ப்போமாக. ஆதாமுக்குத் துணையாக ஏவாளைத் தந்ததில் அவர்கள் இருவரும் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கமாக இருந்தது. நாம் எல்லாரும் இவ்வித மெய்யான ஐக்கியத்தில் இணைந்திருக்க வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகிறார். ஐக்கியம் அல்லது அந்நியோந்நியம் என்பது பரிசுத்த வேதத்தில் காணப்படும் ஒரு சிறப்பான கருத்தாகும். மறுபடியும் பிறவாத எவரும் இதை ஒருக்காலும் விளங்கிக்கொள்ள முடியாது. பிதாவோடும், குமாரனோடும் உள்ள ஐக்கியம் தேவனால் பிறப்பிக்கப்பட்டு, அவருடைய ஜீவனையே இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களும் பெற்று அவரில் நிலைத்திருப்பவர்களுக்கு மட்டுந்தான் உண்டு. தேவனுடைய அன்பிற்கு அவ்வாறு தான் நாம் விளக்கம் கொடுக்க முடியும். தேவனுடைய ஜீவன் நமக்குள் பாய்ந்தோடுவதும், நம்முடைய ஜீவன் தேவனை நோக்கிச் சார்ந்திருப்பதுமாகும். மெய்யான ஐக்கியம் ஒருதலைப்பட்சமானதல்ல; அது இரு நோக்குமுடையது: அதாவது, இருவருமே தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் அல்லது வெளிப்படுத்தும் பரஸ்பர அன்பைக் குறிப்பிடுகிறது. ஆதலால் மெய்யான ஐக்கியம் தெய்வீகத் தன்மையுடையதாய், தேவகுமாரனுடைய சாயலுக்கொப்பாய், நம்மை மறுரூபப்படுத்துகிறது.

அநேக ஆண்டுகளாக மகிழ்ச்சி நிறைந்த மங்களமான மணவாழ்க்கை நடத்திவரும் தம்பதிகள் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்களது இல்லறவாழ்வின் ஆரம்பத்தில் நான்

அவர்களைச் சந்தித்தபொழுது அவர்கள் முற்றிலும் வேறுபட்ட சாயல் அல்லது அடையாளமுடையவர்களாய் இருந்தார்கள்; ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்கள் இருவரும் ஒருவரைப்போல் மற்றவர் மாறி இருவரும் கணவன் மனைவி போல் அல்லாமல், இரட்டைக் குழந்தைகள் போல் காட்சியளிக்க ஆரம்பித்துவிட்டனர். அவர்களது சந்தோஷமான ஐக்கியத்தின் பலனாக அவர்களது சாயல் ஒன்றாயிருக்கிறது. இவ்விதமாகச் சில ஆண்டுகள் மாத்திரம் ஏற்பட்டுள்ள உலகப்பிரகாரமான திருமண வாழ்வின் தொடர்பினால் இவ்வாறு நேரிடும் என்றால், நித்தியமாக வாழ்ந்திருக்கும் நம்முடைய கர்த்தரோடுள்ள நெருங்கிய அத்தியந்த தொடர்பினால் நாமும் அவரைப் போல் மறுரூபமாக்கப்படுவது எவ்வளவு நிச்சயமும், உண்மையுமாயிருக்கிறது.

இதுவே, நம்மைக் குறித்துக் கர்த்தர் கொண்டிருக்கும் இறுதியான இலக்கு ஆகும். ஏவாளை, எவ்வாறு தேவன் படைத்தார் என்று வேதம் கூறுகிறது? ஆதாமின் விலாவிலிருந்து ஒரு சிறு விலா எலும்பை எடுத்து அதிலிருந்து ஏவாளை உருவாக்கினார் என்று நாம் வாசிக்கின்றோம். அப்பொழுது ஏவாளை ஆதாமின் சாயலுக்கும், ரூபத்திற்கும், சுபாவத்திற்கும் ஒத்ததாகவே உண்டாக்கினார் என்றும் பார்க்கிறோம். அவர்கள் இருவரையும் அந்நாளில் நாம் கண்டிருப்போமானால் அவர்களை நாம் அண்ணனும், தங்கையும் என்று சொல்லக்கூடிய முறையில் அவர்கள் இருவரும் ஒரே சாயலாகத் தோற்றமளித்திருப்பர். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் இருவரும் தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்டிருந்தார்கள்.

ஆகிலும், ஆதாமின் விலாவிலிருந்து தேவன் எடுத்த எலும்பிற்கும், அதிலிருந்து அவர் தோற்றுவித்த அவ

னுடைய மனைவியாகிய ஏவாளுக்கும் ஏதாவது ஒப்புவமை இருந்திருக்கக்கூடுமா? அந்த எலும்பை அப்படியே ஆதாமிடம் தேவன் காண்பித்தார் என்று யூகித்துப் பார்த்தால் அது எவ்வாறிருந்திருக்கும்! இந்த முற்றுப் பெறாத, வெறும் எலும்பை எவ்வாறு ஆதாம் பார்த்திருப்பான்? அந்த எலும்புத் துண்டுடன் ஆதாம் எவ்விதமேனும் ஐக்கியம் கொண்டிருக்க முடியுமா? ஆனால், தேவனோ இதிலிருந்து ஏவாளை உருவாக்கி, தம்முடைய சுவாசத்தை ஊதி, அதை ஆதாமுக்கு உற்றதுணையாக, ஒரு மனுஷியாக, மாற்றியமைத்தார். இப்பொழுது ஆதாம் உறவும், ஐக்கியமும், தொடர்பும் கொள்ளத்தக்க ஏவாளாக அவள் மாற்றப்பட்டாள்! அவ்விதமாகவே நீர் யாராயிருந்தாலும் சரி, நீர் மறுபடியும் பிறவாவிட்டால் அந்த ஓர் உலர்ந்த எலும்பைப் போலவே குறைவுகளும், குற்றங்களும், பெலவீனங்களும் நிறைந்த நிலைமையில், தெய்வீக சுபாவத்திற்கு முற்றிலுமாய் அந்நியராகக் காணப்படுவீர்; இந்த எலும்பையும்விட கேவலமான ஒரு நிலைமையில் இருப்பீர்: ஏனென்றால், ஆதாமையோ இன்னும் பாவம் தொடவில்லை; ஆனால், நீரோ, பாவத்தால் கெட்டு அவலட்சணமான நிலைமையை அடைந்திருக்கிறீர். நம்முடைய பாவத்தால் கெட்டு தீட்டுப்பட்டுப்போன நிலையில் ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்ட அந்த எலும்புத் துண்டைப் போன்றும், அல்லது அதற்குக் குறைவான நிலையிலும் இருக்கிறோம். அப்படி இருந்தபோதிலும் நம்மைப் பற்றி தேவன் கொண்டுள்ள மேலான நோக்கம் என்னவென்றால் நாம் அவருக்கொப்பாக மாறவேண்டுமென்பது தான். தம்முடைய குமாரனின் சாயலுக்கொப்பாக நம்மை மறுரூபப்படுத்த அவர் சித்தங் கொண்டிருக்கிறார்; ஆவலுடையவராயுமிருக்கிறார்; அதைச் செய்ய அவரால் கூடும். 1 கொரிந்தியர் 13:12லும், 1 யோவான் 3 : 2லும் தேவன் நமக்கு அளிக்கும் உறுதிமொழியின்படியே நாம் அவரைப் போல் ஆவோம். இவ்வுலகில் இருக்கும்போது இப்பெருண்மையை— இந்த தெய்வீக நோக்கத்தை— நாம் அறிந்து கொள்வது கடினம்தான். என்றாலும், மெய்யாகவே இது

நிறைவேறப்போகிற நிகழ்ச்சியாயிருக்கிறது. "மணவாளன் மணவாட்டியின்மீது மகிழ்கிறதுபோல, நான் உன்மேல் மகிழ்வேன்" என்று தேவன் நம்மைப் பார்த்துக் கூறுகின்றார்.

"மணவாட்டி" என்னும் சொல் இருவருக்கிடையே ஏற்படும் மிக நெருங்கிய ஐக்கியத்தையும், தொடர்பையும், இனபாந்தத்தையும் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. ஈருடல் ஓருயிர் போன்றிருக்கிறது. ஏனென்றால் கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலுள்ள உறவு, தகப்பனுக்கும், மகனுக்குமோ, அல்லது தாய் மகளிடமோ, அல்லது சகோதரர் சகோதரிகளிடையோ காணப்படுவதில்லை. அது ஒப்புவமை இல்லாத இனபாந்தமாக இருக்கின்றது. அவர்களிருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். தேவன் மனிதரோடு கொள்ளும் உறவும் இத்தகையதான ஆழமான, அறிவுக்கெட்டாத, அத்தியந்த உறவாக இருக்கின்றபடியால் அது தூதர்களும் பெற்றுக் கொள்ள முடியாத அனுபவமாக இருக்கிறது. ஏனென்றால், மனிதரிடம் தேவன் காண்பித்ததற்கு ஒப்பான தெய்வீக அன்பை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை; பெற்றுக் கொள்ளவும் முடியாது. அதுவே மீட்பின் அதிசயமான இரகசியமாகும்.

இதற்குச் சான்றாக, நல்ல தோற்றமுடைய, பண்பாடு நிறைந்த செல்வந்தனான வாலிபன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் அழகிலும், அறிவிலும், பண்பாட்டிலும் தன்னைவிட மிகக்குறைந்த ஒரு பெண்ணை மணம் செய்கிறான் என்றும் வைத்துக் கொள்வோம். இவ்விவாகத்துக்கான ஒரே காரணம் அவர்களிடையே ஏற்பட்ட காதல்தான். வேறெந்த நிர்ப்பந்தமும் அவனுக்குண்டாகாமல் இருந்தும் அவளைக் கலியாணம் செய்வதற்கான ஒரே காரணம் அவர்களிடையேயுள்ள காதல் உறவு மட்டுந்தான். அவள் ஒருவேளை கரியைப்போன்று கறுப்பாகவும், அழகே முற்றிலுமில்லாமல் அவ்வூரிலேயே அவலட்சணமான பெண்ணாகவும் இருக்கலாம். ஆனால், வேறு எவருக்கும் கொடுக்கக

கூடாத ஒன்றை மனமுவந்து அவளுக்காகக் கொடுக்கிறான்: ஏனெனில், அவர்களுடைய மணம், உள்ளான தூய்மையான அன்பையும், அந்நியோந்நியத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

அதுபோன்று, தூதர்களும் பெற்றுக்கொள்ள முடியாததும், பாராட்ட முடியாததுமான தெய்வீக அன்பை நமக்குத் தேவன் கொடுக்க முடியும். தேவ தூதர்களுக்குத் தேவன் ஞானத்தைக் கொடுக்கலாம்; அவர்களுக்கு அவர் அதிகாரத்தையும் வல்லமையையும் வழங்கலாம். பரலோகத்தில் பல பணிகளைப் புரியுமாறு பொறுப்புகள் அளிக்கலாம். ஆனால், தம்முடைய ஆழமான, நித்தியமான மீட்பின் அன்பை அவர்கள்மீது காண்பிக்க முடியாது. இதைக் கூறும்போது மிகுந்த பயபக்தியுடன் வேத வசனத்தின் ஆதாரத்தில் தைரியமாகவே அறிவிக்கிறோம். ஏனென்றால், இனிவரும் உலகம் தூதர்களால் ஆட்சி செய்யப்படுவதற்கு அல்ல என்றும் அதற்குப் பதிலாக இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலேமீட்கப்பட்ட மானிடர்வசமே தேவன்ஒப்புவிக்கப்போகிறாரென்றும் வேதம் விளம்புகின்றது. எபிரெயர் 2 : 5-8 இலிருந்து உலகமானது தூதர்களுக்குக் கீழ்படுத்தப்படாமல் மனிதர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் என்று அறிகிறோம்.

தம்முடைய சரீரத்தை நொறுக்கப்படும்படி ஒப்புக்கொடுக்கக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வற்புறுத்தியது எது? அதற்கு விடை யோவான் 3 : 16இல் இருக்கிறது. ''தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனையடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' தேவ அன்பானது, தம்மோடு சதாகாலமும் அந்நியோந்நியமான ஐக்கியத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் சிநேகிதர்களைத் தேடிக்கொண்டிருந்தது. அந்த அன்பே கல்வாரி சிலுவையின்மீது ஊற்றப்பட்டபோது வெளிப்பட்டது. நீங்களும் மறு பிறப்-

படையும்போது தேவன் அதே அன்பை உங்கள்மீதும் விளங்கச் செய்து உங்கள்மேல் மனமகிழ்ச்சியாயிருக்கிறார். எவ்வாறு ஏவாள் ஆதாமுக்குத் துணையாகவும், கூட்டாளியாகவும், அவனுடைய உள்ளான நாட்டங்களையும், விருப்பங்களையும் திருப்தி செய்யவும் கொடுக்கப்பட்டாளோ, அவ்வாறே நீரும் கர்த்தருக்குத் தேவை. ஆதாமுடன் சேர்ந்து இயற்கை வனப்பையும், மிருக ஜீவராசிகளையும் கண்டு களிக்கும் சந்தோஷத்தில் பங்கு கொள்வதற்கு என்று எப்படி ஏவாள் கொடுக்கப்பட்டாளோ, அவ்வாறே மீட்கப்பட்ட நீவிரும், அவருடைய சரீரமாகிய சபையாக, ஆயத்தப்படுத்தப்பட்ட மணவாட்டியாக, அவருடைய அன்பையும், சந்தோஷத்தையும் பெற்று ஆனந்தித்து அவருடைய இருதயத்தைத் திருப்தி செய்ய அவரண்டை செல்ல வேண்டும்.

''நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்'' (வெளி. 19 : 7).

இதுகாறும் நாம் தியானித்து வந்த அதே அன்புடனே தேவன் இப்பொழுது உம்மை அழைக்கிறார். எனவேதான் வெளிப்படுத்தின விசேஷத்தில் 21ஆம் அதிகாரத்தில் சபையைத் தன் மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டிக்கு ஒப்பனையாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த மணவாட்டி சபை தேவனுடைய ஞானத்தையும், அன்பையும், சந்தோஷத்தையும் நிறைவான அளவில் பெற்றுக்கொள்வதுடன் ஆண்டவருடைய அந்தரங்கமான, இருதயத்தில் உள்ள இரகசியங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயத்தம் பண்ணப்படுகிறது.

மணவாழ்வின் தொடக்கத்தில் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் முழுதுமாக அறிந்துகொள்வதில்லை என்பது உண்மைதான். மனைவி தன் புருஷனிடம் அனேக

காரியங்களைத் தெரிவித்தாலும், சிலவற்றைத் தெரிவிப்ப தற்குத் தயங்குகிறாள். அநேக மாதங்கள் அல்லது ஆண்டு கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டபின்னரே அறிவிக்கக்கூடும். அவர்கள் இருவருமாகத் தெய்வீகப் பிரமாணங்களையும், ஒழுங்கையும் அறிந்து அவற்றிற்குக் கீழ்ப்படியும்போது அவர்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும், அன்பும் பெருகுவதால், தன் மனத்தில் உள்ள எல்லாவற்றை யும் தன் கணவனிடம் கூறுவதற்குத் தயங்கமாட்டாள்.

நாமும் நமது ஆண்டவரிடம் நம் உள்ளத்தைத் திறந்து எல்லாவற்றையும் தெரிவிக்கவும், அவரும் நம்மிடம் எல்லா வற்றையும் கூறிவிடவும்கூடிய நாள், இதோ, மிகச் சமீபமா யிருக்கிறது. கணவர் தம் வருமானத்தை யெல்லாம் தங்கள் மனைவியரிடம் கொடுத்துவிட்டால் அது நிறைவான, மெய் யான அன்பிற்கு அடையாளம் எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால், நீர் மோட்சத்திற்குச் செல்லும்போது எவ்வித வற் புறுத்தலுமின்றி, உம்மோடு எல்லாவற்றையும் ஆண்ட வர் அன்போடு பகிர்ந்து கொள்வார். எனினும், நித்திய காலமாக நீர் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருப்பதில் மகிழ்ச்சியடைவீர்.

நீர் உமது ஆண்டவருக்கு உரியவராக இருக்க வேண்டு மென்று ஆண்டவர் விரும்புவதின் இரகசியத்தை இப்பொழுது நீர் புரிந்துகொண்டீரா? ஏன் உம்மை அவர் அழைக்கின்றார், உம்மில் அன்பு பாராட்டுகின்றார், உம்மை அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்பது இப்பொழுது விளங்குகின்றதா? அவர் உம்மிடத்தில் பரலோக சந்தோ ஷத்தினால் மகிழ்ந்து களிகூர வேண்டுமென்றே இதைச் செய் கிறார். அதன் பலனாக நீர் பிதாவோடும், குமாரனோடும், பரிசுத்த ஆவியானவரோடும் மிக நெருங்கிய ஐக்கியத்தில் இணைக்கப்படவும், தேவதூதர்கள் ஒருவராலும் ஒருக்காலும் விளங்கிக்கொள்ள முடியாத அந்நியோந்நியத்தில் பிணைக்கப் பட்டு இந்த மனோகரமான அன்பினால், நித்திய மகிழ்ச்சி

யினால், தெய்விக உறவினால், அநாதி சிநேகத்தால் நீர் சதாகாலமும் கவர்ந்துகொள்ளப்பட வேண்டும் என்பது தேவனுடைய குறிக்கோளாயிருக்கிறது.

தேவனுடைய மகிமையும் அழகும் உம்மில் காணப்படவும், அதற்கென்று உமக்குத் தொண்டு புரியவும் பரலோக சக்திகள் யாவும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கும்போது, இந்த அன்பை ஏன் நீர் நிராகரிக்க வேண்டும்? தேவன் தம் முடைய அன்பை யெல்லாம் உம்மில் ஊற்றி விடவும், அவருடைய மகிழ்ச்சியையெல்லாம் உமதுபால் தெரிவிக்கவும் ஆர்வமுடையவராயிருக்கிறார். இந்தக் குறிக்கோளுடன் அவரை நீர் ஏற்றுக்கொண்டு, கர்த்தரின் ஆனந்த மகிழ்ச்சியால் இடைகட்டப்பட்டு அவருடைய பெலத்தைப் பெற்று, அவர் உம்மில் பாடி மகிழ்ந்திருக்க அவரை ஏற்றுக்கொள்ள மாட்டீரா? அந்த மேன்மையான பாக்கியத்திற்கு அவர் உம்மைக் கொண்டுவந்து சேர்க்க இடம் தர மாட்டீரா?

7

நிலையாயுள்ள மகிழ்ச்சி

"உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு"
(சங்கீதம் 16:11).

தேவன் தம்மிலுள்ள நிறைவான, நிரந்தரமான நிலைமைக்கு நம்மைக் கொண்டு வந்து சேர்த்தபின், நம்மில் எவ்வாறு தேவன் மகிழ்ச்சி கொள்ளத் தொடங்குகிறார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவரோடுள்ள நம்முடைய சம்பந்தமானது, மணவாளனுக்காக ஆயத்தம் செய்யப்படும் மணவாட்டியோடுள்ள ஐக்கியத்திற்கு ஒத்ததாக இருக்கின்றது. ஆனால், எப்போது நாம் இந்த நெருங்கின ஐக்கியத்திற்கு ஆயத்தப்படுவோம் எனில், கர்த்தருடைய மீட்பின் வேலை நம்மில் விரிவாக்கப்பட்டு, ஆழமாக்கப்பட்டு, நிறைவு பெறுகின்ற வேளையில்தான், நமது ஆண்டவரோடுள்ள நமது ஐக்கியம் எவ்வளவு நெருங்கினது என்று நாம் கண்டு கொள்கிறோம். பூரணமடைந்தபின் நாம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று அவர் வாஞ்சையுள்ளவராக இருக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்து கொள்வது நமக்கு எளிதாகி, அவருடைய மணவாட்டியாகும் நெருங்கின பரஸ்பர ஐக்கியத்திற்கு நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்கிறோம்.

நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் இருக்கும்போது, அதாவது கர்த்தராகிய இயேசுவண்டை வருவதற்கு முன்பாக, அவரிடம் இருந்து நாம் என்னத்தைப் பெற்றுக் கொள்வோம் என்ற ஒரே சிந்தையுடன் இருந்தோம். நாம்

பாவத்துடன் போராடிக்கொண்டு, அதன் வல்லமையினின்று விடுவிக்கப்படுவதற்கு முயற்சி செய்த காலத்தில் நாம் எவ்வளவு குறைவுள்ளவர்கள், பெலவீனர் என்பதை உணர்ந்து அவருடைய உதவிக்காகக் கெஞ்சி மன்றாடினோம். நாம் பல சோதனைகளிலும், இக்கட்டுகளிலும், பிரச்சனைகளிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும்பொழுது, நமக்கு விடுதலை அளிக்குமாறு அவரிடம் முறையிட்டோம். அல்லது நமக்கு மிகவும் நெருங்கினவர்கள் துன்பம் விளைவித்தபோதோ அல்லது ஏமாற்றம் அளிக்கும்வகையில் நடந்து கொண்டபோதோ, அல்லது நமக்கு அருமையானவர்களை மரணம் நம்மைவிட்டு பறித்துக் கொண்டபோதோ நமக்கு ஆறுதல் அளிக்குமாறு ஆண்டவரிடம் சென்றோம். அவரால் ஆறுதலும் பெற்றோம். இவை எல்லாவற்றிலுமிருந்து இரட்சிப்பைப்பற்றி நாம் அறிந்து கொண்டதெல்லாம், அவரிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ளலாம் என்பதே.

நமக்கும் ஆண்டவருக்கும் உள்ள ஐக்கியமானது, எப்பொதுமே ஒருதலைப்பட்சமாக அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டேயிருப்பது அல்ல. அவரும் நம்மிடத்தில் இருந்து சிலவற்றை வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலுடனும், நம்பிக்கையுடனும் எதிர்பார்க்கிறார். இந்த உண்மையை ஏசாயா 62ஆம் அதிகாரத்தில் இருந்து ஆராய்வோமாக.

''சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும், அதன் நீதி பிரகாசத்தைப்போலவும், அதன் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன்" (ஏசாயா 62;1).

இவ்வாக்கியத்தில் தேவன் கூறுவதை நாம் உற்று கவனிக்கவேண்டும். அவர் நம்மிடமிருந்து ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஆவலுடன் நித்திய காலமாய் காத்திருப்பதாகவும், அதை அடையும் மட்டும் இளைப்பாறுமலும் இருப்பார் என்றும் பார்க்கிறோம். அவருடைய எண்ணங்

களை நாம் பூரணமாக அறிந்து கொள்வதற்காக, அவர் இதே கருத்தை, அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து அடிக்கடி நம்முடன் பேச வேண்டியதிருக்கிறது. நம்முடைய இருதயங்கள் பக்குவமடைந்து, அவருடைய விருப்பங்களையும், எண்ணங்களையும் நாம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகும்வரைக்கும், பல ஆண்டுகள் சென்றாலும், அவர் அவ்வளவு காலமும் பொறுமையுடன் நம்மைக் கட்டுப்படுத்தி, பயிற்றுவித்து, காத்து நிற்கிறார். ஆதலால் விசுவாசத்தின் மூலமாக நம்மைக்குறித்து தேவனுக்கிருக்கும் வாஞ்சைகளையும், விருப்பங்களையும் அறிந்து கொள்ள முற்படுவோமாக.

நம்முடைய இருளின் மத்தியில் தேவனுடைய மகா பெரிதான ஒளி பிரகாசித்து, அவரைக் குறித்த வெளிப்படுதலின் வெளிச்சத்திற்குள் நம்மைக் கொண்டு வருகிறது; இப்பொழுது நம்மில் உள்ள அவருடைய நீதி, பரிசுத்தம், மீட்பு எரிந்து பிரகாசிக்கிற ஒளியாக இருந்து, நம்மில் உள்ள எல்லாவித இருளையும், முற்றிலுமாக அகற்றி விடுகிறது;

இவ்வுலகின் எந்தக் கண்டத்திலும், தேசத்திலும் அல்லது எந்த சமுதாயத்திலும், எந்தக் காலத்திலும் காணப்படாத நீதியையும், பரிசுத்தத்தையும் நம்மில் வெளிப்படுத்திக் காண்பிக்க தேவன் விரும்புகிறார். பல நூற்றாண்டுகளாகவே உலகின் நாலாப் பகுதிகளிலும் வாழும் மக்களில் பலரும், சில உயர்ந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பதின் மூலம் நீதியுள்ளவர்களாகக் காணப்பட முயற்சித்திருக்கின்றனர்; இவ்வித முயற்சி ஒவ்வொரு காலத்திலும், சமுதாயத்திலும், மதத்திலும் காணப்படுகின்றது. கடுமையான முயற்சி செய்தும், தாங்களாகவே தங்களுக்கென்று நியமித்துக் கொண்ட உயர்ந்த லட்சியங்களை அடைய முடியாதென்று ஒத்துக் கொண்டதுடன், தங்கள் பிரயாசங்களெல்லாம் வீணும் விருதாவுமென்று கைவிட்டு விட்டனர். ஆனால் சர்வ வல்லமையும், மகா பரிசுத்தமும், ஒப்பற்ற நீதியுமுள்ள

தேவன் மாசற்ற தமது சொந்த நீதியையே நமக்கு இலவசமாகக் கொடுக்கின்றார். இதையே யூதா தமது நிருபத்தில், "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்" என (வச : 24) கூறுகின்றார்.

தேவன் பரலோகத்திலுள்ள தமது தூதர்கள் முன்னிலையில் நம்மைக் குற்றமற்றவர்களாக, மாசற்றவர்களாக, கறைதிரை ஏதுமற்றவர்களாக நிறுத்த விரும்புகின்றார்.

ஆனால், நாம் நமது சுயநீதியைச் சார்ந்திருப்போமாகில் இதை அவர் ஒருக்காலும் செய்ய முடியாது. மனுஷ நீதிகள் எல்லாம் அழுக்கான கந்தைகளே அன்றி வேறல்ல. மனிதன் தன் சொந்த முயற்சியால் ஈட்டியதெல்லாம் குறுகிய காலத்திற்கு நலமாகத் தோன்றலாம். ஆனால் தேவனுடைய தீர்க்கமான, ஆராயும் பார்வைக்குமுன் நிலைத்திருக்க முடியாது. ஆனால், நீ தேவநீதியைப் பெற்றிருப்பாயானால், உன்னிலுள்ள தேவநீதியின் தன்மையானது, தூதர்களாலும் வேறு யாராலும் குற்றம் எதுவும் கண்டுபிடிக்க முடியாத தூய்மையான நீதியாய் இருக்கும். தேவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பதோடல்லாமல், நீங்கள் பாவத்தில் விழுந்து விடாதபடி உங்களைக் காக்கவும், மாசற்றவர்களாய் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களைக் கொண்டுபோய் நிறுத்துவதற்கும் வாக்குக் கொடுக்கிறார். அந்த நாளிலே எந்த சிருஷ்டியும் உங்களில் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்க இயலாது. இவ்வளவு மேன்மையுள்ள நீதியையே தேவன் உங்களுக்கு அளிக்கிறார். நீர் அந்த நீதியைப் பெற்றுக் கொண்டதுண்டா? அல்லது வேறு எதையாவது சார்ந்திருக்கின்றீரா? மனிதரிடமுள்ள நற்பண்புகளும், தூய்மையும் அதற்கு இணையாகுமா என்பதை நீங்களே யோசித்துச் சொல்லுங்கள். உங்கள் நண்பர்களும், அயலகத்தாரும் நீங்கள் நல்லவர் என்றும், அன்பு, இரக்கம்,

ஈகை, தூய்மை உள்ளவர் என்றும் உங்களை மெச்சிக் கொள்ளலாம். ஆகிலும், மனித தீர்ப்பின்படியும், மனித அளவுகோலின்படியும், இவையெல்லாம் உண்மையல்ல என்பது உமக்கே நன்கு தெரியும். அப்படியிருக்க, பரலோகத் தராசிலே உம்மை நிறுத்துப்பார்த்தால் உமது நிலை என்னவாயிருக்கும்? எனவே, தேவன் அருளும் நீதிக்கு முன்பாக உம்முடைய சொந்த நீதியை எவ்வாறு ஒப்பிடத் துணியலாம்?

''ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்'' (ஏசாயா 62 : 2).

தேவன் தம்முடைய நிலை எது என்பதை I. கொரிந்தியர் 1 : 31இல் வெளிப்படுத்துகிறார்: "இயேசு கிறிஸ்துவே தேவனால் நமக்கு... நீதியுமானார்''. அவர்தாமே நமது நீதியாயிருக்கிறார். இவ்வுலகில் உள்ள எவரும் எந்தக் குறையும் அவரில் காண முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த மக்கள் அனைவரிலும் இயேசு கிறிஸ்து ஒருவரே எந்தப் பாவமுமில்லாதவராக, பாவத்தையே அறியாதவராக இருந்தவர். பரலோகத்தில்கூட அவர் எல்லா தூதகோடிகளுக்கும், கேரூபீன் சேராபீன்களுக்கும் மேலானவராக இருக்கின்றார். அவர் கல்வாரி சிலுவையில் செய்து முடித்த வேலையின் பலனை அவருடைய நீதியையே நாம் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்ற காரணத்தால், வேறெதிலும் குற்றம் கண்டு பிடிக்கும் கண்கள் எவ்வளவு கண்ணோட்டமாயிருப்பினும், இங்கு எந்தக் குற்றத்தையும் காணமுடிவதில்லை. இந்த நீதி எப்பொழுதும் எவ்விடத்திலும் வெளிப்படுத்தப்பட்டுப் பறைசாற்றப்படல் வேண்டும். ''ஜாதிகள் உன் நீதியைக் காண்பார்கள்''. பரலோக சக்திகள் அனைத்துமே அவருடைய நீதியையே உங்களில் காண்பார்கள் எனில், மனிதரில் எவர் உங்களில் எந்தக் குற்றத்தைக் காணமுடியும்? ''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்

பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே'' *(கலாத்தியர் 3 : 27).*

''துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணுமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத்-தரித்துக் கொள்ளுங்கள்'' *(ரோமர் 13 : 14).*

நம்முடைய எலும்புகளையும், தசைகளையும் எவ்வாறு தோல் மூடிக்கொண்டிருக்கின்றதோ, அதுபோன்றே நாம் நம்முடைய வல்லமையுள்ள இரட்சகரை ஏற்றுக்கொள்ளும் போது, அவருடைய நீதியே நம்மைச் சூழ்ந்து மூடிக்கொள்கிறது. தேவனுடைய அதிகாரத்தின் வல்லமையில் அதையே உங்களுக்குக் கொடுக்கிறோம். தேவனுடைய வார்த்தை அதையே அறிவிக்கின்றது; எங்கள் வாழ்க்கையிலும் அதை அனுபவப் பூர்வமாக நாங்கள் கண்டிருக்கிறோம். அதையே நீங்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களுக்கும் அதை அளிக்கின்றோம். அத்துடன் ஏசாயா 62 : 2 இல் உள்ள வாக்குறுதியையும் அளிக்கிறோம்: ''ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்''.

மனித வரலாற்றின் கடந்த பல நூற்றாண்டுகளில் இந்த உலகமானது பலவகையான அரசர்களைக் கண்டிருக்கிறது. அவர்களில் பலசாலிகள், ஞானவான்கள், பெரிய சாம்ராஜ்யங்களைக் கட்டிக் காத்தவர்கள், தங்கள் மக்களுக்கு சுபிட்சத்தையும், சமாதானத்தையும் கொண்டு வந்தவர்கள் உண்டு. அவர்கள் வந்தார்கள்; வாழ்ந்தார்கள்; மறைந்தார்கள். காலப்போக்கில் அவர்களது பெயர்கள் மறக்கப்பட்டுப் போயின; அல்லது வரலாற்று ஏடுகளில் மட்டும் காணப்படுகின்றன. அன்னாரது வீரதீரச் செயல்கள், சாதனைகள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போயின. இவ்வுலக அரசர்கள் தங்கள் சர்வ மகிமையிலும், மாட்சிமையிலும் பெருமிதம் கொண்ட நிலைமையைவிட மேலான மகிமையை உம்மிலே

காணப்போகின்றார்கள். கிறிஸ்து இயேசுவில் இருக்கும் உம்முடைய மகிமையை அவர்கள் காண்கின்ற வேளையில் வெட்கத்தால் தங்கள் முகத்தை மூடிக்கொண்டு, அவர்கள் இவ்வுலகில் இருக்கும்பொழுது அடைந்த மேன்மை எல்லாம் ஒன்றுமில்லை என்றும், அதைவிட மிகச்சிறப்பான மகிமையை நீர் அடைந்திருக்கிறீர் என்ற உண்மையை ஒத்துக்கொள் வார்கள்.

நமது ஆண்டவருடைய மகிமையையும், அழகையும் பெற்றுக்கொண்டு, அவற்றைப் பிரதிபலிக்கும் பாத்திரங் களாக இருக்கவேண்டுமென்று நமது கர்த்தர் ஆசிக்கின்றார். இப்பொழுதே நம்மைத் தம்முடைய திவ்விய சுபாவத்திற்குப் பங்காளிகள் ஆக்கி, நம்முடைய சரீரங்களைப் பரிசுத்த ஆவி யின் ஆலயங்களாக்கி, நாம் அவருடைய பரிசுத்தத்தின் மகத் துவத்தை வெளிப்படுத்துகிறவர்களாகவும், அவருடைய ஐசுவரியத்திற்குச் சுதந்திரவாளிகளாகவும், அவருடைய ஜீவனால் நிரம்பி வழிந்தோடும் பாத்திரங்களாகவும் நம்மை மாற்றுகின்றார். தம்முடைய பரம அழைப்பிற்கு நம்மைப் பாத்திரவான்களாக்குகின்றார். நம்முடைய இம்மைக்குரிய விசுவாச வாழ்க்கையில் நாம் உண்மையோடும் உத்தமத் தோடும் இருப்பதனால், பரிசுத்த ஆவியானவர் நம்மில் தொடங்கிய வேலையைப் பூரணமாக்கும்போது, பரலோகத் தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மேன்மையையும், மகிமையையும் நாம் காண்போம். (லூக்கா 19 : 17) அநேக பரிசுத்தவான்களின் அனுபவம் இதுவாகவே இருக் கின்றது; தாங்கள் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து, கர்த்தரிடம் செல்லும் வேளையில், அவர்கள் பரலோகத்தின் மாட்சிமை யையும், மகிழ்ச்சியையும் ஓரளவு காண்பதினால், அவர்களது இனத்தாரும் நண்பர்களும் அழுது புலம்பும்போது, பிரியுந் தருவாயில் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு ஆறுதல் சொன்ன துண்டு.

'எனக்காக நீங்கள் வருந்தி அழ வேண்டாம்; பரலோகம் திறந்திருப்பதையும், என்னை அழைத்துச் செல்லத் தூதர்கள்

காத்திருப்பதையும் நான் காண்கிறேன்' என்று அறிக்கையிட்டதுண்டு. மற்றவர்களால் அதைத் தரிசிக்க முடியாவிட்டாலும், நித்திய வீட்டுக்குக் கர்த்தரால் அழைக்கப்படுகிறவர்களுக்குப் பரலோகக் காட்சிகளைக் காணும் புதிய கண்கள் கொடுக்கப்பட்டிருப்பதால், களிகூருகின்றனர். தங்களது மரணத்திற்கு முன்பாக மெய்யாகவே தூதர்கள் பாடுவதைக் கேட்ட பல பரிசுத்தவான்கள் உண்டு. வேறு சிலர் பிரகாசிக்கும் முகங்களோடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரிசிப்பதாகவும், கொடிய சரீர வேதனையில் இருந்தாலும், அவர்கள் ஏற்கனவே தங்கள் கர்த்தருடைய சந்தோஷத்தில் பிரவேசித்துவிட்டதாகக் கூறியுள்ளனர்.

தேவ வசனத்தின்படி, கொஞ்சத்தில் உண்மையாய் இருக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இவ்வளவு மகத்துவமான வரவேற்புக் கொடுக்கப்படும் என்று நாம் அறிகிறோம். இவ்வுலகில் வாழ்ந்த எந்தப் பெரிய அரசனுக்கும் அல்லது தலைவனுக்கும் இம் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுவதுண்டா? ஆனால் உமக்கோ இந்த ஒப்பற்ற வரவேற்பு காத்திருக்கின்றது. 'ராஜாக்கள் உன் மகிமையைக் காண்பார்கள்'. நான் கூறுவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் சற்று பொறுத்திருந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீவிர் இவ்வுலகை நீத்தவுடனே நான் கூறுவதெல்லாம் மெய்யா பொய்யா என்பதை நீரே அறிந்துகொள்வீர்! நீர் எளியவராக, எழுத்தறிவில்லாதவராக இருக்கலாம்; வேதாகமத்தைப் பற்றியோ, அதன் உபதேசங்களைப்பற்றியோ அதிகம் அறியாதவராய் இருக்கலாம்; ஆகிலும் உமதாண்டவருக்கு உண்மையுள்ளவராக இருப்பீரென்றால் இந்தப் பரலோக வரவேற்பு உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது.

''கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்'' *(ஏசாயா 62 : 2).*

புதிய நாமம்! கர்த்தர் உமக்குப் புதிய பெயரைச் சூட்டுவார்! இவ்வுலகில் வாழும் மக்கள் பற்பல பட்டங்களையும் பெயர்களையும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். "பகதூர், கான் பகதூர், மேன்மை தங்கிய, மாண்புமிகு" என்பன போன்ற பல பட்டங்களைப் பெற்று, அவற்றிற்குரிய மதிப்பையும் கனத்தையும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். ஆனால் நம்முடைய தேவனோ, தாமே தெரிந்து எடுக்கும் ஒரு புதிய நாமத்தை உமக்குக் கொடுக்கப்போவதாகக் கூறுகின்றார்.

நம்முடைய இயல்பையும், தன்மையையும் விவரிக்கும் நோக்கத்துடன் நம்மைச் சூழ உள்ளவர்கள் நமக்குப் பட்டப் பெயர் இடுவது வழக்கம். 'சோம்பேறி, பெருமையுள்ளவன், பேராசைக்காரன், அறிவிலி, அவலட்சணமானவன்' என்று பலவாறு நம்மை அழைக்கலாம். பெரும்பாலும் இந்தப் பட்டப்பெயர்கள் நம்முடைய பெலவீனங்களைச் சுட்டிக் காட்டுவதாக அமைகின்றன. அவை நமது வாழ்நாளெல்லாம் நம்மைப் பின் தொடர்கின்றன. இப்பூவுலகில் மனிதர் உமக்கு என்ன இழிவான பெயரிட்டு அழைத்தபோதிலும், நீர் மனந்திரும்பினபோது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தம் உமது பழைய காலத்தை மூடி மறைத்து விடுகிறது. உமக்கு நேரிட்ட எல்லா நிந்தையையும் நீக்கிவிட்டு, உமக்கு முற்றிலும் புதியதொரு நாமத்தை அவர் கொடுக்கிறார். அது உமக்கும் உமது ஆண்டவருக்கும் மட்டுமேயன்றி வேறொருவருக்குந் தெரியாது. எல்லாம் புதிதாக்கப்படுகின்ற வேளையிலே அதுவும் வெளிப்படும். "இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வெளி 21 : 5). அந்தநாளில் எல்லாம் முற்றிலும் புதிதாக இருக்கும்; உமது தோற்றமும் தன்மையும்கூட புதிதாக இருக்கும்.

அநேகருக்குப் புதிய பொருள்கள் என்றால் மிகுந்த விருப்பம் உண்டு. நான் சிறுவனாக இருந்தபொழுது என் தகப்பனார் விலையுயர்ந்த ஒரு ஜோடி வெளிநாட்டுக் காலணிகள்

வாங்கித் தந்தார். நான் அவற்றை மிகப் பத்திரமாகப் பாதுகாத்துப் பயன்படுத்தி வந்தேன். வழியில் ஏதாவது முள்ளைப் பார்த்தால் உடனே என் காலணிகளைக் கழற்றி விடுவேன். அவை புதுமை மங்காமல் எப்போதும் பளபளப்பாக இருக்குமாறு பார்த்துக்கொள்வேன். நீர் ஒருவேளை புதிய உடைகளையோ, புதிய வீடுகளையோ அல்லது புதிய நண்பர்களையோ விரும்பலாம்; ஆனால், அவைகள் எல்லாம் சீக்கிரத்தில் பழமை ஆகிவிடும். நண்பர்களும் பழமையாகி விடுகின்றனர்.

அவ்வாறே, கணவன் மனைவியரும் ஒருவருக்கொருவர் பழமையடைந்து தம் அன்பில் வாடி விடுகின்றனர். நீங்களும் வயோதிபராகிக் கொண்டிருக்கிறீர்கள்! பாவக் கறையின் விளைவினால் உலகில் யாதொன்றும் புதிதாகவே இருப்பதில்லை; எல்லாமே பழமையடைந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், புதிய ஜீவனாகிய நித்திய ஜீவனை நீர் பெற்றுக் கொள்ளும்போது. தேவன் உம்மை எப்பொழுதும் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறார். இந்த நித்தியஜீவனில் மூப்பு என்பதே கிடையாது. பரலோகத்தில் பழமையாகி விட்ட எந்தப் பொருளையும் துருவித்துருவித் தேடிப் பார்த்தாலும் காணக் கிடைக்காது. அங்குள்ள ஒவ்வொன்றும் அழகும், பிரகாசமும் உள்ளதாகவும், புதுமை மங்காததாகவுமே இருக்கும். அனுதினமும் ஏதாவதொன்றைப் புதிதாகப் பெற்றுக்கொள்ளவோ அல்லது கற்றுக்கொள்ளவோ செய்வீர்.

'நான் உனக்குப் புது நாமத்தைக் கொடுப்பேன்' என்று ஆண்டவர் கூறுவதின் பொருள் என்னவென்றால், நம்மைச் சதாகாலமாகப் புதுமையுடன் வைத்திருக்கப் போகிறார் என்பதே. இது, நமக்காக அவர் தீட்டியுள்ள திட்டத்தைக் குறிப்பிடுவதாகும். மனுஷீக முயற்சிகளால் உம்மை ஒருக்காலும் இளமையாகக் காத்துக்கொள்ள முடி

யாது. முடி நரைத்த முதியோர் சிலர் தங்கள் நரை மயிருக்குச் சாயம் தீட்டிக்கொள்கின்றனர்; ஏனெனில் அவர்கள் இளமையுடன் காணப்பட விரும்புகின்றனர். அவ்வாறே தாங்கள் சீக்கிரம் மூப்படையக் கூடாதென்று சில பெற்றோர் அநேகம் பிள்ளைகளைப் பெறுவதற்கு விரும்புவதில்லை. ஆனால், இவ்வித மனப்பான்மை கொலைபாதகச் செயலுக்கு ஒப்பாகும். இவை தவிர, வேறெந்த மனித முயற்சியும் நீர் இளமையோடிருப்பதற்கு உதவாது. நம்முடைய சரீரங்கள் முதுமை அடையத்தான் வேண்டும்; அதுதான் இயற்கை நியதி. ஆனால் நித்தியத்திலோ, என்றென்றும் எல்லாமுமே புதுமையோடும் இளமையோடும் இருக்கும்.

"நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாய் இருப்பாய்" (ஏசாயா 62 : 3).

கிரீடம், ராஜமுடி என்ற இரு பொருள்களும் கூட்டாகவே காணப்படுகின்றன. பொதுவாக எல்லா அரசர்களுக்கும் இவ்விரண்டும் உண்டு. அவர்கள் மன்னராகும் வேளையிலே முடிசூட்டு விழாவிற்கென்று விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட கிரீடம் உண்டு. இது தவிர தலைமுறை தலைமுறையாக அந்த அரச பரம்பரையினர் அணிந்து வரும் ராஜ முடியும் ஒன்றுண்டு. இவ்விரண்டையும்தான் இப்பதங்கள் குறிப்பிடுகின்றன, "நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாய் இருப்பாய்" என்று.

முதலாவதாக, தேவனுடைய மகத்துவத்தைக் காண்பிப்பதற்காக அவருடைய கையில் ஓர் அலங்காரமான கிரீடம் ஆகின்றீர். இதன்மூலம் உமது உள்ளானமனுஷனில் எத்துணை மகத்தான மாறுதலை உண்டாக்கியிருக்கிறார் என்று வெளிப்படுகிறது. ஒருவேளை நீர் பயங்கரமான குடிகாரனாக இருந்திருக்கலாம்; ஆகிலும் வல்லமையுள்ள இரட்சகர் உம்மைக் கழுவி சுத்திகரித்துப் புதிதாக்கி இருக்கின்றார்.

அல்லது ஒருவேளை நீர் மிகவும் வெட்கக்கேடான, துன்மார்க்கம் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபட்டிருந்திருக்கலாம்; ஆனால், இப்பொழுது தேவனுடைய கிருபையினால் நீர் மீட்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுப் புதிய சிருஷ்டியாக இருக்கின்றீர்.

இரண்டாவதாக, ஆதிமுதல் உண்டான பரிசுத்தவான்களின் மகிமையில் நாம் பங்குகொள்கிறோம். நாம் பரலோகத்திற்குச் செல்லும்போது, அங்கே பழைய ஏற்பாட்டு பக்தர்கள் ஆகிய ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், யோசேப்பு, மோசே, ஏசாயா, தானியேல் முதலானோரைச் சந்திப்போம். எல்லாக் காலத்திலும் வாழ்ந்த விசுவாசிகளையும் கண்டு மகிழ்வோம். நாம் முன்பு ஒருபோதும் சந்தித்திராவிட்டாலும், அங்கு ஒருவரையொருவர் அறிமுகம் செய்துகொள்ளாமலேயே அடையாளம் கண்டுகொள்வோம். எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த தேவபுத்திரர்களோடு நம்மையும் முற்றிலும் ஒருங்கிணைத்துவிடுவதுதான் நித்திய ஜீவனின் இயல்பாகும். அப்பொழுது நாம் பரலோகத்தின் நிறைவை எல்லாம் குறைவின்றிப் பெற்று, செல்வச் செருக்குடன் வாழுவோம். அங்கு அந்நியரைப் போல ஜீவிக்காமல், எல்லோரும் ஒரே பரிசுத்த குடும்பமாக, பேதம் ஏதுமின்றி, மிகுந்த அந்நியோந்நியத்திலும், ஐக்கியத்திலும் ஆனந்திப்போம். நாம் ஏகோபித்துத் தேவனுடைய வல்லமையையும், மகிமையையும், கிருபையையும் சர்வ சிருஷ்டிக்கும் வெளிப்படுத்துவோம். இவ்விதமாக நாம் கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், நம் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாக இருப்போம்.

''நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்: உன் தேசம் வாழ்க்கைப்படும்'' (*ஏசாயா 62 : 4*).

வஸ்தி ராணி தன் மேன்மையினின்று தள்ளப்பட்ட பிறகு, அவளுடைய இடத்திற்குத் தகுதியான பெண்ணைத் தெரிந்துகொள்ளும்படி, எஸ்தரும், வேறு பல கன்னியரும் அகாஸ்வேரு அரசன் முன்பாகக் கொண்டுவரப்பட்டார்கள் என்று எஸ்தரின் புஸ்தகத்தில் வாசிக்கிறோமல்லவா? எஸ் தரைத் தவிர மற்றவர்களெல்லாரும் அரசனின் கவனத்தைக் கவர்ந்துகொள்ளவேண்டுமென்று, தங்களது அழகை மேலும் சிறப்பிக்கும் நோக்கத்துடன், வெள்ளைப் போளத்தை யும், வேறு பல சுகந்த வர்க்கங்களையும் பயன்படுத்தினர் என்றும் பார்க்கிறோம். ஆகிலும், அகாஸ்வேருவை அவர்களில் யாரும் பிரியப்படுத்த முடியவில்லை. ஆனால், எஸ்தர் மட்டும் அரசனிடம் கொண்டு வரப்பட்டபோது, உடனடியாக அவள் அரசனின் நன் மதிப்பைப் பெற்றாள். ''ராஜா சகல பெண் களைப் பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்பு வைத்தான்; சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமூகத்தில் அதிக தயையும் பட்சமும்கிடைத்தன;ஆகையால் அவன் ராஜ கிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ராணியாக்கினான்.'' எஸ்தரிடத்தி லிருந்த ஏதோ ஒன்று அரசனுக்கு மிகுந்த மனரம்மியத்தைத் தந்தது. அது வெறும் உடல் அழகு மட்டுமல்ல, உள்ளத்தழகும் சேர்ந்தது. இத்தகைய ஆவிக்குரிய அழகு—அதாவது, உள்ளான மனுஷனிலுள்ள கிறிஸ்வின் தன்மையே, ''கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக் கிறார்'' என்ற சொற்றொடரின் பொருள் விளக்கமாகும்.

''நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும்'' இருப்பாய். இந்தப் பூவுலகில் உம்முடைய வீட்டில் ஏதாவது திருப்தியற்ற நிலைமையோ, மகிழ்ச்சிக்குறைவான காரியமோ காணப்படுமானால், உமது இல்லத்தைவிடச் சிறப்பான ஒன்றில் நாட்டமுடையவராய்த் தேடித்திரிகிறீர். ஆனால் நீங்கள் மோட்சத்திற்குப் போகும் பொழுது கடந்தகால தோல்விகள், ஏமாற்றங்கள், அதிருப்திகள் யாவும் மறக்கப் பட்டுப் போகும். எல்லாக் குறைவையும் தேவன் மூடிப்

போடுவார். ஒருவேளை அநேக ஆண்டுகளாக உம்மிடம் அன்பு செலுத்தவோ, அக்கறை காண்பிக்கவோ ஒருவருமில்லாதிருக்கலாம். உமது கண்ணீரைத் துடைக்க, ஆறுதலளிக்க, துன்பத்தில் உதவ எவருமே முன் வராமலிருக்கலாம். ஆனால் மோட்சத்திலோ, உமது தேவன் உம்மை நேசித்து, உம்மில் மகிழ்ந்து களிகூருவார். உமது கண்ணீரைத் துடைத்து, உமது துன்பத்தை எல்லாம் இன்பமாக மாற்றி: "என் செல்லப் பிள்ளையே, பூமியில் உனக்கு மிக நெருங்கினவரும் உன்னை நேசிக்காத அளவில் நான் உன்னில் அன்பாயிருக்கிறேன்" என்று கூறுவார். கர்த்தர் உன்னில் பிரியமாயிருப்பார்: அவர் உன்னிடத்தில் அன்பாயிருப்பதுபோல, நீயும் அவரிடத்தில் அன்புகூருவாய்.

இவ்வுலகில் சில சமயங்களில் நாம் சிலரிடத்தில் அன்பாயிருந்தாலும், அவர்கள் அவ்வன்பைத் திருப்பியளிப்பதில்லை; அல்லது, ஒருவர் நம்மீது அன்பு செலுத்தியும் நாம் அவர்பால் திருப்பி அன்பு காண்பிப்பதில்லை. ஆனால், மோட்சத்திலோ இவ்விதமான ஒருதலைப்பட்சமான அன்பு இல்லவே இல்லை. அங்கு நாம் ஒருவரையொருவர் சிநேகிப்போம். கர்த்தர் தாமே நம்மேல் பிரியமாயிருந்து நம்மை நேசித்தும், நம்மால் நேசிக்கப்பட்டும் இருப்பார். இவ்வுலகில் உமக்கு உற்ற, யதார்த்தமான நண்பர் ஒருவருமில்லாமல் இருக்கலாம்; ஆனால், இக் குறைவையெல்லாம் தேவன் நிறைவாக்குவார். நீர் பட்ட கஷ்ட நஷ்டத்திற்கெல்லாம் முழுவதுமாக ஈடுசெய்வார். அவருடைய இனிய நிழலின் ஒதுக்கில் நித்தியகாலமாக ஆனந்தமனுபவிப்பீர்.

நீர் கைவிடப்படுவீர் என்று அச்சமுற வேண்டியதில்லை; அவர் தேவன் — எனவே எல்லோர்மீதும் ஒரேவிதமான அன்பு பாராட்ட அவருக்கு இயலும். மேலும், மீட்கப்பட்ட யாவருமாகச் சேர்ந்து, கர்த்தருக்கு ஒரே மனையாட்டியாக இருக்கிறபடியால், அவரன்பு யாவர்மீதும் ஒன்றுபோலிருக்கும். இவ்வுலகில் இரண்டு மனைவிகளையுடையவர்கள் என்ன

பாடுபடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் போட்டியும், பொறாமையும், சண்டையுமாக இருக்கும். ஒருத்தி தன் சக்களத்தியைக் குறித்து அதிகப் பொறாமையுள்ளவளாயிருக்கிறாள். ஆனால், மோட்சத்தில் இவ்வகையான பொறாமை ஒன்றுங் கிடையாது. அங்கே ஒரே சரீரமும், ஒரே சபையும், ஒரே மனைவியும், ஒரே மணவாளனும், ஒரே பரலோக வாழ்வும், இரட்சகரின் ஒரே அன்பும் உண்டு. இந்த இனிமையையும் அன்பையும் உங்கள் இரட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் செய்வீர்கள்.

“உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்” *(செப்பனியா 3 : 17)*.

நாம் அனுபவிக்க வேண்டுமென்று தேவன் விரும்பும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பது என்ன பாக்கியமான நிலைமை! ஆனால், நமது மீட்பு இத்துடன் முடிவடைந்துவிடுவதில்லை; இதற்கு அதிகமாகவும் உண்டு. ஓர் அடைக்கலான் குருவி தன் கூட்டிற்குள் சென்று இளைப்பாறுவதுபோல, நமது தேவனாகிய கர்த்தர் நம்மில் தங்கி, வாசஞ்செய்ய ஓர் இடத்தைத் தேடுகிறார். நம்மையன்றி பரலோகத்திலும் அடைய முடியாத இளைப்பாறுதலை, நம் உள்ளத்தில் அவர் தங்குவதன்மூலம் பெறுகிறார். இந்த உலகத்திலே, அவருக்கு ஆனந்தத்தையும், இளைப்பாறுதலையும், நிறைவையும் அளிக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டமாகிய ஒரு சபையை அவர் சேர்க்கிறார்.

கர்த்தருக்கு ஒரு ‘கூட்டை’ப்போல் இருக்கத்தக்கதாக நாம் அனைவரும்—குருவிகள் வைக்கோல்களைச் சேர்ப்பதைப்போல — சேர்க்கப்படுகிறோம். இந்த ஆனந்த மகிழ்ச்சியே உங்கள் பெலனாயிருக்கிறது. இந்த அன்பையும் அளவற்ற

மகிழ்ச்சியையுமே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அளிக்கிறோம்.

கர்த்தர்தாமே உம்மைச் சர்வாங்கம் கழுவி, முற்றுமாய் மன்னித்து, நித்தியத்திற்கென்று உம்மை நேசிக்கவும், அந்த அவரது அன்பில் 'இளைப்பாறவும்' செய்வார். தேவனுடைய இந்த அழைப்பை உதாசீனப்படுத்தாமலும், தள்ளிவிடாமலும் இருப்பீராக. உமக்காகக் கர்த்தராகிய கிறிஸ்து இயேசு உம்முடைய அருகிலிருந்து வேண்டுதல் செய்பவராக நிற்கிறார். ''என் மகனே, மகளே, உன் இருதயத்தை எனக்குத் தா; என் சந்தோஷம் உன் பெலனாகவும் என் ஜீவன் உன் ஜீவனாகவும் இருக்கும்,'' என்று கூறுகிறார். ஆமென்.

சகோ. பக்தசிங் அவர்களின் புத்தகங்கள்

(தமிழ்)

1. தாவீது எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டான் 1—25

2. திரும்பி வரும் தேவ மகிமை 1—50

3. இவ்வளவு பெரிதான இரட்சிப்பு 0—15

4. எனக்கு... எப்படிக் கிடைத்தது 0—25

5. அன்பர் கரங்களின் அற்புதச் செயல் 0—15